[illegible]

ஆனந்த போதினி

மார்ச், 1927

12

JL
ஊ211,N26AG
N27.1.12
169823




N27.1.12
169823

## விஷய அட்டவணை


1. ஆநந்த தரிசனம் ... 575
2. ஜப்பான் எப்படி உருமாறியது? ... 582
3. சென்ற மாதம் ... 585
4. ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள் ... 587
5. பிரபஞ்ச தரிசனம் ... 588
6. குழந்தைகள் பக்கம் ... 592
7. பெரியாரின் மொழிகள் ... 594
8. சிறுமணித்திரள் ... 596
9. நட்பு ... 598
10. பழமொழிக் குறிப்புகள் ... 600
11. விகடப் பிரதாபன் ... 604
12. பங்குனி யுத்திரம்
13. மதிப்புரை ... 61
14. சென்றுபோன நாட்கள் ... 613
15. கவிதாவிலாஸம் ... 615
16. மாதர் மனோரஞ்சிதம் ... 619
17. உடன்கட்டை யேறுதல் 623
18. தானே சிந்தித்து உணர்தல் ... 625
19. விநோதக் களஞ்சியம் ... 628
20. மூளையின் விருத்தி ... 630
21. ஆநந்த குணபோதினி பத்சாங்கம்
22. பத்திராசிரியரின் விந்ஞாபனம்


---

# ஆநந்த குணபோதினியின்

## வருஷ சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளி நாடுகளுக்கு ரூபாய் 1–4–0. தனிப் பத்திரிகை அணு 2.

ஒருவருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயிண்டு செய்வதற்குச் சௌகரியமாய் முதற் பத்திரிகையிலிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

## நமது நிருப நேயர்கட்கு

பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்று வியாசங்கள் வரைவோரும், புத்தக விளம்பதானம் செய்வோரும், அதன் சார்பான விவரங்கள் தெரிய ஆசிப்போரும், மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோரும் அடியில் கண்ட விலாஸத்தின்படி பத்திராசிரியருக்கே நேராக அனுப்ப வேண்டும். வியாசங்கள் அநுபவமும் புதுமையும் கலந்து பரிமளிப்பதாய் இருத்தல் வேண்டும்.

விலாசம் :— பத்திராசிரியர், "ஆநந்த குண போதினி" ஸ்ரீரங்கம்.

"ஆநந்த குண போதினி"க்குச் சந்தாதாரராதல், சந்தா அனுப்புதல், பத்திரிகையின் சார்பான விவரங்கள் விரும்புதல், விளம்பரம் செய்தல் முதலிய நிர்வாக விஷயங்கட்கு தி. இராஜகோபால முதலியார், "ஆநந்த குண போதினி" ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை, என்று எழுதிக் கொள்ள வேண்டும்.

---


## வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரைகள்

**100 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ.**

ஏஜெண்ட் :—

தி. இராஜகோபால முதலியார், 302, தங்கசாலைத் தெரு, மதரா

ஓம் பரப்பிரம்மணே நம :

# ஆநந்தகுணபோதினி

## ANANDA GUNA BODHINI

(THE LARGEST CIRCULATED HIGH CLASS TAMIL MONTHLY IN SOUTHERN INDIA)

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை

பத்திராசிரியர் :— திரிசிரபுரம் — எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு

**முதலாவது கமலம்**

**Vol—1.**

**April 1926—March 1927**

அக்ஷய வருஷ வால்யூம்.

...TRAR OF
6-APR 1927

சித்திரைமீ முதல் பங்குனிமீ வரையில்

[**630**-பக்கங்களுக்குமேல் கொண்டது]

"All our Knowledge is based upon Experience."—Vivekananda

"நம்முடைய ஸகல அறிவும் அநுபவத்தையே சார்ந்து நிற்கிறது."—
[விவேகாநந்தர்.

**T. இராஜகோபால் முதலியார்**

புரொப்ரைட்டர் "ஆநந்த குணபோதினி"

ஆபீஸ் :—302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

*1927*

*Copyright Registered*]

[காலிகோ பைண்டு ரூ. **1-6-0.**

பைண்டு செய்யாத தனித்தனி சஞ்சிகைகள் 12-க்கும் விலை ரூ. ஒன்றே.

# ஆநந்தகுணபோதினி

**இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் ஒரு நூதன உயர்தரத் தமிழ் மாதப் பத்திரிகை.**

"ஆநந்த குணபோதினி" எவ்வகைத் தொழிலுடையோர்க்கும் அதிக பலனைத் தரும். படிக்கப் படிக்க விஷயமறிவதன்றிப் பேரானந்தமும் வித்வத்வமும் பெருகும்.

"ஆநந்த குணபோதினி" ஸகலரும் அறியும்படி சுலப நடையில் எழுதப்படுகிறது. நமது நாட்டிற்கு நலமுண்டுபண்ணும் விஷயங்களையே கொண்டிருக்கும்.

"ஆநந்த குணபோதினி" ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், யாவர்க்கும் பிரியமான விஷயங்கள் உள்ளதாய் அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது.

"ஆநந்த குணபோதினி"யின் முதல் பக்கத்தில் "ஆநந்த தரிசனம்" என்ற தலைப்பின்கீழ் எப்போதும் தத்துவஞான விஷயங்களும், ஈசுவரபக்தியைப்பற்றிய விஷயங்களும் நிறைந்திருக்கும். இவை யாவும் ஸர்வமத ஸமரஸம். தேன்போல் இனித்து, பால் போல் ருசிக்கும்.

"ஆநந்த குணபோதினி"யின் மூன்றும் பக்கத்தில் உயர்தர ஆங்கில மாத ஸஞ்சிகைகளை யொப்பத் தலையங்கம் உப அங்கங்களும் தோன்றி தேச நன்மையை நாடிய விஷயங்களும், ஆராய்ச்சிகளும் ததும்பி நிற்கும்.

"ஆநந்த குணபோதினி"யில் தடவைதோறும் "பழமொழிக் குறிப்புகள்" என்ற தலைப்பின்கீழ் பல பழமொழிகளின் ஆழ்ந்த கருத்துகளையும் உலக ரகசியங்களையும் விவ...

"ஆநந்த குணபோதினி"யில் "பந்திராசாரம்" என்ற தலைப்பில் எல்லாப் பத்திரிகைகளிலும் முன்னை சாரமான விஷயங்கள் காணப்படும்.

"ஆநந்த குணபோதினி"யில் "பெண்கள் பக்கம்" எப்போதும் வெகு ஸ்வாரஸ்யமாய் இருக்கும்.

"ஆநந்த குணபோதினி"யில் "பிரபஞ்ச தரிசனம்" என்ற தலைப்பில் ஸர்வ தேச சம்பந்தமான ஆராய்ச்சிகளுடன் இந்தியாவையும் ஒப்பிட்டு அருமையான குறிப்புகள் எழுதப்படும்.

"ஆநந்த குணபோதினி"யில் ஒவ்வொரு தடவையும் "விகடப் பிரதாபன்" தோன்றுவான். மஹா விகடதூதன், விஜய விகடன் பத்திரிகைகளை யொப்ப விகடத் தலையங்கங்களும் ஹாஸ்யங்களும் தோன்றி சலித்துப்போன மனதையும் உல்லாஸப்படுத்திவிடும், எல்லாம் உலக அநுபவங்களே.

"ஆநந்த குணபோதினி"யில் பிரதி தடவையும் "சென்ற மாதம்" என்ற தலைப்பின் கீழ் மாதாந்த விசேஷங்களைக் குறித்து ரஸமான சிறு சிறு குறிப்புகள் வரையப்படும்.

"ஆநந்த குணபோதினி" பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்த தென்பதை பிறருடைய சிபாரிசின்றி ஒவ்வொருவரும் தங்களுடைய அநுபோகத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம்.

"ஆநந்த குண போதினி"யின் சொற்ப சந்தாவையும் உற்று நோக்குங்கள். வருஷ சந்தா ரூ. ஒன்றே.

"ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகைக்கு இணையாக வேறெந்த பத்திரிகையையும் சொல்ல முடியாது. உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரித்து ஆனந்த பரவசர்களாகும்படி வேண்டுகிறேன். இன்றே சேருங்கள். உடனே எழுதுங்கள்.

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ், 302, தங்கசாலைத் தெரு, மதறாஸ்.

164823
600 009

## ஆநந்த குண போதினி
## 'முதல் கமலத்தின்' விஷய அட்டவணை.

அடியிற்கண்ட இலக்கங்கள் பக்கங்களைக் காட்டுகின்றன.

| விஷயம் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அரசியல் ஞானம் | 289, 353. |
| அருட் செல்வம் | 324. |
| அஸ்ஸாம் காங்கிரஸ் | 464. |
| அறுந்த அவயவங்கள் மறுபடி வளர்தல் | 467. |
| **ஆ** | |
| ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள் | 587. |
| ஆநந்த குணபோதினி | 5. |
| ஆநந்த தரிசனம் | 1, 49, 105, 169, 209, 257, 305, 359, 411, 459, 515, 575. |
| **இ** | |
| இக்காலத்து வெளிவாழ்க்கையின் வேகம் | 54. |
| இந்தியாவில் உண்டான முதல் பஞ்சம் | 112. |
| இயந்திர தெய்வம் | 389, 424. |
| இஃதில்லாவிடிற் சிறப்பில்லையெனல் | 183. |
| **உ** | |
| உடன் கட்டை யேறுதல் | 623. |
| உதார குணத்தின் உன்னதம் | 364, 566. |
| உலகத்தில் வழங்கும் பான வகைகள் | 86. |
| **எ** | |
| எங்கே ஆநந்தம் காணப்படும்? | 569. |
| எமிலிஸோலா | 38. |

| விஷயம் | பக்கம் |
|---|---|
| **ஏ** | |
| ஏகாதசி மகத்துவம் | 438. |
| **ஒ** | |
| ஒரு விக்ஞாபனம் | 561. |
| **க** | |
| கணக்கு | 13. |
| கண்பார்வை | 43. |
| கண்ணாடி முகத்தைக் காண்பிக்குமா? | 297. |
| கவிதா விலாஸம் | |
| குலோத்துங்க சோழன் | 74. |
| மலையாண்டியப்பய நாயக்கர் | 75, |
| பழனிமலையாண்டவர் பதிகம் | 76. |
| மனோதியானம் | 135. |
| ஒரு பண்டிதரின் எச்சரிக்கை | 237 |
| கலைமகள் தோத்திரப் பஞ்சகம் | 281 |
| சிற்றுயிர்மேல் அன்பு பாராட்டல் | 233 |
| ஸ்ரீ ஹரிக்கண்ணி | 233, 382, 45 504, 61 |
| இதுவே போதுமெனல் | 38 |
| படிக்காசுத் தம்பிரான் | 45 |
| கணிகையின் கபட ஜாலம் | 50 |
| நல்லுலகம் | 54 |
| மதுரகவி | 61 |
| கல்கத்தா நகரத்தின் காட்சி | 1 |
| கல்வி கற்பிப்பதின் நுட்பம் | 2 |

விஷயம் பக்கம்

கா

கார்த்திகை தீப வரலாறு 378.
காலணுவுக்கு ஒரு பவுன் மோதிரம் 253.

கி

கிருஷ்ணவதாரம் 248.
கிரேட்பிரிட்டனின் வாக்குத்தத்தங்கள் 519.
கிறிஸ்துவர்களான ஹிந்துக்கள் 532.

கு

குதிப்பதற்குமுன் பார்த்துக்குதி 296.
குழந்தைகள் பக்கம்
எங்கள் வீட்டுக் குருவி 525.
தூரத்தில் இருந்தால் வாசனை 592.

கே

கேதாரி கௌரி விரதம் 315.

ச

சங்கராந்திப் பண்டிகை 466.
சமயோசிதச் சொற்கள் 298.
ஜப்பான் எப்படி உருமாறியது? 582.

சா

ஸாக்ரடிஸ் என்பவரின் உள்ளறிவு 226.

சி

சிதம்பர ஆருத்திரா தரிசனம் 430.
சில பதங்களின் குறிப்பு 570.
சிறுமணித்திரள் 16, 67, 150, 201, 302, 355, 404, 454, 596.
சிறுமியர்க்கான 100 போதனைகள் 543.
சிறுமையும் பெருமையும் 373.

ஸ்ரீ

ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் 420.

விஷயம் பக்கம்

செ

சென்ற மாதம் 41, 146, 288, 320, 384, 428, 470, 522, 585.
சென்றுபோன நாட்கள்
வி. நடராஜ ஐயர் 77, 131.
எம். வீரராகவாச்சாரியார் பி. ஏ. 295.
டி. வி. கிருஷ்ணதாஸ் 540
டி. வி. கோவிந்தசாமி பிள்ளை 613.

சொ

சொல் வறுமை 178.

த

தர்க்க விளக்கம்-இராம சீதா அன்னியோன்னியம் 79, 266, 339.

தா

தாயைப்போல் பிள்ளை 482.
தானே சிந்தித்து உணர்தல் 625.
தானே நூல் எழுதப்பழகும் வழி 9.

தீ

தீபாவளியில் கதர் அணிதல் 312.
தீபாவளியில் ஜீவகாருண்யம் 317.
தீபாவளி பண்டிகை 322.

தே

தேர்தலுக்குப் பிறகு 332.

ந

நட்பு 300, 369, 443, 501, 551, 598.
நவராத்திரி விரதம் 273.

நா

நாணயம் 490.
நாநாவிஷயக் குறிப்புகள் 45, 167, 304, 457, 514.
நான்கின் நகரத்துப் பீங்கான் கோபுரம் 305.

விஷயம் பக்கம்

ப

பங்குனி யுத்திரம் 609.
பணச்செருக்கும் பிறவிக்குணமும் 573
பண்டிதை விசாலாக்ஷி யம்மாள் 406.
பதினாயிரம் ரூபாய் கொள்ளை 36.
பத்திரிகா அபிப்பிராயங்கள் 94, 136, 291, 396.
பத்திரிகா சாரம் 44, 143, 255, 287, 319, 380, 475.
பழமொழிக் குறிப்புகள் 1-அன்பு: 23, 62, 123, 196, 228, 270, 344, 375, 435, 491, 534, 600,

பா

பாக்கியரதி 82.
பாலபோஷண மர்மங்கள் 549.

பி

பிரபஞ்ச தரிசனம் 19, 70, 117, 222, 278, 336, 386, 445, 495, 527, 588.
பிரார்த்தனை எதற்காக? 147.

பு

புஸ்தகம் ஹஸ்தபூஷணம் 358.

பூ

பூர்வ காலத்து அரசர்களின் போக்கு 564.

பெ

பெண்கள் பக்கம் (மாதர் மனோ ரஞ்சிதம்) 33, 89, 161, 191, 244, 274, 348, 402, 450, 477, 558, 619.
பெரியோரின் பெருமை கெடாது 18.
பெரியாரின் மொழிகள் 408, 433, 499, 547, 594.

விஷயம் பக்கம்

பே

பேபே செட்டியார் 139.

பொ

பொதுஜன சங்கத்தில் நமது உணர்ச்சிக் குறைவு 416.

போ

போகிபண்டிகை 419.

ம

மகா சிவராத்திரி விரதம் 539.
மநுவும் கட்டுப்பாடும் 220.
மதத்தைப்பற்றி இராஜப்பிரதிநிதி 221.
மதிப்புரை 286, 311, 423, 530, 612.
மந்திரவாதியால் ஏமாற்றம் 571.
மலையாளத்து மந்திரவாதம் 506.

மு

முதல் இரண்டு தலைமுறைகளின் தேசசேவை 175.

மூ

மூளையின் விருத்தி 630.

வ

வருங்காலத்திய இந்திய ஜனஸமூகம் 215.

வா

வாயுள்ள பிள்ளை 294.

வி

விகடப் பிரதாபன்
பரமசிவம் படியளக்கிற கொள்ளை 27.
எதிலே குறைச்சல், என்னத்திலே தாழ்த்தி 95.
ரயில்வே பிரயாணதமாஷ் 154.
ஆடிமாதத்து அழகு கதை 186..

| விஷயம் | பக்கம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|---|
| எந்தப் பிழைப்புதான் ஏற்றதுவோ? | 282. | ஷை II | 604. |
| தீபாவளியின் தர்பார் | 325. | விசேஷ அறிக்கை | 104. |
| சென்னப் பட்டினத்துச் சிறப்பு I | 399. | விநோதக் களஞ்சியம் | 39, 101, 206, 250, 292, 351, 407, 448, 511, 562, 628. |
| ஷை II | 439. | வில்லியம் ஷேக்ஸ்பியர் | 183. |
| மறைத்து மற்றென்று | 483. | வீ | |
| காலத்தின் ஓட்டத்திலே நாட்டம் I | 554. | வீட்டைப்பற்றிய கேள்விகள் | 22. |

## சித்திரப்படங்கள்

ராதையும் கிருஷ்ணனும் 209.

நான்கின் நகரத்துப் பீங்கான் கோபுரம் 305.

இந்துநாதனும் அங்கயற்கண்ணியும் 459.


**குறிப்பு :—இன்னும்** இதனுள் அநேக அநுபவக் குறிப்புகளும், உலக ரகசியங்களும், துண்டு துணுக்குகளும் நிறைந்துள்ளன. அவற்றை ஆங்காங்கு கண்டு வாசித்து இன்புறுக.


## மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் ம[illegible]

இது நவரசங்கள் பொருந்திய ஒரு செந்தமிழ் நாவல். இந்த நா[illegible] வாசிப்பவர்களுக்கு அருவெறுப்பையே உண்டாக்காத ஓர் நவீன நாவ[illegible] இதை எத்தனை தடவை படித்தாலும் திகட்டவே திகட்டாது. இது சிங் கார ரசமாயும், படிப்பவர் மனதை மிக்க உற்சாகத்தைக் கொடுக்கும் தன்மை யுள்ளது. இந்த நாவலில் கதாநாயகியாக வரும் மாணிக்கவல்லி என்னும் ஓர் அழகிய பெண்ணனவள் ஒரு நாடகசாலையில் சேர்ந்து பல நாடக விஷ[illegible] யங்களில், பிரக்யாதி பெற்றவளாயும், ஆடல், பாடல் முதலிய விஷயத்தில் நற்கியாதி பெற்றவளாயும், இம்மாதின் ஆடல், பாடல்களைக் கேட்க வரும் பிரபுக்களுக்கு மிக்க ஆநந்தத்தைத் தருவதும், அவளுடைய சௌந்தரியமும் நடைநொடி பாவனைக்கும் மெச்சி, அதனால், நாடகம் பார்க்கவரும் பிரபுக் கள், ஒருவர்க் கொருவர் தெரியாமல் இம்மாணிக்கவல்லியின்மீது காதல் கொள்வதும், அவளால் வெறுத்துத் தள்ளப்பட்ட ஒருவன் செய்யும் சூதும் கதாநாயகி மாணிக்கவல்லியின் விசனமும், அவளைக்காதலிக்கும் புருஷர் களின் தந்திரமும் இக்கதையைப் படிக்கப் படிக்க இனிமையைத் தரும். இக்கதையை வாசிக்கும் சகோதர சகோதரிகளுக்கும், ஒரு நாடகத்தையே நேரில் பார்த்ததைப்போல் தெரியவரும். விலை ரூபா 1 0 0

ஆநந்த குணபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 0—12—0

# ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி

பிரபஞ்ச அநுபவங்களும், இயற்கையின் உண்மை களும் உலக அதிசயங்களும், ஆழ்ந்த கற்பனைகளும், ஆநந்த ஊற்றுகளும் அடுக்கடுக்காகத் ததும்பிய விஸ்தார மான சரித்திரமாய் **20**-அத்தியாயங்களுடன் அமைத் துள்ள

## அற்புதமான இனிய தமிழ் நாவல்

ஹாப்டோன் படங்களுடன் ஜோலிப்பது.

"பிரஜாநுகூலன்" பத்திராதிபர் – ஸ்ரீமான்

**S. G.** இராமாநுஜலு நாயுடு அவர்கள் இயற்றியது.

இதன் விலை ரூபாய் ஒன்றே. உடனே எழுதுங்கள்.

தி. இராஜகோபால முதலியார்

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

நமது பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு பிரபவ வருஷத்திய சந்தாத் தொகையை இந்த சஞ்சிகை சேர்ந்ததும் மணியார்டர் மூலம் அனுப்பக் கோருகிறோம். இல்லாவிட்டால் அடுத்த கமலம் முதல் இதழ் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

போன மாசிமீ சஞ்சிகை 567-ம் பக்கத்தில் தெரிவித்திருக்கிறபடி எமக்கு இன்னும் யாம் கோரியபடி சந்தா நேயர்களின் உதவி கிடைக்கவில்லை. இதுவரையில் 100-பேரிடமிருந்துதான் பணம் வந்திருக்கிறது. ஆகையினால் இந்த பங்குனிமீ சஞ்சிகை கிடைத்ததும் (பங்குனிமீ 10உக்குள்) யாம் கோரியபடி 2000 சந்தாதாரரின் சந்தாப் பணம் (வருஷச் சந்தா ரூ. 2/.) எமக்கு வந்து சேர்ந்து விட்டால் “ஆநந்த குணபோதினி” 2-வது கமலத்திலிருந்து மாதமிருமுறை பிரசுரிக்கத் தடையேயில்லை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

ஏது?

நமது “ஆநந்த குணபோதினி”

‘பிரபவ’ நாம சம்வஸ்தர அற்புத சர்வ முகூர்த்தத் திருக்கணித பஞ்சாங்கம்!!!

84-பக்க விஷயங்கள் கொண்டது.
எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளது.
விலை அணா 3.

1 டஜன் ரூ. 1—2—0 அரை டஜன் ரூ. 0—9—0

வியாபாரிகளுக்கு மேற்கண்ட நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.
ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள் தேவை.

நமது ஆநந்த குணபோதினியின் இரண்டாவது ஆண்டு பிரபவஸம்வத்ஸரத்திய சந்தாத் தொகையை இம்மாத சஞ்சிகை கிடைத்ததும் (அதாவது பங்குனிமீ 10உக்குள்) மணியார்டர் மூலம் அனுப்பும் சந்தா நேயர்களுக்கெல்லாம் மேற்கண்ட எமது பஞ்சாங்கம் கிரயமில்லாமலும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும். பிறகு சந்தா நேயர்கள் எமது பேரில் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. கவனிக்கவும்!!!

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :— திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.”—திருக்குறள்.

கமலம் - 1. Vol. 1. | சென்னை: அக்ஷய ஸ்ரீ பங்குனி மீ 1உ 1927-ம் ஸ்ரீ மார்ச்சு மீ 14உ | இதழ் - 12. No. - 12.

## ஆநந்த தரிசனம்

*அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூதமைந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்றவீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்ப கைவிலேந்தி
இலங்கையிற் †பொருதா ரன்றே மறைகளுக் கிறுதியாவார்.

“கயிறு பாம்பாய்த் தோன்றுவது” மனுஷ்யனுடைய அக்ஞானத்தாலாகும். அங்ஙனம் உண்மையான கயிற்றில் காணப்பட்ட இன்மையான பாம்பினைப்போல் ஐம்பெரும்பூத சம்பந்தமான பிரபஞ்சத் தோற்றமானது எந்த மகா புருஷனைக் கண்டவுடனே அகலுமோ, அவனே கையிற் கோதண்டமென்னும் வில்லினை ஏந்தி இலங்கா நகரத்திற் போர் புரிந்தவன் ; இவன் தான் வேதங்களின் முடிவான உபநிடதங்களி னுச்சியி லென்றும் விளங்குவோன் : அப்படிப்பட்ட ஸ்ரீமந் நாராயணனுடைய சரண ‡யுகளங்களை அன்போடும் தியானம் செய்கின்றேன்.

---

*அலங்குதல் = அசைதல். † பொருதல் = போர் செய்தல்.

‡யுகளம் = இரண்டு. அதாவது பகவானின் இரு பாத பத்மங்களென்று இந்து பொருள்.

# ஆநந்த  தரிசனம்

"நூன்முறை யறிந்து சீலத்தொழுகு" மனு நூலிலே சொல்லப்பட்ட விதிகளின் முறைமை தெரிந்து நல்லொழுக்க வழியிலே நட என்றார் ஔவையார். சீலத்தோடு நடக்கப்பட்டவர்கள் யாவராயினும் முன்னோர் கூறியுள்ள நூல்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அல்லது பெரியோர் கேள்வியேனும் அவர்கள் பழக்கமேனும் தேடிக்கொள்ள வேண்டும். அஃதொன்றுமில்லாது சீலத்தோடொழுகப் புகுவதெனில் அது வாஸனையற்ற மலர்போலாம்.

***

"நீராழங் கண்டாலும் காணலாம், நெஞ்சாழங் காண முடியுமா?" கடத்தற்கரிய நீராற் சூழப்பட்ட ஏழு ஸமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டாலும் காணலாம்; மனிதர்களின் நெஞ்சாழத்தைக் காண யாராலாகும்? பல நாள் தவமிருந்து பெற்ற தாய் தந்தையர்களுக்கே தம் மக்களின் நெஞ்சம் இப்படிப்பட்டதென் றறிய முடியாதென்றால், ஒருவன் நெஞ்சை இன்னொருவன் அறிய எப்படி முடியும்? இப்பேயுலக பந்தத்தை யொழிக்குமாறு மகா தவசிகளெல்லாம் நாட்டைவிட்டு மனித ஸஞ்சாரமில்லாத காட்டையடைந்தும் தம் நெஞ்சின் பின்போக்கை யறியாமலும், அதை யடக்க முடியாமலும் நின்ற நிலைமை மாறித் தவத்திற்கு இழிவு தேடிக் கொள்ளுகின்றார்களெனில், பிறர் நெஞ்சின் குணாதிசயத்தை எப்படி யறியமுடியும்? இத்தகைய கொடிய நெஞ்சைப் பகவத்பக்தி யொன்றால் தான் வசப்படுத்தலாம்.

***

"நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" தன் மனதை யொளித்து அறியாமையா லுண்டாகிற யாதொரு வஞ்சனையுமில்லை. நல்லதென்றும் கெட்டதென்றும் நெஞ்சத்திற்கே தெரிந்திருந்தும் இவ்வுலக பாச மயக்கமானது மீண்டும் இருட் குகைக்கே புக வைக்கின்றது. கடைக்காரன் மறந்து அதிகமாகக் காலணா சேர்த்துத் தந்துவிடின் அதைத் திருப்பித்தருவதே ஒழுக்கமெனத் தம் மனத்தால் அறிந்திருந்தும் கைக்கு வந்த லாபம் அதுவென மகிழ்ந்து அக்காலணாவைத் தம்முடையதாகவே கொண்டு விடுகின்றனர். இதினின்றும் பின்னும் வஞ்சிக்கவே மனம் செல்லுகின்றது. அங்ஙனமின்றி அக்காலணா அதிகம் தந்ததாய்க் கூறித் திருப்பித் தந்திருப்பின், ஹா! இவனது மனம் எத்துணைப் பரிசுத்தப்பட்டு விடும்? எவ்வளவு நல்ல வழியில் அவன் சித்தம் இனி செல்லும்? பின் படிப்படியாய் அவன் தூய தன்மையில் உயர்ந்து தன் தீய மனத்தை யடக்கி நிர்மல ஹிருதயனாய் விடுகின்றான். ஒரு சிற்றணுவிலிருந்தே பெரிய ஞானமும் உதிக்கலாம். அப்பெரிய ஞானத்தை ஒரு சிறு விஷயத்தில் நடந்துகொண்ட தவறுதலே கெடுத்தும் விடலாம். எனவே, தம் நெஞ்சுக்கு ஒவ்வொருவரும் பரிசுத்தமுள்ளவராக வேண்டும். ஒருவர் வெளி முகத்திற் பரிசுத்தராகத் தோற்றலாம். ஆயினும் அவர் நெஞ்சு அவரைப் பரிசுத்த முள்ளவரென்று ஏற்றுக் கொண்டாலன்றி, அவர் உண்மையிற் பரிசுத்தராகார். பரிசுத்தமில்லாதார் பரமனின் அருளை ஒருபோதும் பெறார்.



"ஆசைவெட்க மறியாது" என்னும் பழமொழி நம்முடைய சொந்த மொழியல்ல. முன்னோர் மொழியேயாம். அளவுக்கடங்காச் செல்வமுடையவராயினும் ஆசையெனும் பேய் அவர்களை விட்டொழிந்தபாடில்லை. இது கேவலமான ஆசை. அதனை விட்டு உயர்நலம் புனைந்த ஆசையை யாராய்வோம். கணவி-கணவர் தம்முள் எழும் ஆசை ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுபடும் தன்மை போல்வதாம். அன்பால் இருவரின் ஹிருதயங்களும் ஒன்றுபடுத்தப் பட்டிருக்கையில் அங்கு வெட்கம் என்பது ஏது? தன் குழந்தை வரக்கண்டதும் அதனை ஆசையோடும் தூக்கி அன்னை முத்தமிடுகின்றாள். இங்கும் வெட்கம் ஏது? பகவத்பக்தியில் ஈடுபட்ட மனத்தினராய் பகவானின் நாமங்களைச் சொல்லிக்கொண்டு ஆநந்தத்தாற் பாடிக் குதிக்கின்றனர். இங்கும் வெட்கம் ஏது? ஆசையை உயர்ந்த பொருளில் அமைத்து அதனை உயர்வித்து விடுவோமாகில், அது வெகு துரிதத்தில் நமக்கு முக்தியின்பம் தரவல்லதான வித்தாய்விடும்.

***

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்." இவ்வுலகின் கண் இல்லறத்தோடு கூடி வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன் உலகத்தாரோடு சேர்ந்து நிற்பவனாயிருப்பினும், தேவருள் ஒருவராகவே மதிக்கப்படுவான். நன்மனப் பழக்கமென்பது பிறவியிலேயே அமைந்தது. அந்தப் பழக்கம் எனும் மலர் பெரியோர்களின் ஸகவாசம் என்பதனால் நறுமணம் கமழப்பெறுகின்றது. உத்தம புருஷனது இல்லறம் பகவத் சாயையுடன் கலந்து நிற்றலால், அது துறவிகளின் பரிசுத்தமான ஆசிரமங்களுக்கு ஒப்பாகவே விளங்கும். உட் பரிசுத்தமுள்ள இடத்தில் வெளிப் பரிசுத்தமும் நிழலைப்போல் பின் தொடரும். உள்ளும் வெளியும் ஒருமிக்க நிர்மலமாய்ப் பரிமளிக்குமிடத்தில் பகவானின் பரம கருணாவிலாஸம் தானே வலிய வந்து குடிபுகும். பின் அந்த இல்லத்துள் வசிப்போர் தேவராகக் கேட்பானேன்? இங்ஙனம் தேவசாயலை ஏற்பதற்கே இல்லறத்துள் வந்துற்றோமென ஒவ்வொருவரும் எண்ணி, அதற்கேற்ப நடக்க முயல்வாராயின் இவ்வுலகமே பரிசுத்த முள்ளதாய்விடும்.

***

"அண்ணாமலையா ரருளுள்ளாரை வண்ணா மாடன் வலியென் செய்யும்?" என்னுமாறு தெய்வகிருபை, அடக்கம், இன்சொல் முதலியன உடையாரை இப்பிரபஞ்சத்தின் எதிர்ப்புகள்—சோதனைகள் ஏதும் செய்யாவாம். ஏது நேரினும் புன்னகை பூத்து யாவும் பகவத் ஸங்கல்பம் எனக் கொண்டாரை எவர் எதிர்க்க முடியும்? தீயோன் ஒருவனுடன் விரோதப்படலாம். அதனால் விளையும் தீமையும் அப்பொழுதே நேரிடக் காண்பதனால் அதை அந்த நிமிஷமே அநுபவித்து ஒழித்தும் விடலாம். ஆனால், நல்லோரை எதிர்த்துக்கொண்ட இடத்திலோ, அன்னோர் பதிலுக்குப்பதில் எதிர்க்காராதலின், எதிர்த்தோர்க்கு அப்பொழுது வெற்றிபோற் காணப்படினும், பின்னுக்கு அதன் பொல்லாங்கு மாபெரியதாம். அந்நல்லோர் பொருட்டுப் பரந்தாமனே முன் தோன்றி, முன்பு எதிர்த்தோரைப் பின்னர் சிக்ஷிக்கின்றானாதலின், தெய்வகோபத்திற் குள்ளானவன் மீண்டும் மீளுதலும் கூடுமோ? முடிவில் அதோ கதியாய் ஸர்வ நாசமாய் அழிகின்றான். தன் முயற்சியால் வாழ்வதாக எண்ணாது, ஈச்வர நியமனத்தின்படி தன் வாணாளும் ஜீவியமும் நடைபெறுவதாய் அவ்வொரு தனிப் பரம்பொருளையே தன் துணையெனக்

கொண்டு அவரையே நம்பி நாட்கடலைக் கழிப்பவனை எதிர்ப்போரும், அவனுக்குத் துரோகம் கருதுவோரும், அந்த சமயம் அவர்கள் செம்மையாய் வாழ்வதுபோற் காணப்படினும், அந்தோ! பின் அவர்கள் அழிந்து நொந்து அலங்கோலம் காண்பது பகலுக்குப்பின் இரவு வருவதுபோல் நிச்சயமே. ஆதலின் பகவானையே தம் துணையெனக் கொண்ட பக்குவ உள்ளத்தினரை எதிர்த்துக்கொள்ளுதல் எக்காலத்துக்குங் கெடுதியேயாம்.

***

“ஆல் பழுத்தா லங்கே, அரசு பழுத்தா லிங்கே” என்றபடி பறவைகள் எந்த மரம் பழுத்துக் கனிகளைத் தருகிறதோ, அந்த மரத்தை யடைந்து அவைகட்கு இனிப்புள்ள பழங்களை நன்றாய் அருந்தி, பின் அம்மரத்திலுள்ள கனிகளானதும் அதை விட்டுக் கனிகளுள்ள வேறு மரங்களைத் தேடியடையும். இதனால் நாம் அறிவது யாதெனில், ஸகல ஜீவராசிகளுக்கும் எங்கே சுகங் கிடைக்கின்றதோ அங்கேயே கூடி யிருக்கும் விருப்பமு மிருக்கின்றது. அதைப்போன்றே கடந்த ஞானிகட்கும் எங்கே சுகங் கிடைக்கின்றதோ அங்கேயே சித்தமும் செல்லுகின்றது. அம்மேலோர் அடைய விரும்பும் சுகமோ அழியாப் பேரின்பமேயாம். அதன் முன்னிலையில் இவ்வுலக சுகம் உமிழ்ந்துவிட்ட எச்சில் போன்றும் அருவருத்துத் தோன்றுகின்றது.

***

“ஸர்வ ஜீவ தயாபரரான ஜகதீசனை” ஸதா பிரார்த்திக்கக் கடவோம். எந்த ஔஷதம் நம்முடைய சரீரத்திலுள்ள நோயைப் பரிகரிக்கும் தன்மையை யுடையதோ, அந்த ஔஷதத்தை யன்றோ நாம் உட்கொள்ளவேண்டும். அதுபோல் ஜனன மரண துக்கத்தினின்று நம்மை விடுவிக்கும் வன்மையையுடைய பகவந் நாமமே நமக்கு முக்கிய ஔஷதம். ஆதலின் நிஷ்களங்கமான ஹிருதயத்துடன் தயாநிதியான ஸர்வேச்வரனை எப்போதும் தியானிக்கக் கடவோம்.

***

“உண்டானபோது கோடானுகோடி உறவின் முறையார்” என்பதற் கிணங்க, எல்லா செல்வமும் இருக்குங் காலத்தில் மனைவி, மக்கள், தாய் தந்தை, இஷ்ட மித்திரர்கள் யாவரும் சுற்றிக்கொண்டு நிற்கின்றனர். இறக்கும்பொழுது இவர்கள் பின்னே வரமுடியுமோ? மாயை என்பது லௌகீக அபேக்ஷையால் விளைகிறது. உலக வஸ்துக்களைக் கோரும் மனம் உடனே ஈசுவரனிட மிருந்தும் விலகி விடுகிறது. மாயை பகவத் பிரீதியை நாசஞ் செய்கிறது. உலகத்தைப் பிரீதி செய்தால் மாயை இன்னும் அதிகமாய் அவனைச் சுற்றிக் கொள்கிறது. இம்மாயையினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ள உண்மையில் விரும்புவோனுக்கு அவனது மனமே பகவானைக் காண்பித்து உபகரிக்கும். வேஷ பூஷணங்களால் பகவான் பிரத்யக்ஷமாகார். மனதை ஒரு மாலையாகவும், தெய்வத் தியானமே அதற்கு உபயோகிக்கப்பட்ட நூலாகவும் எண்ணி பகவானுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும்.

***

“தியானமே ஞானத்தை விருத்தி செய்யும்.” ஈச்வரனைத் திரிகரண சுத்தத்துடன் தியானிப்பவர்களுக்குத் துக்கமில்லை. உற்று நோக்கின் எந்த வஸ்துவாலும் மனம் சாஸ்வத ஸுகம் அடைகிறதில்லை. அதற்குத் திருப்தியே கிடையாது. இதைத் தெளிவாய் உணர்ந்து கொண்டால் உ



வஸ்துக்களின் அற்பத்வம் சீக்கிரம் விளங்கும். கும்பல் கும்பலாய்க் கிடக்கும் நாணயங்களெல்லாம் கற்களாய்க் காணப்படும். நித்யாநந்த வஸ்துவைத் தேட ஆசை பொங்கி யெழும். ஆநந்தாமிருதத்தை அருந்த மனம் பாடுபடும். ஆத்மாநந்தத்தை யடைய ஆவல் பெருகும். வெளித் தோற்றங்களெல்லாம் வீண் பிரமை யென்று புலப்பட்டு விடும். பகவத் நாம பாராயணமே அழியாததென நினைக்க வைத்து அதிலேயே மனம் ஒன்றுபட்டுவிடும். இவ்வளவு நன்மையைச் செய்ய வல்ல பகவத் தியானத்தை நாம் கைக்கொண்டு சிரேஷ்ட பதவியை யடைவோமாக.

***

“ஞானமும் புகழு முண்டாம்” என்று கம்பர் பாடி யிருக்கிறார். ஞானமே பிரதானம். அது இல்லாவிட்டால் வியர்த்தமான லோக வியாபாரங்களில் தலையிட்டுக் கொண்டு மனுஷ்யன் ஸதா வியஸனத்தையே யடைய நேரும். ஸம்ஸாரமாகிய ஸாகரத்தில் ஞானம் என்னும் தெப்பக் கட்டை யிருக்கவேண்டும். ஆதலின் ஞானம் உண்டாகக் கூடிய நூல்களைப் படிப்ப தவசியம். நமது “ஆநந்த குண போதினி” அத்யந்த ஞான போதகம் செய்யவல்ல தென்பதை இந்தப் பன்னிரு மாதங்களாய் அதை ஆர்வத்துடன் பெற்று வரும் கண்ணிய சிரேஷ்டர்கள் நன்கறிந்திருப்பர். அழுக்கடைந்த கண்ணாடியில் பிரதி பிம்பம் தோன்றாது. ஆதலின் அவ்வழுக்கை நீக்கிக் கண்ணாடியைச் சுத்தம் செய்வது போல், அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்ட யதார்த்தத்தை “ஆநந்த குண போதினி” நன்றாய் எடுத்துக் காட்டிப் படிக்குந் தோறும் மனோ ஸாந்தியைக் கொடுத்து திவ்ய ஞானத்தை விருத்தி செய்கின்றது. எனவே, இனி வரும் இரண்டாவது வருஷத்திலும் நமது அன்பர்கள் அத்யந்த தயையோடும் அன்போடும் “ஆநந்த குண போதினி”யை ஆதரித்து ஸர்வ மங்களங்களையும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். அவ்வாறு செய்யின் “ஞானமும் புகழு முண்டாம்” என்பது நிச்சயம்.

***

“பகவத் பக்தியே பரம ஸாதனம்” பக்தி மார்க்கத்தில் பகவானிடமே பிரீதி வைக்க வேண்டுமென்று கூறி யிருக்கிறது. கோபித்துக் கொண்டாலும் பகவானையே கோபித்துக் கொள்ளவேண்டும். ஆசைப் பட்டாலும் பகவானிடமே ஆசை கொள்ளவேண்டும். ஸகலமான பிரீதிகளையும் அவரிடமே வைப்பதால் எல்லாவற்றிலும் வைராக்கிய முண்டாகும். ஒருவனுக்கு மூத்தாள், இளையாள் ஆகிய இரண்டு பேர்களிருந்து, மூத்தாளைத் திரஸ்கரித்தால், அவனுடைய ஸகல பிரீதிகளும் இளையாளிடமே சேரும். இதிற் சிறிதும் ஐயமில்லை. இப்படியே உலகம் கடவுள், ஆகிய இரண்டினுள் கடவுளிடமே விசுவாசம் பாராட்டினால் உலக சுகத்தில் வெறுப்பு உண்டாய்விடும். எதற்கும் வைராக்யம் அவசியமாகையால் பக்தி மார்க்கம் அதற்கேற்றதேயாம். ஒரே மனுஷ்யரிடம் பிரீதி அதிகரிக்குந் தோறும் இதர மனுஷ்யர்களிடமுள்ள விசுவாஸம் நாளுக்கு நாள் மலினமடைகிறது. இப்படியே சில நாட்கள் சென்றால் எல்லோரிடமும் அப்பிரீதி ஜனித்து ஒருவரிட மட்டும் அத்யந்த பிரேமை யுண்டாகும். இப்படியே பகவானிடம் ஸகல விசுவாஸங்களையும் வைப்பதால் மற்றப் பொருளில் வெறுப்புண்டாகி பகவத் தியானத்திலேயே மனம் ஊன்றிப் போகும்.

"பிரீதி யென்பது எத்தன்மைத்து?" தகப்பன் சந்தைக்குப் போய் ஒரு மாம்பழம் வாங்குகிறான். அதை யுண்ண அவனுக்கு மனம் வருகிறதில்லை. எப்படியாவது அதைத் தன் புத்திரனாகிய குழந்தைக்குக் கொடுக்க வேண்டுமென்று கொண்டு போகிறான். இதுதான் உண்மையான பிரீதிக்கு உதாரணம். இப்படிப்பட்ட பிரீதியைப் பகவான் பேரில் வைத்தால் நிச்சயமாய்ப் பலன் கிடைக்கும்.

***

"வேதம் என்ன சொல்கிறது?" வேதத்தில் பகவானிடம் எத்தகைய பிரீதி வைக்க வேண்டுமென்ற கேள்விக்கு பதிவிரதையான ஸ்திரீ ரத்னம் தன் பர்த்தாவிடம் கொள்ளும் பிரீதியைப் போல் வைக்கவேண்டுமென்று விடை கூறி யிருக்கிறது. உலகத்தில் ஸதிபதிகளுக்குள்ள பிரேமையே மிக்க மகாத்மியம் பொருந்தியது. ஆதலின் தெய்வத்தினிடம் அத்தனை பிரேமை பாராட்ட வேண்டுமென்று பக்தி யோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த யோகத்தை நமக்கு உபதேசித்தருளிய கீதாசாரியரான ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை நாம் உபாஸிக்கக் கடவோம்.

***

"நாடீர் நாடோறும் வாடாமலர் கொண்டு
பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே!"

என்ற ஆன்றோரின் அமிர்த மொழிக்கிணங்க நாம் பகவானைத் திரிகரண சுத்தியோடும் பின்வருமாறு பிரார்த்திக்கக் கடவோம்:—ஓ அருள் நிறைந்த கடவுளே! நினது பிரபாவ மகிமைகளைத் தொழுதேற்றுகின்றோம். யாவும் நினது அனுக்கிரகமே. யாங்கள் நின்னை ஸமீபித்துத் துதி செலுத்தும் நற்சமயத்தை எங்களுக்கு உதவுவதும் நீயே. நின்னை யணுகி நினது சாந்நித்திய வைபவத்தை யுணர அருள் புரிவாய். நாங்கள் எல்லோரும் துன்பத்தில் மூழ்கினும், இன்பத்தில் ஆழ்கினும், வறுமை உறினும், ஐச்வரியம் பெறினும், எச்சமயத்தும் விடாமுயற்சியோடு கூடி, உன்னால் விரும்பப்படாதனவற்றைத் தியஜித்து, நீ விரும்புவனவற்றையே செய்து வரும்படியான திடசித்தத்தைத் தந்தருள்வாய். நாங்கள் நாள்தோறும் அறிவில் தேர்ச்சி யடைந்து பூரணமாய் உன்னை யறியும் ஞானத்தைப் பெற்று, கடைசியில் உன் திருவடிகளைச் சேர்ந்து நித்தியாநந்தத்தை யடையத்தக்க பாத்திரவான்களாகும்படி கருணை மழை பொழிவாய். ஓ! பேரொளியே! பெரு நட்பே! எங்கும் நிறைகின்றபொருளே! எங்கள் இறைவனே! நீ எமது கண்களுக்குப் புலப்படுகின்ற யாவற்றிலும் வியாபித்து எமது உள்ளத்தும் குடிகொண்டனை. நினதருள் விலாஸ முகாரவிந்தம் எங்கும் ஒளிவீச, நின்கருணை ஹஸ்தங்கள் எவற்றையும் சூழ்கின்றன. நினது ஸர்வ வியாபக சித்விலாசத்தில் எமது ஆன்மாக்கள் லயமாகி, நின் தெய்வீகத்தையும் பரிசுத்தத்தையும் உணர்ந்திடவும், பிரதி துராசையும் உலக வாஞ்சையும் ஒழியும்வாறாக எமது உணர்வும்—கருத்தும் நின் பாதாரவிந்தங்களையே பற்றும்படிக்கும் உதவி செய்வாய். நினது ஸந்நிதியில் யாங்கள் அடையும் ஆனந்தம் க்ஷணமாத்திரை யுடையதாகாமல் எமது வாழ்நாள் முழுதையும் இனியதாக்கி என்றும் எம்மை நின் ரக்ஷணச் சாயையிலிருத்தி, முள் நிறைந்த உலக வழியில் எம்மைத் தீமை யணுகாது நடாத்துவாய். துக்கமும் துன்பமும் உற்றுழி எமக்கு உற்சாக மாவாய். இவ்வுலக



இருள் தன்னில் எமது ஒளியாய் நிற்பாய். இவ்வுலக மோகங்களினின்றும் சோதனைகளினின்றும் எம்மைக் காக்கும் கவசமும் நீயே. எமக்குள் பரஸ்பர நேயத்தையும் அன்பையும் வளர்த்தி, எமது வியவகாரங்களனைத்தையும் உசிதப்படுத்தி யாங்கள் நிஷ்களங்க சோதர வாஞ்சையை யடைய அருள்வாய். நின் திருவுள்ளத்திற் கிசைந்த காரியங்களைச் செய்வதில் யாங்கள் ஒருவரை யொருவர் நேசித்து உதவுவோமாக. நின்னை ஆச்ரயிப்பதிலேயே எமது வாழ்நாள் முற்றும் செலுத்திப் பரலோக நித்திய நிர்மல ஆநந்தங்களை யடைய முயல்வோமாக. அன்புள்ள பிதாவே! என்றும் எம்முடனிருந்து எமது பக்தி குன்றாது வளரும்படி கிருபை செய்வாயாக. நினது திருநாமாமிருதம் ஒவ்வொரு நாவும் தெவிட்டாது நுகர ஒவ்வோரகத்திலும் நீ குடிகொள்வாயாக. ஸர்வ சாம்பிராச்சிய நித்திய பிரபுத்துவம் நின்னுடையதாவதாக. யாவும் உன் அருள். ஓம் தத் ஸத்.

---

ஆரிய ஸமாஜத்தாருக்கு ஹிந்துக்களின் வேதமே ஆதாரம். காலஞ்சென்ற தயாநந்த ஸரஸ்வதி ஸ்வாமியே ஆசார்யர். வேதமானது எல்லா ஆரியர்கட்கும் பொதுவா யிருப்பதால் வேத சம்பந்தமான கொள்கைகளை யாரும் நிராகரியார்.

---

குணமே பிரதானம். பணம்-குணமாகிய இரண்டனுள் குணமே பிரதானம். ஒருவனிடமுள்ள நற்குணம் அவனுக்கு ஸர்வ க்ஷேமங்களையும் கூட்டி வைக்கும். பணம் இருக்கிறவன் பெரியவனாயினும் அவன் அதைச் செலவு செய்தாலன்றிப் பெருமையை யடையமுடியாது. குணமோ செலவழியாதது. அது நாள்தோறும் பெருகி வரும். பணம் செலவானால் அத்துடன் பெருந்தன்மை குன்றிப் போம். குணம் உபயோகப்படுந்தோறும் கீர்த்தி மிகும்; பெருந்தன்மை விருத்தி கொள்ளும்.

---

பறை யென்றால் ஒருவித வாத்தியம். பறையின் முழக்கத்தைச் செவி கொடுத்து இன்பமாய்க் கேட்போர் யார்? இவ்விதமே தூறு சொல்லுகிற துஷ்டர்களையும் உத்தமர்கள் மதியார். அவர்களின் வார்த்தைகளையும் கவனியார். இந்த விரதத்தை யெல்லோரும் அனுஸரிப்பாராயின் ஜகத்தில் பொறாமை, கோபம், அசூயை முதலிய துர்க்குணங்கள் இல்லாமற்போம்.

### வெளிப் பேச்சொன்று-உள்செய்கை வேறொன்று!

புருஷன் ஸ்திரீயை அற்ப குற்றத்திற்காகத் தடியாலும் நேர்ப்பட்ட மற்றேதனாலுமாவது அடித்து, அவள் கீழே விழுந்தால் மீண்டும் புரட்டிப் புரட்டி யுதைத்தல் சாதாரணமாய்ப் படித்த வகுப்பாரிடையிலும் நடக்கிறது. அந்த சமயம் படித்த படிப்பின் ஞானமெல்லாம் எங்கோ போய்விடுகிறது! இப்படியும் நடக்கிறதா-இல்லையா? 'கற்றதும் கேட்டதும் போக்கிலே போக' விடுவது சரியா?

# ஆநந்த குண போதினி

அக்ஷய௵ பங்குனி௴ 1௳

## ஜப்பான் எப்படி உருமாறியது?

---

வெகுகாலம் வரையில் ஜப்பான் என்று ஒரு தேசம் இருக்கிறதாகவே உலகத்தாருக்குத் தெரியாது. உலகத்தின் கிழக்கு மூலையில் எவ்விதமான கீர்த்தியும் பெயருமில்லாமல் மறைந்து கிடந்தது. சீனாவை மட்டும் ஐரோப்பியர் வியாபார ஸம்பந்தங்களால் அறிந்திருந்தார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஜாதியார் தங்களின் ஆட்சியை ஸ்தாபித்திருந்ததால் அதையும் ஐரோப்பியர் அறிந்திருந்தார்கள். சுமார் 80-அல்லது 90-வருடங்களுக்கு முன்புதான் அத்துடன் ஐரோப்பியர் வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர். ஜப்பானியர் அப்பொழுது ஒருவிதமான பலமுமில்லாமல். தாழ்ந்த நிலைமையில் இருந்தபடியால், அங்கு வியாபாரத்துக்கென்று வந்த ஐரோப்பியர் அவர்களை லக்ஷியம் செய்யவில்லை. இரண்டொரு முறை ஜப்பானியர் எதிர்த்தும் பயன்படவில்லை.

***

அக்காலத்தில் ஜப்பான் தேசமானது சக்ரவர்த்தியால் ஆளப்பட்டுவராமல், அவரது முக்கிய காரியஸ்தராகிய 'ஷோகூன்' என்று பட்டம்பெற்ற அதிகாரியொருவர் சக்ரவர்த்தியை ஒரு மூலையில் ஒதுக்கிவிட்டு ராஜாங்க அதிகாரம் எல்லாவற்றையும் செலுத்தி வந்தார். இந்த 'ஷோகூன்' அதிகாரி பல நூற்றாண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாய் இவ்விதமே அரசியல் செலுத்தி வந்தனர். இவரின் கீழ் சுமார் 300-சிற்றரசர்களிருந்தார்கள். ஒவ்வொரு சிற்றரசரும் சுவாதீனமாகச் சேனைகள் வைத்துக்கொண்டு தனியாய் அங்கங்கே ஆட்சிபுரிந்து வந்தார்கள். கட்சிப் பிரதிகட்சிகளும், ஒருவரைப் பார்த்து ஒருவர் அசூயைப்படுவதும், ஐக்கியமின்மையும், தன்னலம் பாராட்டித் தேச நன்மையைக் கெடுக்கிறதும்—இப்படிப்பட்ட நிலைமையில் தேசமிருந்தது. இந்தியாவானது 18-ம் நூற்றாண்டில் மொகலாய சக்ரவர்த்திகளின் ராஜ்யபரிபாலனம் முடிவுற்று தேசத்தைப் பரிபாலிக்கிறவர்கள் இல்லாமல் குழப்பமும் அநாயகமும் மேலிட்டிருந்ததுபோல ஜப்பானும் நாம் குறிப்பிடும் காலத்தில் அதே நிலைமையிற்கிடந்தது. இதை நோக்கிய அன்னிய தேசத்தாரின் வாயில் ஜலம் ஊறிக்கொண்டிருந்தது.

***

இதைக் கவனித்த ஜப்பானியர் இனி அஜாக்கிரதையாயிருத்தல் அபாயம் என்று உணர்ந்தனர். ஓகோ! இனி சும்மா இருக்



தால் தேசமே முழுகிப்போய்விடும்; ஜப்பான் இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோகும், எவ்விதமேனும் பெருமுயற்சி செய்து அன்னியரது மேம்பாடு தங்கள் தேசத்தில் நிலைத்து வருவதைத் தடுத்து சுவாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று துணிந்தனர். உடனே பழைய ஏற்பாடுகளை மாற்றி, ஐரோப்பியரது ஏற்பாடுகளை அவசியமானவரையிற் கைக்கொண்டு, அவர்களுக்கு என்னென்ன வழிகளால் பலம் உண்டாயிருக்கின்றதோ, அந்தந்த வழிகளைப் பின்பற்றித் தேசத்தின் ஸ்வாதீனத்தைக் காக்கவேண்டுமென்று ஒரே மூச்சாய்க் கிளம்பினார்கள்.

***

உடனே 'ஷோகூன்' தன்னுடைய அதிகாரம் வேண்டாமென்று அனைத்தையும் சக்ரவர்த்தியிடம் ஒப்புவித்து விட்டுக் கீழ்ப்படிந்தான். சிற்றரசர்கள் தாங்கள் சுவாதீனமாய் ஆண்டுவந்த ஸமஸ்தானங்களைச் சக்ரவர்த்திக்கு ஒப்புவித்துத் தங்கள் ஜீவனத்தின் பொருட்டுத் தக்க 'பென்ஷன்'களை, அதாவது தங்களின் செலவுகளுக்கு வேண்டியவற்றை மட்டும் இராஜாங்கப் பொக்கிஷத்தினின்றும் பெறச் சம்மதித்தார்கள். அவர்களின் வசமிருந்த சேனைகளைக் கலைத்து சக்ரவர்த்தியின் சேனைகளில் அமரச் செய்தார்கள். சக்ரவர்த்தி புதிதாய் ஏற்ற இராஜாங்க பதவியை ஜனங்களது நன்மைக்காக அவர்களது அபிப்பிராயங்களுக் கிணங்கி ஆட்சி புரிவதாக ஒப்புக்கொண்டார். ஐரோப்பிய தேசங்களது ராஜாங்க முறைகளையும், கடற்படை—தரைப்படை ஏற்பாடுகளையும், கல்வி முறைகளையும், மற்ற எவை யெவை ஜப்பானியரால் அறிந்து கொள்ளத் தக்கனவோ அவைகளனைத்தையும் நேராகப் போய் சோதித்துப் பார்த்து அறிந்து கொண்டு வரும்படியாய் ஜப்பானிய புத்திமான்கள் நூற்றுக் கணக்காக அனுப்பப் பட்டார்கள். ஜப்பானில் இந்தியாவி லிருப்பதுபோல் எண்ணற்ற ஜாதி வித்தியாசங்களு மிருந்தன. ஸ்திரீ ஜனங்களிற் பெரும்பாலார் அறிவில்லாத மூடர்களாய் இருந்தனர். பொதுவாக ஜனங்களுக்குக் கல்வி என்பதே கிடையாது.

***

இவைகளை யெல்லாம் ஒரே பிடிவாதமாக மாற்றி, ஐரோப்பியரது பழக்க வழக்கங்களையும் இராஜாங்க முறைகளையும் கற்று அவைகளைப் போலத் தங்கள் தேசத்திலும் செய்து, புதுப் பிறப்பு வந்தது போல எல்லாவற்றையும் புதுப்பித்து, அவற்றை யெல்லாம் தங்கள் நாட்டு நாகரீகத்தில் கலந்து கொண்டு தேச காரியங்களை நடத்த ஆரம்பித்தனர். இவ்விதம் எந்தெந்த நன்மைகளை அன்னியரைப் பார்த்துப் பெறல் தக்கதாகவும், சாத்தியமாகவும் இருந்ததோ, அந்தந்த நன்மைகளை அவ்வாறே பெற்று உயர் நிலைமையை எட்டிப் பிடிக்க முயன்றார்கள். அன்னியர் வழக்

கங்களை நாம் அனுஷ்டிப்பதாவென்று இந்தியருக்குள்ள வீண் எண்ணம் ஜப்பானியருக் கிருந்ததே யில்லை. தேசம் எப்படிப் போனாலும் கடல் தாண்டினால் பிராயச்சித்தம் விதித்தேயாக வேண்டுமென்று கர்ஜித்து நாம் புதுமைகளை ஏற்கப் பயப்படுவது போல் ஜப்பானியர் பின்னடையவில்லை.

***

தங்கள் தேசம் சுவாதீனத்தை யிழக்காதபடி செய்து அன்னியாது மேம்பாட்டை நிவர்த்திப்பதே ஜப்பானியாது முதல் நோக்கம். அதற்கு எந்த உபாயமானாலும் அதை யேற்றுக் காரிய சித்திபெற வேண்டுமென்றும், அவ்விதம் சித்தி யடைந்த பின்னர் மற்றவைகளைக் கவனித்துக் கொள்ளலாமென்றும் துணிந்தனர். இதுவே ஜப்பானியரின் கோட்பாடு. இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றித் தங்கள் காரியத்தைச் சரிவர முடித்து வெற்றியும் கொண்டு விட்டனர். அன்னியரைப் பார்த்து அவர்கள் அஞ்சி நின்ற காலம் போய், அன்னியர் அவர்களைப் பார்த்துப் பயப்படும் காலம் எதிர்ப்பட்டுக் கொண்டது. அதன் பின் ஜப்பானியர் தங்களின் பூர்வ நாகரீகத்தைப் பொன் போல் போற்றத் தொடங்கி தங்கள் தேசத்து ஆசார அநுஷ்டானங்களையும், பற்பல ஸ்தாபனங்களையும் காலோசிதமான திருத்தங்களுடன் அமைத்துக் கொள்வதாயினர். இவ்வாறாக ஜப்பான் விழிப்பு நிலைபெற்று தனது தீவிர முயற்சியாலும் ஐக்கிய சிந்தையாலும் உலகமே பிரமிக்கும்வாறாக உருமாறிற்று. சில வருஷங்களுக்கு முன் நடந்த ருஷிய-ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியரின் பராக்கிரமத்தையும், அதன் வல்லமையையும் உலகத்தார் அறிந்து கொள்வதாயினர். இவற்றிலிருந்தும் இந்தியா தெரிந்து கொள்ள வேண்டிய படிப்பினைகள் என்னென்ன?

---

### தபால்களைப் பற்றி.

தபாற் சேவகரிடமிருந்து தபால் பெறுங்காலையில் எதிர் வீட்டு ஏகாம்பரமும், பக்கத்துவீட்டுப் பரசுராமனும் அருகில் வந்து குந்திக்கொள்கிறார்கள். அவர்களின் நோக்கம் நமது காரியங்களின் ரகசியங்களை அறிந்து கொள்ளவேதான். அன்னோரின் கண் திருஷ்டி நமது தபால்கள்மீது வெகு கருத்துடன் பாய்கிறது. நமது வியாபாரத்தின் அற்ப விஷயங்களைக் கூடப் பிறர் அறியவிடுவது கேடுதி. ஆதலின் தபால் பெறும் சமயம் அவர்களை அருகில் இருக்கவேண்டாமென்று கண்டித்துவிடுதல் உத்தமமாகும்.

# சென்றமாதம்

**பெண்ணை யனுப்ப மறுத்ததின் முடிவு.**

பெண்ணைவாழக்கொடுத்த இடத்தில் எவ்விதமோ கலகம், மனஸ்தாபம் முற்றிக்கொள்கிறது பெண் வீட்டார் தம் பெண்ணைக் கணவனின் அகத்திற்கு அனுப்ப மறுத்துவிடுகின்றனர். எதிலும் நிதானம்வேண்டும். சில இடங்களில் ஒரே பிடிவாதமாய் அனுப்ப முடியாதென்றும் 'கோர்ட்டு'க்குப் போகும்படியும் சொல்லி விடுகிறார்கள். அத்தருணம் அப்பெண்ணின் கணவனும் அவனைச் சேர்ந்தோரும் மிகக் கேவலமாக இழிந்துரைக்கப் படுகின்றனர். மருமகனின் மானம் காற்றில் பறக்கிறது! அத்தருணம் மாப்பிள்ளையின் மனம் படும்பாடு அவ்விதம் பட்டவர்தான் அறிவார். சென்னை திருவல்லிக்கேணியில் $1\frac{1}{2}$ வருஷத்துக்கு முன்பு மணந்த பொன்னுசாமி யென்பவர் தாம் அழைத்தும் தம் மனைவியை யனுப்பாமல் கேவலப்படுத்தியதைத் தாளாமல் அம்மாமி வீட்டின் வெளியிலேயே தூக்கிட்டுக்கொண்டு முடிந்தார். சுற்றிச் சுற்றி நமது பெண்ணிடம் தான் எப்படியும் வரவேண்டுமென்றெண்ணி மருமகனை அவமதிப்போர் இந்த சம்பவத்தைச் சிந்தையிற் கொள்ளக்கடவர்.

**'இணக்க' வயதினை உயர்த்துதல்.**

ஸ்திரீ புருஷ சம்பந்தம் 12-வயதுக்கு முன் கூடாதென்பது இப்போதுள்ள சட்டம். அதை 14-வயதுக்கு உயர்த்திவிட இந்தியா சட்டசபையில் ஒரு மசோதா வந்துள்ளது. பெண்கள் ருதுவடைந்தும் தக்க இடம் வாய்க்காமையால் 10,12, வருஷங்கள்கூட விவாகம் இன்றியே வீட்டில் வைத்துக்கொண்டு வழக்கப்பட்டுள்ள பிராமணரல்லாதார்க்கு இந்த மசோதாவைப் பற்றி ஒரு கவலையுமில்லை. ருதுவாவதற்கு முன்பே விவாகத்திற்கும், ருதுவான சில மாதங்களுள் சாந்திக்குமான ஸம்பிரதாயத்திற் சிக்குண்டுள்ள பிராமண வகுப்பினருக்கும், அவரது ஆசாரங்களைப் பின்பற்றுவோருக்குமே இது தொல்லை தருவதாய் முடியும். 13-வயதில் ருதுவாவதும், ஆன மூன்று மாதங்களுள் சாந்தி நிகழ்வதும் இன்னோருள் சாதாரண ஸம்பவம். இம் மசோதா சட்டமாயின் இந்த ஆசாரணை தடுக்கப்பட்டு ஸமூகத்தில் பல மாறுதல்களும் தோன்றும். மீறி நடந்த வழக்குகளும் வரும். எனினும் 14-வயதுக்கு உயர்த்தப்படுவது பெண் மக்களுக்குப் பெரும் நன்மையே. ஸமூக விஷயங்களிலெல்லாம் ஸர்க்கார் பிரவேசிக்கின்றனரே யெனில், அது நமது அவிவேகத்தால் தான்.

**லாட்டரிச் சீட்டுகள்.**

தற்காலம் லாட்டரிச் சீட்டுகள் பெருக்கடைந்து வருகின்றன. பத்திரிகாலயங்களிலிருந்து விலாசங்களை எப்படியோ பெற்று லாட்டரிச் சீட்டுப் புஸ்தகங்களை ஜனங்களின் இடையிற் பரப்புகிறார்கள். பலரிடம் வசூலித்த ஏஜண்டுகள் தாமே தொகையை விழுங்கிவிடுவதும் உண்டு. எவருக்கோ பெருந்தொகை கிடைக்கப் பல்லாயிரவர் ஏமாறுகை பெரியதோர்

அக்கிரமச் சூதாட்டமே. முன்பு நமது பக்கத்தில் விவாக—மரண—பண்டிகைகளெனத் தோன்றி வெகு ஏழை ஜனங்களை ஏமாறவைத்தன. இப்போது விருத்திபெறும் இச்சீட்டுகளின் முடிவும் அவ்விதமாகிவிடுமோவென அஞ்சுகின்றோம். எனினும் தக்கோரால் நடத்தப் பெறுவனவும் இல்லாமலில்லை.

**'அல்லாதா' ரின் கோயிற் சுதந்திரக் கிளர்ச்சி.**

மதுரை மீனாக்ஷியம்மன் ஸந்நிதியினுள் ஸ்ரீமான் இராமநாதன் தேங்காய் உடைத்தார். அது கோயில் ஸம்பிரதாயத்துக்கு விரோதமாம். எனவே கோயிற் கதவை மூடிவிட்டனர். திருவண்ணாமலையிலும் பிராமணரல்லாதார் கிளர்ச்சி நோக்கி, அவ்விடத்திய கோயிற் குருக்கள் கோவிலின் கதவைச் சாற்றிவிட்டனராம். பிராமணரல்லாதார் கோவிலில் பிராமணர்க்குள்ள உரிமையைத் தாங்களும் பெற விரும்பி இக்கிளர்ச்சியை ஆரம்பித்துள்ளார்.

**ஸ்ரீரங்கம் கோயில்.**

ஸ்ரீரங்கம் கோயிலுக்கு 1813-ம் வருஷ முதல் ரூபாய் 35000 வீதம் பிரதி வருஷமும் துரைத்தனத்தார்கொடுத்து வருகின்றனர். இது ரூபாய்க்கு 15-படியும், 12 அணுவுக்கு ஒரு வீசை நெய்யுமாக விற்றுவந்த 1813-ம் வருஷத்திய விலைவாசிகளைப் பொறுத்து மேற்கண்ட தொகை நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுதோ நெய் வீசை ரூபா 3-க்கும் மேலே; அரிசியோ ரூபாய்க்கு 2½ படிகூட இல்லை. இந்நிலையில் வருஷத்திற்கு 33000 ரூபா விலை பெறுமான 98693 படி அரிசியும், 34500 ரூபாயாகக்கூடிய 13391 வீசை நெய்யும் வேண்டியிருக்கிறது. வரவோ சுருக்கம், செலவோ மிகுதி. இச்செலவைச் சரி செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்கும் பொருட்டு ஒரு லாட்டரிச் சீட்டு நடத்தப்போகின்றனராம். "வெள்ளி பூணார், வெண்கலம் ஆளார்" என்றுள்ள ஸ்ரீரங்கநாதருக்கே செலவுக்குக் கஷ்டமெனில் என் சொல்ல!

**மானம் ;—**

"பதிதைகள் உட்பட ஸ்திரீகளில் ஒவ்வொருவருக்கும் மானமிருக்கிறதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பல வகுப்பு ஸ்திரீகளிலும் மானம் சற்று ஏற்றத் தாழ்வாக இருந்தபோதிலும், அவர்களுக்கும் மானமென்பது இருக்கிறதென்று நான் அபிப்பிராயப் படுகிறேன்." (இது பாபநாசம் ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்திரேட்டாரின் தீர்ப்பிலுள்ள ஓர் பகுதி. 11—2—27.)

**புஸ்தக விலாசம் தேவை :—**

மானிப்பாயில் பதிப்பித்த மனுஷ்ய அங்காதி பாதம் என்ற புத்தகம் கிடைக்கும் விலாசத்தைத் தெரிவிக்குமாறு அடியிற்கண்டவர் வேண்டுகின்றார்.

விலாஸம் :—

ஜீ. கண்ணுசாமி வைத்தியர்,

திருவாரூர்.

---

இக்காலத்தில் பிராமணர்களாக வேண்டுமென்று பிரயத்நம் செய்யும் இதர ஜாதியார் அநேகருளர். முற்காலத்தில் விசுவாமித்திரர் பிராமணராக வேண்டி எத்தனையோ ஆயிர வருஷங்கள் தவம் செய்தார். இக்காலத்தில் அவ்வித ஸங்கடமொன்றுமில்லை. கிறிஸ்துவப் பாதிரிமாரிற் பலர் தமது பெயருக்குக் கடைசியில் 'ஐயர்' என்று சுலபமாய் வைத்துக்கொள்கின்றனர்.

# ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள்

**From a young man to his father desiring him to intercede with his Master to take him again into his service.**

**Honoured Sir,**

With shame, arising from a consciousness of guilt, I have ventured to write to you at this time. I doubt not but you have heard of the irregularities of my conduct, which at last proceeded so far, as not only to induce me to desert the service of the best of masters, but to run into the commission of those vices that might have proved fatal to me, had it not been for the many examples and moral lessons I met in a book lately published. It was the allurements of vicious company, that first tempted me to forsake the paths of virtue, and neglect my duty in a family where I was treated with the greatest tenderness. Fully sensible of my fault, I am willing to make every reparation in my power; but know not of any other, than by acting diametrically opposite to my former conduct. Let me beg of you, sir, to intercede with my worthy master to take me again into his service, and my whole future life shall be one cantinued act of gratitude.

I am, sir,

Your affectionate,

though undutiful, son,

RAMACHANDRAN.

**ஒரு பாலியன் தன்னைத் தன் எஜமானன் மறுபடி அலுவலில் வைத்துக்கொள்ளத் தந்தை அவருடன் பேசும்படி அவருக்கு எழுதியது.**

**கனம் பொருந்திய ஐயனே,**

செய்தது குற்றமென்று தெரிந்ததனால் உண்டாகிய நாணத்துடன் இவ்வேளையில் நான் தங்களுக்கு எழுதத் துணிந்தேன். என்னுடைய பொல்லாத நடக்கைகளைத் தாங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களென்பதற்கு நான் சந்தேகப்படவில்லை. அவைகள் கடைசியிலே மிகவும் மீறி மஹா நல்ல எஜமானனின் ஊழியத்தை விட்டு விட என்னை உடன்படுத்தியனவு மன்றி, சில நாளைக்கு முன் உண்டாகிய ஒரு புஸ்தகத்தில் அநேக திருஷ்டாந்தங்களையும் நற்புத்திகளையும் நான் வாசித்திராவிட்டால் எனக்குப் பொல்லாங்காக முடியத்தக்க துஷ்ட காரியங்களைச் செய்யவும் என்னை உடன்படுத்திவிடும். துஷ்ட சிநேகிதரின் இனிமையான துர்ப்புத்திகளே நல்ல வழியை மறுக்கவும், என்னை மஹா அன்புடன் நடப்பித்த குடும்பத்தாரிடத்தில் எனக்கிருந்த அலுவலை விட்டு விடவும், ஆதியில் என் புத்தியை மயக்கின. இப்போது என் குற்றம் எனக்கு நன்றாய்த் தெரிந்தபடியால் அதற்கு என்னால் கூடிய பரிகாரமெல்லாம் செய்ய மனதாயிருக்கிறேன். அந்தப் பரிகாரம் முந்திய நடக்கைக்கு நேர் விரோதமாக நடப்பதேயொழிய மற்றொரு வகையும் எனக்குத் தெரியாது. ஆகையால், பிதாவே! யோக்கியான எனது எஜமானன் என்னை மறுபடி தமது ஊழியத்தில் வைத்துக்கொள்ள அவரிடத்தில் பேசும்படி தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இனி என்காலமுழுமையும்நான் அந்த நன்றி யறிந்தே நடந்து கொள்வேன்.




அலை வீசி யெறியும் அகன்ற நீர்மலி நதிகள்; நதியோரத்திலே நந்தவனப் பூஞ்சோலையைப் பழிக்கும் உபவனங்கள்; அவற்றின் கண்ணே அபூர்வமான சிற்பவேலை செய்யப்பெற்றுச் சிறந்து விளங்கும் ஆகாயத்தை யளாவிய ரத்நகசிதமான சலவைக்கல் மாளிகைகள்; அவற்றின் அருகே பக்கத்திலும் எதிர் முகத்திலும் பின்புறத்திலும் இடிந்து விழும் சுவரும் ஒடிந்து சாயும் கூரையு முடைய குடிசையின் வரிசைகள்; அவற்றிற் குடி யிருக்கும் மெலிந்த உடலோடும் கிழிந்த கந்தையோடும் யுக யுகாந்தரமாக உள்ளத்திலுள்ள சகலவித நல்லாசைகளும் அழிந்து ஏக்கங் கொண்டு வாடிய வதனத்தோடும் விளங்கும் கிழவர் கிழவியர், சிறுவர் சிறுமியர்; இடையிடையே ஒத்த நடையும் உடலும் உடைய ஆடு மாடுகள்; நாற்புறத்தும் அழுக்கும் குப்பையும் நிறைந்த மண் மேடு—இதுவே நமது பரதகண்டத்தின் தற்காலத்திய நிலை,

***

வாந்திபேதியின் விபரீதக் கொள்ளைக்கும், 'பிளேக்' என்னும் பெருவாரி நோயால் உண்டாகும் பிரமாதமான பிராணபத்துக்கும், மலேரியா என்னும் விஷ ஜ்வரம் ஜனங்களுக்குள் புகுந்து அவர் தம் எலும்பை நொறுக்கி சதையைச் சூறையாடிப் புரியும் கொடுமைக்கும், அரைப் பட்டினி—முக்காற் பட்டினி—முழுப் பட்டினி யிருப்பதே தமக்கு சகஜ நிலையெனக் கொண்ட தீனர்களின் தௌர்ப்பாக்கியத்துக்கும், இதனிடையே நடுக் கொள்ளையாக அந்த எம ஸ்வரூபம் போல் எங்கும் உலாவும் துர்ப்பிக்ஷத்தின் திவ்யோற்சவத்துக்கும், மற்றுமுள்ள ரோக சோகங்களுக்கும் பிரதான குருக்ஷேத்திரமோ—அல்லது யௌவனப் பருவத்தின் லக்ஷணங்களாகிய நல்லாசை—நல்லூக்கம்—உழைப்பு—விடாமுயற்சி—உற்சாகம்—ஆநந்தம்—முதலியவை யெல்லாம் அழிந்து போய், அவற்றின் எலும்புகள் மாத்திரமே எங்கும் நிறைந்துள்ள மஹா ச்மசானமோ இது என்று சங்கிக்கும்படியான நிலையில் நம் பாரதகண்டம் தோன்றுவதையும், அதன் கண்ணே தியானத்தி லமர்ந்து மோக்ஷ பாராயணனாய் விளங்கும் யோகி வீற்றிருப்பதையும் — ஐரோப்பாவிலிருந்து இத்தேசத்துக்குப் புதிதாய் வரும் பிரயாணி பார்க்கின்றான்.

(விவேகாநந்த ஸ்வாமிகள்.)

***

சபைகளிற் செய்த தீர்மானங்கள் மறக்கப் படுகின்றன. ஜனங்களைச் சமரஸப்படுத்திக்கொண்டு போகும் குணமில்லாமல் தங்கள் பேச்சு, அநுஷ்டானம், நடத்தை முதலியவைகளில் பிறருக்கு அநாவசியமாய் வெறுப்பையும் கோபத்தையும் உண்டு பண்ணுகிறார்கள். மற்றவர்களுடன்



பழகுவதில் விட்டுக் கொடுக்கும் ஸ்வபாவமும் இல்லை. மேலும் நமக்குள் சத்தியமாவது பிடிவாதமாவது இல்லை. மனதிலுள்ளதை மறைக்காமற் சொல்லுவதும், சொன்னபடி செய்வதும், மேற்பூண்ட காரியத்தை முடித்துத் தீர்ப்பதும் இந்தியர்களாகிய நாம் இனிப் பெறவேண்டிய குணங்களாகும்.

***

சாப்பாட்டைத் தவிர சுபாசுபங்கள், துணி மணி முதலிய செலவுகளுமிருக்கின்றன. வியாதியாய், அல்லது கிழத்தனமாய் விழுந்தால் அப்போது ஆகும் செலவு மிருக்கின்றது. இந்தச் செலவுகளுக் கெல்லாம் கூலிக்காரன் கடன்தான் வாங்குகிறான். கடன் கிடைக்காவிட்டால் அவன் குடும்பமும் அவனும் பட்டினியாகவே இருக்கிறார்கள். கூலி வேலை செய்கிறவன் கட்குடியில் பணத்தைச் செலவு செய்வது உண்மை. ஆனால் வயிறு நிரம்பத் தின்று மிகுந்ததைக் கட்குடிக்கிறானென்பது உண்மையல்ல. வயிறு நிரம்ப உண்ண முடியாமலே கட்குடியில் செலவு செய்கிறான்.

***

குடும்ப அபிமானம், பெற்றோர் அபிமானம் ஆகியவைகள் எப்படியோ அப்படியே தேசாபிமானமும் ஒருவரைப் பார்த்து ஒருவர் கற்கக்கூடிய உணர்ச்சி. எத்தேசத்தில் வயது வந்த பெரியோர் தேசாபிமானத்தால் தூண்டப்பட்டுப் பொதுக் காரியங்களை நடத்த வெளி வருகிறார்களோ, அத்தேசத்தில் சிறியோர்களும் அப்படியே செய்வார்கள். பெரியோர்களுக்குத் தாய்த்தேச மாகும்போது சிறியோர்களுக்கும் அது தாய்த்தேசமே. அவர்களின் தொண்டும் தேசத்துக்கு வேண்டியதே. இளைஞர்க ளென்போர் ஒரு உற்சாகக் களஞ்சியமாவார். எந்த சிறு விஷயத்திலுங் கூட இளைஞர்களின்றி உற்சாகம் பெற முடியாது.

***

அதிர்ப்தி என்பதே இல்லாமல் திருப்தியே மேலிட்டிருப்பவர்கள் தங்களுக்கு வேண்டிய ஸ்வதந்திரங்களைப் பெற்று முன்னுக்கு வருதல் முடியாத காரியம். அதிர்ப்தி என்பதே 'முற்போக்கு' என்ற குழந்தையைப் பெறக்கூடியதா யாகும். எந்த சாஸ்திரத்திலும் கலையிலும் வித்தையிலும் உலகத்துக் கெல்லாம் இந்தியர் முதன்மை பெற்று மகா கீர்த்திவான்களாயிருந்ததைச் சரித்திரம் கதறுகின்றது. அத்தகைய தேசத்தின் தற்கால நிலையைப் பற்றி நாம் அதிர்ப்தி கொள்ள வேண்டாமா? "அதிர்ப்தி நன்மை தரும்" என்றார் ஓர் ஆங்கில ராஜதந்திரி.

***

ஒரு தனி மனிதன் ஈன ஸ்திதியிலிருந்து நல்ல ஸ்திதிக்கு வர எத்தனையோ உழைத்துக் கஷ்ட நிஷ்டூரங்களை யனுபவிக்க வேண்டியதாயிருக்க, கோடிக் கணக்கான ஒரு ஜன ஸமூகம் ஆயிர வருஷ காலமாக மகா தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமைக்கு வர எத்தனை உழைப்பும் கஷ்ட நிஷ்டூரங்களும் அனுபவிக்க வேண்டாம்? அப்படி யனுபவிக்க மனத்திட னில்லையாகில் இந்தியரின் தற்கால ஈனசந்தி என்றைக்கும் சாஸ்வதமாய்விடும். அது நீங்க வேண்டுமானால் ஒவ்வொரு தருணத்தையும் ஏற்று உழைக்கச் சித்தமா யிருக்கவேண்டும்.

***

அமெரிக்கா 170-வருஷங்களுக்கு முன்பு வெளிதேசச் சரக்குகளை விலக்கி, தன் தேசத்தில் யாவும் செய்ய முயன்றதிலிருந்தே படிப்படியாய் விருத்தி கொண்டு முடிவில் சுவாதீன நாடாக மாறிற்று. 1870-ம் வருஷத்தில் ஜெர்மனியினுடைய பொருளாதார நிலைமை மிகவும் கேவலமாயிருந்தது. அதன்பின் அவர்கள் தங்கள் முயற்சியால் நாட்டுத் தொழில்களைப் பெருக்கி அடைந்த அபிவிர்த்தியோ இங்கிலாந்தும் தோற்றுப்போகச் செய்யும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. பெல்ஜியம் வெகு சிறு தேசம். அங்கு எஃகால் செய்யப்பட்ட சாமான்களைப் பொறுத்த மட்டில் அந்த நாடு பிரிட்டிஷ் நாட்டை மிஞ்சிவிட்டது. ஸமீப காலம் வரையில் இந்தியப் பொருளாதார நிலையைப் போன்றதோர் பொருளாதார நிலையையுடையதாயிருந்த இட்டலி நாடு தற்காலத்தில் எவ்வளவோ மேலான நிலைக்கு வந்து விட்டது. மேல் நாடுகள் இருக்கட்டும்; நமக்கு அருகிலுள்ள ஜப்பானை எடுத்துக் கொள்வோம். அதன் மகோன்னதம் பிரசித்தம். சாஸ்திர யுக்திகளின் பிரயோகத்தாலும், மூலதனத்தின் உதவியாலும் மேற்சொன்ன நாடுகளின் பொருளாதாரங்கள் பெருகி ஓங்கத் தலைப்பட்டன. இவ்விதமே இந்தியாவின் பொருளாதார நிலைமையும் விருத்தியாக வேண்டுமானால், சாஸ்திரப் பயிற்சியும் மூல தனமும் சேர்ந்து அவ்விருத்தியினை உண்டாக்க வேண்டும்.

***

இந்திய ஜனமானது (கைத்தொழிலாகிய) ஒரு கை போய் (வியவசாயமாகிய) ஒரு கையையுடைய ஜனமாக இருக்கின்றது. எப்படி ஒரே கையையுடைய மனிதன் பிழைத்த லரிதாகிக் கஷ்டப்படுவானோ அப்படி நமது ஜனம் கஷ்டப்படுகின்றது. 1756-ம் வருஷ முதல் 1800-ம் வருஷத்திற்குள்ளாக இந்தியாவின் உலகப் பிரசித்தமான நெசவுத் தொழில் மறைந்து போய்விட்டது. 1800-ம் வருஷ முதல் ஏனைய தொழில்களும் நசிக்கலாயின. 1858-ம் வருஷத்துச் சிப்பாய் கலகத்திற்குப் பிறகு ரயில் பாதைகள் ஏற்பாடாகி, சுவெஸ் கால்வாயும் வெட்டப்படவே, இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் மேல்நாட்டுச் சரக்குகள் வெள்ளமாகப் பெருகி உருண்டு வந்து ஸகல தொழில்களும் அற்றுப்போய் விவசாயத்தையே நம்பி ஜீவிக்கும்படியாய் விட்டது.

***

சாமானியமான கத்தி சைனாபஜாரில் ஒரு ரூபாய்க்கு விற்குமானால், அது 1½ அல்லது 2-ரூபாய்க்கு ஆங்கிலேயே 'ஷாப்'பில் விற்கின்றது. அவ்விதம் இருப்பினும் ஆங்கிலேய 'ஷாப்'பில் கத்தியை வாங்குவார்களேயன்றி, சைனாபஜாரில் ஆங்கிலேயர் வாங்குகிறார்களா? அது போலவே, இந்தியக் கடைகளில் சொற்ப விலைக்குக் கிடைக்கக்கூடிய எந்த சாமானும் ஆங்கிலேய 'ஷாப்'புகளில் அதிக விலைக்கு விற்றாலும், அதிக விலை கொடுத்தாவது ஆங்கிலேய ஷாப்புகளிலேயே வாங்குகிறார்கள். இவ்விதமே ஆங்கிலேயர் இங்கிலீஷ் வைத்தியத்தை நாடுவதன்றி தமிழ் வைத்தியத்தைத் தேடுவதில்லை. இதற்கென்ன காரணம்? தேசாபிமானத்தைத் தவிர வேறில்லை. அப்படியே ஐரோப்பியர் உபயோகிக்கும் தொப்பி ஒரு



ரூபாய்க்குக் கிடைக்கக் கூடும். அதை ஐரோப்பியரைப் போலவே நாமும் வாங்கி உபயோகித்து 'சீமைத்துரை'களாகலாமே! ஏன் 20 – அல்லது 30 - ரூபாய் செலவிட்டு உருமால் வாங்கித் தலைப்பாகையாக உபயோகப்படுத்துகிறோம்? ஐரோப்பிய தொப்பி உபயோகித்தல் நமது ஸம்பிரதாயமல்லவாதலால் தான். ஆகவே, ஜனங்கள் வாங்கும் பொருள்களும், உபயோகிக்கும் சாமான்களும் கேவலம் விலையைப் பொறுத்தனவாயில்லை; விருப்பம், அபிமானம், வழக்கம் இவைகளைப் பொறுத்தனவாயிருக்கின்றன. இந்தக் குணங்களை ஜனங்களின் மனதில் நாம் முயற்சியால் கிளப்பிவிட்டு, விலையின் சரசம் நோக்கி அன்னிய சாமான்களை வாங்கித் தேசத் தொழிலாளிகளைக் கெடுத்துவிடக் கூடாதென்று நாம் ஜனங்களுக்கு இடித்துச் சொல்லவேண்டும். தேசாபிமானத்தால் சாதிக்க முடியாத பெருங்காரியமெதுவுமில்லை.

---

குள்ளனுக்குப் பிறரை ஏமாற்றுவதில் அதிக நோக்கம் உண்டாம். அவனுடைய சரீரம் குள்ளமாயிருப்பதுபோல் நல்ல புத்தியும் குறுகியிருக்குமாம். அதனால் மோசம் செய்வதிலேயே மனம் பிரவர்த்திக்குமாம்.

---

இங்கிலாந்து தேச சரித்திரத்தைப் பார்த்தால் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரைச் செய்த ஹிம்ஸை தெரியும். நாகரீகம் மலிந்துள்ள ஐரோப்பாவிலே ஒரே மதத்தை யனுஸரிக்கும் ஜனங்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற வித்யாஸமுண்டு. பிரபு வம்சஸ்தர் தங்கள் பெண்ணைத் தாழ்ந்த ஜாதிப் பிள்ளைகட்குக் கல்யாணம் செய்து கொடார். ஸமபந்தியிலிருந்தும் விருந்துண்ணார்.

---

ஹிந்துக்கள் கூறுகிறபடி நான்குவருணங்களும் ஈசுவரனால் உண்டாக்கப்பட்டன வென்று நம்பாவிட்டாலும், ஒவ்வொரு தேசத்திலும் நாளடைவில் செல்வத்தினாலும், செல்வாக்கினாலும், கல்வியினாலும் மேலான நிலைமையையடைந்தவர்கள் ஸாமான்ய ஜனங்களுடன் கலந்துறவாடாமல் தனியே இருந்து விடுகிறார்கள். இதனாலும் பற்பல ஜாதிகள் ஏற்படுகின்றன. ஜாதி என்பது உலகமுற்றும் எவ்விதமோ பரவியுள்ள சங்கதி.

## நீயே தபாலில் போடு.

அவ்வளவு பிரயாசைப்பட்டு அந்தக் கடிதத்தை எழுதிய நீ அதை உன் கையாலேயே தபாலில் போடக்கூடாதா? பிறரிடம் கொடுத்தனுப்பியதில் அவன் அதிலுள்ள ஸ்டாம்பை எடுத்துக் கொண்டு அதோ கிழித்தெறிகிறனே! அவ்வளவு பாடுபட்டு நீ எழுதிப் பயனென்ன? எந்தத் தபாலையும் நீயே போடப் போ. அப்போது தான் அது நம்பிக்கையுடன் குறித்தவருக்குப் போய்ச் சேரும். சாதாரண சங்கதியில்தான் பெரிய சங்கதி யிருக்கிறது.




## 2. தூரத்தில் இருந்தால் வாசனை

ஏதுவும் தூரத்தில் இருந்தால் தான் அதிகமாக வாசனை.



கடைகள் பக்கம் போனால் கம்மென்று வாசனை வருகிறது. நமக்கு எட்டுகிற அவ்வளவு வாசனையும் அந்தக் கடையிலேயே உட்கார்ந்திருப்பவனுக்குத் தெரிகிறதில்லை. மாம்பழக் கடைகள் தூரத்தில் இருக்கையிலேயே அதன் வாசனை நமக்கு எட்டுகிறது. அந்தக் கடைகளுக்கே நாம் போனால் அவ்வளவு வாசனையைக் காணோம்.

உலகத்தின் போக்கும் இப்படித்தான் இருக்கிறது. அகல இருந்தால் நிகள உறவு; கிட்ட இருந்தால் முட்டப் பகை! கிருஷ்ணனுடைய தகப்பனார் தஞ்சாவூருக்குப் போகவேண்டியிருந்தது. அந்த ஊரில் இரண்டு மாதம் அவர் தங்கவேண்டும். தஞ்சாவூரில் அவர் தம்பி வீடு இருக்கிறது. அவர்கள் வெகு பிரியமுள்ளவர்கள்; அங்கேயே சுகமாகத் தங்கி இருக்கலாம். அவர்களும் வரும்படி அன்போடும் பல கடிதங்கள் எழுதினார்கள்.

ஆனால், கிருஷ்ணனின் தகப்பனார் தம்பியின் வீட்டுக்குப் போகப் பிரியப்படவில்லை. ஒருவனாய்ப் போய் ஒன்று இரண்டு நாள் இருந்தால் பாதகமில்லை. குடும்பத்துடன் புறப்படும்போது வேறேயாக வீடு பார்த்துக்கொள்வதே 'மரியாதை' என்று நினைத்தார். அப்போது தான் தம்பி வீட்டாரும் 'இவர்கள் வந்து இவ்வளவு செலவாயிற்று' என்று நாளைக்குச் சொல்லிக் காண்பிக்க முடியாது என்று எண்ணினார்.

தஞ்சாவூரில் கிருஷ்ணனின் தகப்பனாருக்கு ஒரு சிநேகிதன் உண்டு. அவன் வீட்டிற்குக் குடும்பத்தோடு போய் இறங்கினார். அங்கு இருந்துகொண்டு ரகசியமாய் தம்பியின் வீட்டுக்கு அடுத்த வீட்டை இரண்டு மாத வாடகைக்குப் பேசிக்கொண்டார். பிறகு சிநேகிதன் வீட்டிலிருந்து புறப்பட்டு வாடகை வீட்டிற்கு வந்து



இறங்கினார். அந்த வீட்டில் சமையல் செய்து சாப்பிட்டார். சாப்பாடு ஆனபிறகு குடும்பத்தோடும் தம்பி வீட்டுக்குப் போனார்.

தம்பி வீட்டார் இவர்களைக் கண்டதும் சந்தோஷப்பட்டார்கள். எப்போது வந்தீர்கள்; பெட்டிகள், மூட்டைகள் எங்கேயென்று கேட்டார்கள். கிருஷ்ணனின் தகப்பனார், நாங்கள் இரண்டு மாதம் இங்கே இருக்கவேண்டும். அவ்வளவு நாளைக்கும் இங்கே வேலை இருக்கிறது. உங்களுக்குப் பாரமாக இங்கு வந்து இருக்கக் கூடாது. ஆனதால் அடுத்த வீட்டை வாடகைக்குப் பேசி அங்கே தங்கி யிருக்கிறோம். சமையல் செய்து சாப்பிட்டு ஆனது. உங்களைப் பார்த்துப் போவதற்கே வந்தோம் என்றார்.

அதற்குத் தம்பி வீட்டார் வருத்தப்பட்டார்கள்: 'இப்படி நீங்கள் பேதம் நினைக்கலாமா? இந்த ஊருக்கு வந்த பிறகு எங்கள் வீட்டில் அல்லவா வந்து இறங்கவேண்டும். நீங்கள் வேறு வாடகை வீடு பேசலாமா? நாங்கள் உங்களுக்குச் செலவு செய்யக் கூடாதா' என்று கோபித்தார்கள்.

அதற்குக் கிருஷ்ணனின் தகப்பனார், நான் பேதம் எண்ணவில்லை. நாங்கள் உங்கள் வீட்டில் இறங்கவில்லையே யென்று முதலில் வருத்தமாகவே இருக்கும். பிறகு நீங்கள் பணத்தை எண்ணி எங்களுக்குச் செலவு பண்ணும்போது அது கஷ்டத்தைக் கொடுக்கும். அந்தக் கஷ்டத்தால் உங்கள் வீட்டுக் குழந்தைகள் கூட எங்களைத் திட்டும்படி நேரும். இவர்கள் எப்போது ஊருக்குப் போவார்களோவென்று நீங்களும் நினைக்கும்படியாகிவிடும். ஆதலின் அது கூடாது என்றார்.

கிருஷ்ணனின் தகப்பனார் இரண்டு மாதம் வரையில் தஞ்சாவூரில் வாடகை வீட்டில் இருந்தார். தமது வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டார். அவர் தூரத்தில் இருந்ததால் தம்பி வீட்டாரும் வெகு பிரியமாய் இருந்தார்கள். பிறகு எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு, எவருடைய விரோதமும் சுடு சொல்லும் இல்லாமல் சுகமாகத் தமது ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

---

> நீ எவருக்கும் பாரமாக ஒருவர் வீட்டில் போய்த் தங்காதே. பிறகு அவர்களிடம் சுடு சொல்லும், சிடுசிடுப்பும், மனஸ்தாபமும் வாங்காதே.

# பெரியாரின் மொழிகள்

(548-ம் பக்கத் தொடர்ச்சி.)

69. May freedom, harmony, and love,
Unite you in the grand design,
Beneath th' Omniscient Eye above,
The glorious Architect divine. *Burns.*

சுதந்திரம், ஏக பாவம், அன்பு இவைகள் உன்னை தெய்வீக மகா சிற்ப சாஸ்திரியினுடைய சர்வஞான நேத்திரங்களின் கீழ், கம்பீரமான கற்பனையில் ஒன்று சேர்க்கட்டும். பர்ன்ஸ்.

70. Confess you were wrong yesterday,
It will show you are wise to-day. *Proverb.*

நேற்று நீ தவறு செய்தாய் என்று ஒப்புக்கொள், அதுவே இன்று நீ புத்திமானு யிருப்பதைக் காண்பிக்கும். பழமொழி.

71. There is no substitute for thorough going, ardent, and sincere earnestness. *Dickens.*

பூர்ணமான, தீவிரமான, ஹிருதய பூர்வமான யதார்த்தத்தன்மைக்கு நிகரானது எதுவுமில்லை. டிகன்ஸ்.

72. How sour sweet music is
When time is broke, and no proportion kept!
So is it in the music of men's lives. *Shakespeare.*

காலம் சரியாக இல்லாமல் யாவும் தாறுமாறாய் இருக்கும்பொழுது இனிய சங்கீதமும் எவ்வளவு கடூரமாக இருக்கிறது! அங்ஙனமேதான் மனிதரின் வாழ்க்கையான கீதமும். ஷேக்ஸ்பியர்.

73. Alas by some degree of Woe,
We every bliss must gain,
The heart can ne'er a transport know,
That never feels a pain. *Lord Lyttleton.*

ஹா! நாம் அடையும் ஒவ்வொரு இன்பமும் சற்று துன்பத்துடனேயே பெறவேண்டி யிருக்கிறது. வருத்தத்தை உணராத ஹிருதயம் என்றும் மாறுதலையே அடைய முடியாது. லிட்டில்டன்.

74. Wisdom never forgives. Whatever resistance we have offered to her law, she avenges for ever; the lost hour can never be redeemed, and the accomplished wrong never atoned for. *Ruskin.*

ஞானம் என்றும் மன்னிப்பதில்லை. அதனுடைய சட்டத்திற்கு நாம் அளித்த எதிர்ப்புக்கு அது என்றும் பழி தீர்த்துவிடுகிறது; கடந்த நாழிகையைத் திருப்பிப் பெற முடியாது; செய்துவிட்ட தீங்கை அகற்றிவிட முடியாது. ரஸ்கின்.



75. To know that which before us lies in daily life, is the prime wisdom. *Milton.*

தினசரி வாழ்க்கையில் நம்முன் கிடப்பதை அறிவதே முதலாவதான ஞானம். மில்டன்.

76. Lives of great men all remind us,
We can make our lives sublime. *Longfellow.*

மகான்களுடைய வாழ்க்கைகள் யாவும் நாமும் நம்முடைய வாழ்க்கைகளைச் சிறந்ததாகச் செய்துகொள்ளக் கூடும் என்பதை ஞாபகமூட்டுகின்றன. லாங்பெல்லோ.

77. Light flashes in the gloomfest sky,
And music in the dublest plain. *Keble.*

மிக இருட்டான ஆகாயத்தில்தான் வெளிச்சம் மின்னுகிறது, மிகு மந்தமான இடத்தில்தான் சங்கீதம் பிரகாசிக்கிறது. கெபிள்.

78. Our bravest lessons are not learned through success, but misadventure. *A. Brenson Alcot.*

நம்முடைய தீரமான நீதிகள் வெற்றிகளினால் கற்றுக்கொள்ளப் படுவதில்லை, விபத்துகளின் மூலமே கற்கப்படுகின்றன. எ. ப்ரென்ஸன் அலுட்.

79. Laugh where we must, be candid where we can,
But vindicate the ways of God to man. *Pope.*

சிரிக்கும்பொழுது சிரிக்கவேண்டும், கூடிய இடங்களில் நிஷ்கபடமாக இரு. ஆனால் கடவுளுடைய வழிகளை மனிதனுக்குச் சரியென்று காண்பி. போப்.

80. The Voice of Time cries to man, "Advance!" Time is for his advancement and improvement; for his greater worth, his greater happiness, his better life. *Dickens.*

காலத்தினுடைய குரல் மனிதனிடம் 'முன்செல்' என்று கூறுகிறது; காலமென்பதே அவனுடைய வளர்ச்சிக்கும், மேன்மைக்கும், அதிக கௌரவத்திற்கும், அதிகமான சுகத்திற்கும், சிறந்த வாழ்க்கைக்கு மாகும். டிகன்ஸ்.

81. In nature there's no blemish but the mind,
None can be called deformed but the unkind. *Shakespeare.*

இயற்கையில் மனத்தைத் தவிர களங்கமெதுவு மில்லை; அன்பில்லாதாரைத் தவிர வேறு எவரையும் அங்கஹீனரென அழைக்க முடியாது. ஷேக்ஸ்பியர்.

82. Walk,
Boldly and wisely in the light thou hast,
There is a Hand above will help thee on. *Philip Bailey.*

உன்னிலுள்ள ஒளியின் கீழ் தைரியமாகவும் புத்தியுடனும் நடந்துசெல்; உன்னை இட்டுச் செல்ல மேலே ஒரு கை இருக்கிறது. பிலிப் பெய்லி.

(தொடரும்.)

R. இராமகிருஷ்ணன் B.A.,

# சிறுமணித்திரள்

(510-ம் பக்கத் தொடர்ச்சி.)

243. அன்புள்ள ஹிருதயங்கள் கிரீடங்களை விடச் சிறந்தவை. ஆசையை மறவாவிட்டால் ஆசைப்பட்டதை நிறைவேற்றும் சக்தி ஆசைக்கு உண்டு.

244. வீட்டில் உருப்படாத பெண் பின் வாழ்விலும் உருப்படாது.
(மகாத்மா.)

245. தரித்திர நிலையிலுள்ளவர்களுக்கு உதவி செய்யப் புகும் உபகாரிகள், அந்தத் தரித்திரர்களின் கஷ்ட நிலைமையைத் தங்களுக்கு அநுகூலமாக உபயோகப்படுத்திக் கொண்டு விடுவது சாமான்யமான தந்திரம்.

246. ஐரோப்பிய நாகரீகம் என்றால் பண ஆவல், சுகப் பெருக்கு என்பது பொருள். (2) கவி தன் சொல்லிலே பொருட் படுத்திக் காட்டுவதை, தரும வீரன் செயலிலே தெளிவு படுத்திக் காண்பிக்கிறான்.

247. ஸம்பிரதாயப்படி கண்ணீர் வடித்துவிட்டுப் பிறகு ஊர் சங்கதிகளைப் பேசத் தொடங்கிக்கொள்வது துக்கம் விசாரிக்க வந்தோரின் வழக்கம்.

248. தீண்டாதவர்கள் என்கிறோம். ஆனால் அவர்களுடைய உழைப்பை நாம் தீண்டுகிறோம், வேண்டுகிறோம். அவர்களின் உழைப்பினால் வரும் தானியங்களே நம் உயிரைக் காக்கின்றன.

249. நல்ல வழிக்கு உதவாத பணம் நாலு வழியிலும் நாசமாகும். ஒருவனை ஏமாற்றிப் பறிக்கும் பணம் மற்றொன்றில் இருமடங்காய்ச் செலவாய்விடும். ஒருவனின் கஷ்டத்திற்குத் தகுந்த கூலி தாராத பணமும் பிறகு பல பல செலவே.

250. அழகை விலைக்கு வாங்க முடியாது. அழகு படிப்பில்—கவியில்—பெண்ணில்—மலரில்—வானத்தில் — இயற்கையில்—மனிதனின் உள்ளத்தில்—இருக்கிறது. அதை அநுபவிக்க மன வளர்ச்சி வேண்டும். அவ்வளர்ச்சியைப் பெறல் தான் வாழ்க்கையின் தர்மம்.

251. நேற்றுதான் சம்பளம் வந்து இப்போதுதான் மாதச் செலவுக்கான சாமான்களை யெல்லாம் வாங்கி வீட்டில் கொண்டு வந்து போட்டு, மிகச் சிக்கனமாய்ச் செலவிடும்படி மனைவிக்குச் சொல்லிக்கொண் டிருக்கையில், ஒரு கூட்டம் பேர்களோடு வாசலில் இரண்டு வண்டிகள் வந்து நிற்கின்றன! வீட்டுக்காரன் பெருமூச்சு விடுகிறான்!!

252. உன் கருமத்திலேயே கண்ணாயிரு, உன் புத்திமதிகளை உன் நண்பருக்குச் சொல்ல வேண்டுவதில்லை. அவைகளை உனக்கே உபயோகப் படுத்திக்கொள்.



253. மனிதர்கள் உன்னை நன்கு மதிக்கிறார்களில்லை என விசனப் படாதே. ஈச்வர ஸேவகனாய் ஈச்வர கைங்கரியங்களை நன்றாய்ச் செய்யவில்லையே என விசனப்படு. அதுதான் உண்மையில் உனக்கு உரிய துக்கமாக இருக்க வேண்டும்.

254. மதிகெட்ட உல்லாஸ வழியைத் தவிர். உள்ளம் நொந்து அநுதாபப்படு, அதில் தபசுக்கு இடமுண்டு. அநுதாபத்தினால் மனம் ஒன்றுபட்டு இரங்கல் அருட் கதவைத் திறக்க இயலுவதாகும்.

255. எக்கருமம் செய்தாலும் அதனால் உன் அந்திய காலத்துக்கு என்ன சாதகம் வருமென்று உன்னிப் பார்.

256. மனம் குளிர, வாய் நிறைய, ஈசுவர ஸ்தோத்திரம் செய்வதைத் தவிர, அந்தோ! வேறு கர்மம் இல்லாமலிருக்கும்படி செய்ய ஒண்ணாதா! பசி, தாகம், தூக்கம் இவைகளை மறந்து காலமெல்லாம் கடவுள் ஸ்துதியிலேயே கழிக்கமாட்டாயா? உன் வாழ்நாளை ஆத்ம ரக்ஷணைக்காகப் பூர்த்தியாய்க் கழிக்காயா?

257. ஞானமடைய முக்கிய விரோதி இந்திரியங்கள்; அவற்றினும் அதிக விரோதி மனம்; அதனினும் அதிக விரோதி புத்தி; அதனினும் மேலானதும் அதிகமானதுமான விரோதி காமம்.

258. இன்னது தமிழிற் குறையென் றியம்பின், அன்னது பன்னூல் அறியாக் குறையே.

259. விவேகம் ஹிருதயத்தில் ஜனித்து நாக்கில் வளர்ந்து அல்லது புஷ்பித்து காரியத்தில் காய்க்கிறது. ஆகா! அதன் அருமை பெருமைகளைக் கவிகளாலும் வர்ணிக்க முடியாது.

260. தடவை தோறும் பத்திரிகைக்குப் புதுபுது வியாஸங்கள் எப்படி எழுதுகிறார்களென்று ஒருவன் ஒரு பத்திராசிரியரைக் கேட்டான். பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்கள் தமது நெஞ்சிலேயே தோன்றுமென்றும், பகவான் பின்னே மறைந்திருந்து யாவற்றையும் எழுதவைத்து நடப்பிக்கின்றாரென்றும் பத்திராசிரியர் விடை கூறினார். (தொடரும்.)

## பதிலுக்குப் பதில்.

உன் பெண்ணிடம் அவள் மாமியை அலக்ஷியம் செய்யும்படி நீ சொல்லித் தந்தால்,—நாளைக்கு உனக்கு வரும் மருமகளும் உன்னை அலக்ஷியமாகத்தான் நடத்துவாள். நீ முன் செய்த தீமையை இப்போது பதிலுக்குப் பதில் அனுபவிக்கவேண்டியதே. எப்போதும் பதிலுக்குப் பதில் எதிலும் உண்டு.

# நட்பு

(555-ம் பக்கத் தொடர்ச்சி.)

**நட்புக் கொள்ளலின் பொதுக் குறிப்புகள்.**

இவ்வாறு ஒரு மனிதனை—அதாவது ஒரு நல்ல மனிதனைப் பல கால் பலவாற்றான் ஆராய்ந்து, அவன் சிநேக பாத்திரனாயிருப்பின், அவனோடு நட்புக்கொண்டு அன்னோன் தன் நற்குணம் தவறா திருப்பானாயின் அவன் சிநேகத்திலிருந்து நம் உயிருள்ளவரை விலகாதிருக்கவேண்டும். மிக்க ஆடம்பரமின்றிக் கொள்ளும் சிநேகமே பொதுவாக நன்மை பயப்பது ; ஆதலால் கீர்த்தியுடைய நண்பனைவிட அறிவுடைய நண்பனையே சிறந்தவனாகக் கொள்ளவேண்டும். ஒரு சிநேகனைக் கொள்ளவும் கொண்டவனை நிலைக்கச் செய்யவும் பலாத்காரம் (கட்டாயப்படுத்துதல்) பிரயோஜனப்படாது. நல்ல வழியில் ஒரு மனிதனின் மனதை வசியப்படுத்தி நண்பனாக்கிக்கொள்ள அறிந்து கொள்வது நன்மையே. நண்பனை அன்பிற்கும் இன்பத்திற்குமே யன்றி மற்றவற்றிற்கு கட்டுப்படாத ஓர் காட்டு மிருகமெனலாம். "சிநேகம் செய்யுமுன் சோதி ; சோதித்துத் தெளிந்தபின் நம்பு" என்பது ஒரு பெரியோர் வாக்கு. ஒழுக்கமும் மரியாதையும் உள்ளவனாய்த் தன்னையே கொடுக்கும் நண்பனுக்குத் தன் உயிரையே வேண்டுமாயினும் உதவத் தயாராயிருக்கவேண்டும்.

**உண்மை நட்பின் வளர்ச்சி.**

மேலே கண்ட வழிகளால் தீர்மானித்துக் கொள்ளப்பட்ட உண்மையான நட்பு 'அவசர வளர்ச்சி'யுடையதல்லவே யாயினும் அது சாதாரணமாய்த் தன் நிலையினின்றும் எக்காலத்தும் நீங்குவதில்லை. அது நற்குண நல்லொழுக்கங்கள் நிறைந்த கண்ணியமான மனங்களில் ஆழமாக வேரூன்றிப் பிறகு, இன்ப சம்பாஷணையா லுண்டாகும் மனோ விருத்தியால் பூரண வளர்ச்சி பெறுகிறது. நட்பாராயுங்கால் இருவரும் பரஸ்பரம் அவரவர் நற்குணங்களாலாகி ருசிக்கப்பட்டு, அவர்கள் மனமென்னும் நிலத்தில் அன்பு விதை வேரூன்றிய பிறகே நட்பாம் விருக்ஷம் விருத்தியாகிறது.

**நட்பை நிலை பெயர்ப்பன.**

இதுவரை நட்புக் கொள்ளவேண்டியதற் கனுகூலமான சாதனங்களைப் பற்றிக் கூறினோம். இனி, நட்பை நிலை நிறுத்துவதில் அனுசரிக்கவேண்டிய சில விதிகளை எடுத்துக் காட்டுவோம். தன் நண்பன் கெட்டகாரியம் செய்வதைப் பார்த்துக்கொண்டு சும்மா விருப்பவன் தம்மிருவருக்கும் பெருங்கேடு விளைவித்துக் கொண்டவனாகிறான்; தோழனுக்காகத் தீச்செயல் புரிபவன் தம்மிருவர் மனத்தையும் ஒருமைப்படுத்தியிருந்த பட்டுக் கயிற்றை எரித்தவனாகிறான். ஈண்டு, "நட்பின் கொழுமுளை பொய் வழங்கி னில்லாகும்" என்பது கவனிக்கத் தக்கது. ஒரு மணற்றரையிற் கட்டப்பட்ட வீட்டைப் புயற்காற்றாவது, பெருமழையாவது நீர்ப் பெருக்காவது முன்பிருந்த அடையாளமேயின்றி எப்படி அடியோடு அழித்துவிடுமோ, அப்படியே, சரியாய் நிலைபெறாத ஆரம்ப நட்பை, திடீரென்று தோன்றும் அதிர்ப்தியும் கோப



மும் அழித்துவிடும். செய்த தவறை ஒப்புக்கொள்ளத் தைரியமில்லாமையும் கோழைத்தனமும் நட்பை மயக்கும் ; பொருளாசை அதைத் தலையெடுக்கவொட்டாது கீழ்ப்படுத்தும். 'மயிர்முனை ஊடாடா நட்பும் பொருள் ஊடாடக் கெடும் ; ஆகையால் நண்பருக்குக் கடன் கொடுத்தல் நட்பை விலைக்கு விற்றுவிடுதல் ஆம். கடனென்று கேட்டாலும் நான் கடன் கொடுக்கிற வழக்கமில்லை யென்று இனாமாகவே கொடுத்துவிடல் நலம். அவநம்பிக்கை, பொறாமை, பிறர் சொல் (பிறரால் நண்பர் பேரில் சொல்லப்படும் கோள்) கேட்டல், இறுமாப்பு, இவையே ஆரம்ப நட்பைக் குலைக்கும் சாதாரண காரணங்களாம், எனவே அறிவு முதிர்ச்சியால் சிரமப்படக் கட்டிய நட்பை, அறியாமை எளிதில் கலைத்துவிடும் என்பது அறியப்படுகிறது.

நற்குண நல்லொழுக்கத்தை யடிப்படையாகக் கொண்ட நட்பு மேலே கண்ட விஷயங்களி லெல்லாம் நிலையானதுதான் ; ஆனால் காதல்—ஸ்திரீகள் விஷயத்தில் அதுவும் நிலைதவறிப்போம். ஏனெனில், அழகு ஒரு மந்திரவாதி ; அதன்முன் எப்படிப்பட்ட மனோவுறுதியும் உருகிப்போகிறது. இன்னும், நம் நண்பர்களுக்குள் ஏற்பட்டுள்ள வேற்றுமையைத் தீர்மானிப்பதிலும் விரோதிகளின் வழக்கத்தைத் தீர்மானித்தல் மேல். ஏனெனில், முன்னதில் நண்பர்களில் ஒருவன் நம்மைப் பகைக்க ஏதுவானாலு மாகலாம் : பின்னதிலோ, விரோதிகளில் ஒருவன் நமக்கு நண்பனாக வழி யிருக்கிறது. "நட்பினய நீர்மை நீங்கல் குற்றந் தரூம் பகை" என்பது இங்கே உய்த்துணரற்பாலது.

(தொடரும்.)

லக்ஷ்மீவேங்கடரமணன்.

---

பிச்சை யெடுப்பதும், பந்துக்கள்போல் பிறர் வீடுகளிற் போஜன காலத்தில் தோன்றி வயிற்றை நிறப்பிக்கொள்வதும் இழிவு. திருடுவதோ அயோக்யதை. தமது உத்யோக ஸ்தலங்களிலிருந்து ரகசியமாய்ப் பல பொருள்களைக் கொண்டு வந்து வீட்டை நிறப்புவது சிலர் இயல்பு. மோசம் செய்வதோ மிகமிக இழிவு. இரவல் பெற விரும்புவோரிற் பலர் மோசத்தில் கை நனைப்போ ராகின்றனர்.

### அதிகம் தராதே.

எட்டணா தரவேண்டிய ஒரு செலவுக்கு நீ ஒரு ரூபாயைத் தந்தாலோ—அந்த ஒரு ரூபாய்க்கும் செலவான கணக்கு உனக்கு வந்துவிடும். அதை நீ கேட்டுக் கொண்டு மவுனமாகவேண்டியதே. ஆதலின், எவ்வளவு தரவேண்டுமோ அவ்வளவே கொடு. அதிலேயே எல்லாச் செலவும் ஆகி மிச்சங்கூட உனக்கு வரும். கணக்காய்த் தருகையில் அதிகம் செலவிட்டதாய்ச் சொல்ல வழியில்லையல்லவா ?

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(537-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 39. அல்லற்பட்டு அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படை.

இப்பழமொழியின் பொருள் தெளிவாய் விளங்கக் கூடியது. நித்தநித்தம் நம் கண்ணெதிரில் நாம் காண்பது. நம்மை விட்டால் வேறு கதியில்லை யென்று நம்மையே பெரிய துணையாக நம்பி சில நெருங்கிய பந்துக்கள் நம் வீட்டிற்கு வந்து தங்கி விடுகிறார்கள். அவர்கள் உண்ணும் அன்னத்திற்குப் பதிலாகக் காலை முதல் மாலை வரையில் வீட்டு வேலைகள் செய்து உழைக்கிறார்கள். என்ன உழைத்த போதிலும் நம்மையே அண்டினவர்க ளென்று நமது மனதில் பட்டுப் போய், அதிலிருந்து ஒரு அலக்ஷிய ஸ்வபாவமும் ஏற்பட்டுப் போவதால், அவர்களின் உழைப்பை நாம் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. நமக்கு உண்டாகிற கோபத்தை யெல்லாம் வேறிடத்தில் காட்ட முடியாமல் அவர்களிடமே சென்று ஆவாரிக்கிறோம். பல கொடுஞ் சொற்களைச் சொல்லி நிஷ்டூரமாய்ப் பேசுகிறோம். எவ்வளவு பேசினாலும் அவர்களுக்காகப் பரிந்து வருவோர் எவருமில்லை. நாமே அவர்களை அலக்ஷியத்து விடுவதில் அது நமது மனைவி மக்களுக்குத் தெரிந்து போய், அவர்கள் அப் பந்துக்களை இன்னும் கேவலமாய் அற்ப கூலிகள் போல் நடத்தத் தொடங்குகிறார்கள். அப்போது அந்த அனாதைகளுக்குத் துக்கம் தொண்டையைப் பிடிக்கிறது. பின்னும், நாம் பேசினாலாவது அவர்களுக்கு அவ்வளவாய் மனதில் தைக்காமல் இரண்டு சொட்டுக் கண்ணீருடன் தங்களின் மனத்தை ஆற்றிக் கொள்கிறார்கள். ஆனால், நமது மனைவி அவர்களுடன் சீறும்போதோ அவர்களுக்கு ஆத்திரம் பொங்கி விடுகிறது. வீட்டுத் தலைவனைச் சேர்ந்த நம்மை அந்த வீட்டில் வாழவந்த பெண் மரியாதை கொடுத்துப் பேசவேண்டிய திருக்க, இப்படியா தாறுமாறாய் வைகிறது என்று ரோஷம் பொங்குகிறார்கள். உடனே மனம் தாளாமல் அழுதும் விடுகிறார்கள். அப்படி அழும் கண்ணீர் வீட்டுக்காரனுடைய க்ஷேமத்துக்கு நல்லதல்ல வென்றும், நம்மை அண்டினோரை அன்புடனே நம்மாலான மட்டும் ஆதரிக்க வேண்டுமென்றும் இந்தப் பழமொழி எடுத்துக் காட்டுகிறது.

தன் தங்கை விதவை யாய்விட்டாளே யென்று துடித்து ஒரு அண்ணன் அன்பின் காரணமாக வாடி, தன் தங்கையின் கணவனது சொத்துக்களைத் தாயாதிகள் கொண்டு போய்விடாதபடி எவ்வளவோ பாடு பட்டு எல்லா சொத்துக்களும் தன் தங்கைக்கே சேரும்படி செய்து தன் வயிற்றுப் பெண்ணாக நினைத்து அவளை ஆதரித்து வருகிறான். இப்படிப்பட்ட அன்பு அண்ணனைப் பிற்காலத்தில் அந்தத் தங்கை விரோதம் செய்து கொண்டு வேறொரு பந்துவுடன் வேறு வீட்டிற்குக் குடிபோய் விடுகிறாள். இங்கே அன்பு அண்ணன், ஐயோ! அந்த நாளில் அவ்வளவு பாடுபட்டேனே,



ஒவ்வொருவரிடமும் போராடி ஒவ்வொரு சொத்தாகச் சேர்ப்பதற்கு அன்னந் தண்ணீரின்றி அலைந்தேனே! அவற்றை யெல்லாம் நினையாமல் இப்போது இப்படி வேறு குடித்தனமாய்ப் போய்விட்டாளே யென்று மனது நொந்து கண்ணீர் விடுகிறான். இந்தக் கண்ணீர் வீண் போகுமா? ஒரு சொட்டுக் கண்ணீர் அவன் தங்கையினது ஒரு கிராமத்தையே அழித்து விடலாம். ஆனால் உடனே அழிந்து போகுமா? அதற்கென்று பிறகு ஒரு காலம் இருக்கவே இருக்கும். வேறு குடித்தனமான தங்கை தனக்குத் துணையாக வைத்துக்கொண்ட பந்துவை மனதார நம்பி விடுகிறாள். அவன் பிரியப்படி செலவிடவும் சம்மதிக்கிறாள். அவன் என்ன சொத்துக்களைச் சேர்ப்பதில் கஷ்டம் பாடுகண்டவனா? நடுவே வந்த வழிப்போக்கன் தானே. மழைக்கு ஒதுங்கினவன் மனைக்குள்ளும் வந்து புகுந்துகொண்டான் என்கிற சங்கதி தானே! தன் இஷ்டப்படிச் செலவிட ஆரம்பிக்கிறான். அதற்கான நண்பர்களும் கூடிக்கொள்கிறார்கள். பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களும் சிநேகமாகிறார்கள். அவன் வெகு கௌரவஸ்தனாய்ப் போய்விடுகிறான். அவனுக்கு வந்த கௌரவ மெல்லாம் தனக்கு வந்ததாகப் பாவித்துத் தங்கை பூரித்துப்போகிறாள். சில வருஷங்கள் வரையில் இந்த நாடகம் நடக்கிறது. சொத்துக்கள் விரைவில் கரைந்துப்போய்க் கடனும் ஏற்பட்டுவிடவே, கடன்கொடுத்தவன் அந்தப் பந்துவையும், அவன் உபநாயகி யென்று இத் தங்கையையும் சேர்த்து இருவர்மீதும் நீதிஸ்தலத்தில் வழக்கெடுக்கிறான்; வீட்டுக்கு ஜப்தியும் கொண்டு வருகிறான். கடைசியில் எல்லா சொத்துக்களும் அழிந்து மண்ணாய்விடுகிறது. கடன் தொல்லைக்குப் பயந்து வேற்றூருக்குப் போகும்படியும் ஆகிவிடுகிறது. அண்ணன் அந்த நாளில் துடித்துக் கலங்கிய கண்ணீர் இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இப்போது தன் செயலைக் காட்டத்தொடங்கி இருந்த செல்வத்தை யெல்லாம் தேய்த்து விடுகிறது. ஆகவே, நொந்துபட்டோரின் கண்ணீர் வெறுமனே போய் விடா தென்பது இப்பழமொழியின் கருத்து. எவர்கள் நம்மீது யதார்த்தமான உள்ளன்பு வைத்துவிட்டனரோ அவர்களை எந்த நாளைக்கும் ஏமாறப் பண்ணலாகாது—கைவிடவும் கூடாது—அவர்களை மனம் நோகப் பேசவும் கூடாது—நாம் வாரி வாரி அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்பதில்லை. யதார்த்தமான உள்ளன்புடனும் அன்புச் சொற்களுடனும் அவர்களிடம் நடந்துகொண்டால் அதுவே அவர்களுக்கு இந்திர பதவி கிடைத்ததுபோல் பூரித்துப் போய்விடுவார்கள். ஆதலின் எல்லா கண்ணீரையும்விட நம்மிடத்து அன்புருவாய் நிற்போரின் கண்ணீருக்கு நாம் மிகவும் பயந்து நடுங்கி அது நமது 'செல்வத்தைத் தேய்க்கும் படை' என அறிந்து, அவ்வாறான ஸம்பவங்கள் ஏதும் நேராதவாறு நாம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும்.

### 40. அழுத்த நெஞ்சன் எவருக்குமாகான், இளகின நெஞ்சன் எவர்க்கும் உதவுவான்.

இதன் கருத்து சுலபம். அன்பு, இரக்கம், இளகிய நெஞ்சம் இல்லாத கடினமான நெஞ்சுள்ளவன் எவருக்கும் எதுவும் செய்யான், எந்த ஆபத்து காலத்துக்கும் உதவான். அன்பு எப்போது அவனிடமில்லையோ அப்போது அவன் கல்மனத்தினனே யாவன். இனி, இளகிய நெஞ்சத்தை

எவரிடத்தில் காணலாம்? அன்புடையாரிடம் மட்டுமே. மனதில் அன்பு இருந்தால் இளகிய நெஞ்சமும் தானே உண்டாய்விடுகின்றது. அத்தகையோன் பிறர்க்கு உபகார புருஷனாய் இருக்கக் கேட்பானேன்?

## 41. அறிவுதரும் வாயும் அன்புரைக்கும் நாவும்.

இவ்விரண்டும் ஒரு குடும்பத் தலைவனுக்குத் தேவை. குடும்பம் என்று இருந்தால் அதில் தவறி நடப்பவர்களும் இல்லாமலிரார். அத் தகையோரைத் திருத்துவதற்குப் புத்தி சொல்லுகையில், சிடு சிடு என்று படாமல் சாந்த பாவமாய் நின்று அன்புடன் கூடிய வார்த்தைகளாலேயே அவர்களின் தவறுதலை எடுத்துக் காண்பித்து ஒழுங்குபடுத்தவேண்டும். அவ்விதம் செய்யின் அவர்களும் நாம் கண்டித்ததை ஒரு வருத்தமாக எண்ணாமல் தங்களின் தவறுதலுக்காகத் தங்களையே நொந்துகொண்டு, நாம் பிரியமாய்ப் பேசித் திருத்த முயன்றதற்காக நம்மீதும் பரம விஸ்வாசம் பாராட்டத் தொடங்குவார்கள். அதனால் நமக்கும் பலனுண்டு, அவர்களும் பிறகு திருந்திவிடுதல் கூடும். இவ்விதமின்றி அன்பற்றுப் போய் கடு கடுத்துப் பேசின் அவர்களும் திருந்தார், தம் குற்றம் உணரார், நமக்கும் மனோ சமாதான மற்றுப் போய்விடும். குடும்பத் தலைவனுக்குச் சொல்லிய குறிப்பே வியாபார ஸ்தலத்துக்கும், உத்தியோக ஸ்தலத்துக்கும் பொருந்தும். வியாபாரத்திலோ உத்தியோகத்திலோ நமக்குக் கீழுள்ள ஒருவர் ஒரு தவறுதலைச் செய்துவிட்டால் மேலே குடும்பத் தலைவனுக்குச் சொல்லிய விதமாக அறிவுதரும் வாயும் அன்புரைக்கும் நாவும்கொண்டு திருத்தப் பார்க்கவேண்டும்.

## 42. அன்புள்ள குணம் அலையில்லா நதி.

அலையில்லா நதி சாந்தமாயும் அமரிக்கையாயும் இருக்கும். அந்த நதியினிடத்து நாம் அஞ்சவேண்டியதில்லை. எந்த அலையும் வந்து நம்மை இழுத்துக் கொண்டு போய்விடாது. விசாரமற்று அந்த நதியில் இறங்கி நீராடலாம். உண்மையான அன்புள்ளோரின் குணமும் அவ் விதமே. அன்புள்ள மனத்தினரிடம் எப்போதும் சாந்தமும், சகிப்புத் தன்மையும், எந்தக் குற்றத்தையும் ஒரு குற்றமாக எண்ணாத பெருந் தன்மையும் குடிகொண்டிருக்கும். அத்தகையோரிடம் நாம் நிர்ப்பயமா யிருக்கலாம். அவர்களை எதற்கும் நம்பலாம். நம்பியும் துணியலாம். அன்புள்ளோர் எப்போதும் அன்பையே வளர்ப்பாராதலின், அவர்கள் ஏதேனும் பேத சிந்தை கொள்வரோ வென்று நாம் கவலைப்பட வேண்டிய தில்லை.

## 43. அன்பற்றார் வாசலிலே பின்பற்றிப் போகாதே.

ஒரு காலத்தில் சிலர் அன்புள்ளவர்களா யிருப்பார்கள். பிறகு வேறு பல காரணங்களால் மனம் மாறி அன்பற்றவர்களாகப் போய்விடுவர். அவ்விதம் அவர்கள் மாறிப்போன பிறகு, பழைய நாளில் அவர்கள் காட்டிய அன்பை நினைத்துக் கொண்டு மறுபடியும் மறுபடியும் அவர்கள் வீடு செல்வது அவமானத்திற் கிடனாகும் என்பது இப் பழமொழியின் கருத்து. ஒருவன் தனது பெண் கணவன் வீட்டில் வாழும் வரையில் அவ்வீட்டாரிடம் எவ்வளவோ அன்பாய் நடந்து கொள்கிறான். அத்தகையோனே அந்தப்



பெண் நடுவில் காலஞ் சென்றுவிட்டால் அவள் வாழ்ந்த வீட்டினரிடத்து முந்திய நாள் வைத்திருந்த அன்பைக் கட்டோடு விட்டுவிடுகிறான். இவ் வித நிலையில் மாறியவனின் வீட்டுக்குப் பழைய நாள் அன்பை எண்ணிச் செல்வது கௌரவமல்ல. இவ்விதமே தன் மனைவியின் நிமித்தமாக அவளைச் சேர்ந்தோரிடம் அன்பு வைக்கும் ஒருவன், அவள் கண்மூடிக் கொண்ட பிறகு முந்திய இடத்தை அடியோடு மறந்து விடுகிறான். அவ் விதம் அன்பு மாறியவன் வீட்டுக்குச் செல்வது மரியாதை யாகுமா? தன் தந்தைக்கு வேண்டியவர்களென்று ஒருவன் அன்பு வைத்து, அந்தத் தந்தை போனபிறகு அவருக்கு வேண்டியவர்களையும் மறந்துவிடுகிறான். இருவரும் வேலை யகப்படாத காலத்தில் வெகு பிரியமான நேசர்களா யிருந்து, பிறகு வேலை கிடைத்தபோது, தனது முந்திய நேசனை தன் ஞாபகத்திலிருந்தும் ஓட்டி விடுகிறான். விவாகத்துக்கு முன் வரையில் மிக்க அன்பா யிருந்தவன், புது மாப்பிள்ளையானதும் பழையவர்களை மறந்து விடுகிறான். இவ்விதமே நெடுகச் சொல்லலாம். இவ்விதம் அன்பற்றுப் போனவர்களிடம், மறுபடியும் அவர்கள் பழைய அன்பைக் காட்டுவார்களென்று எண்ணி அவர்களிடம் செல்லுதல் கேவலப்படவே வைக்கும் என்பது இப் பழமொழியின் கருத்து. (தொடரும்.)

---

பெண்ணைக் கொடுத்து விட்டோமென்று அந்த வீட்டிற்குக் கும்பல் கும்பலாய் அடுத்தடுத்துப்போவது மூடத்தனம். முந்தாநாள் ஒரு பெருங் கூட்டமாய் வந்து பல செலவுகளை வைத்துவிட்டுச் சென்று மறுபடியும் இரண்டு தினங்கள் கழிந்து ஒரு கூட்டமாய் ஓடி வருவது சிறிதேனும் வீட்டுக்காரனுடைய கஷ்டத்தை யுணராத மௌடீகமே யன்றி வேறில்லை. ஒரு காசு சம்பாதிப்பது குதிரைக் கொம்பாயிருக்கையில் இந்தப் பெண் வீட்டாரின் தொல்லையோ கனத்த வாதனை தருகிறது. எதிலும் நிதானம் வேண்டாமா?

### ஒரு பிரபல ஆசிரியர் மற்றொரு ஆசிரியர்க்கு எழுதிய கடிதம்.

நாளையோ ஞாயிறு. இன்று ரூபாய் மணியார்டர் செய்தால் தங்களுக்குத் திங்கட் கிழமைதான் கிடைக்கு மாகையாலும், அதுவரையில் தாங்கள் செலவுக்கின்றிக் கஷ்டப் படக் கூடாதென்று நினைத்தும் இக்கடிதத்திற் குள்ளேயே வைத்து அனுப்புகிறேன். கஷ்டப்பட்டுப் பகல் தூக்கம், இராத் தூக்கமின்றி சம்பாதித்த ரூபாய்க ளாதலாலும், அந்த ரூபாய்கள் போவதும் அப்பேர்ப்பட்ட "கஷ்ட ஜீவி"க்கே யாதலாலும் வழிப்பறி யாகாதென நம்பியே அனுப்புகிறேன். சேர்ந்த விவரத்திற்குத் தயைசெய்து ஒரு கார்டு எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப் பிரதாபன்**<br>**(Registered.)** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |

# காலத்தின் ஓட்டத்திலே நாட்டம்!

## II



உள்ள காலத்தைப் போபோவெனத் துரத்திவிட்டு, இனி எப்போதோ வரப் போகிற, அப்படி வருவதும் சந்தேகமாயிருக்கிற காலத்தின் மீதே நோக்காய் ஆவென்று வாயைத் திறந்து கொண்டு நிற்கும் என்சீராளர்களே! உங்களுக்கு விகடன் சொல்ல வந்த ஒரு சங்கதியுண்டு. ஒரு மனிதனோ, வஸ்துவோ, செய்தியோ, காலமோ எப்படி நமது கண்களுக்குத் தோன்றுகின்றனவோ, அந்தப்படி அது உண்மையில் இருக்கவில்லை. எவனை நல்ல மனிதனல்லவென்று நினைத்தார்களோ, பகைத்தார்களோ அவனே இப்போது உதவுகிறான். எந்தக் காலத்தை நல்ல காலமல்லவென்று முன்பு நினைத்து வெறுத்தார்களோ அந்தக் காலத்தைத் தான் இப்போது ஆநந்தமான காலமென்று நினைக்கும்படியாகிவிடுகிறது. முன்பு வெறுத்த காலத்தில் கூழுக்கு உப்பைப் போட்டுக் குடித்தோமானாலும், நமக்கு வேண்டிய கண்ணுக்குக் கண்ணான, உயிருக்கு உயிரான, நமது க்ஷேமத்தைப் பார்த்து ஸந்தோஷப்படும்படியான, நமக்கு வேண்டிய பிராணதாரமானவர்களெல்லாம், அந்தப் பழய காலத்தில் நம்மைச் சுற்றிலும் இருந்து கொண்டு நமக்கு வெகு பலத்தையும், புஷ்டியையும், திருப்தி மகிழ்வையும் தந்து கொண்டிருந்தார்கள். அதை நினைக்கும்போது அந்தக் காலமே மேலென்று ஒண்டியாயிருக்கிற இப்பொழுது நமக்குத் தோன்றுகிறது. தற்சமயம் நாம் பாலுக்குச் சர்க்கரையிட்டு உண்ணும் செல்வ நிலையிலுயர்ந்து காணப்படினும், நாம் ஆசை வைத்திருந்தவர்களையெல்லாம் காலதூதனுக்கு ஒப்புவித்து விட்டுப் புது மனுஷனைப் புதிய உறவினர்களோடு ஒட்டி வாழ்வதாயிருக்கிறோம். இந்தப் புதிய உறவின் மகிழ்ச்சி வேறு கதியின்றி நாமே வலுவில் உண்டாக்கிக் கொண்ட ஒரு செயற்கைச் சந்தோஷமேயன்றி, முன்னதைப்



போல் இயற்கையிலேயே தானாக ஆசை ஊறிச் சிறந்து விளங்கிய அந்தப் பழய உறவு மனிதர்களுடன் இருந்த பூரிப்புக்குச் சமமாகுமோ? அவர்களையெல்லாம் இப்பொழுது நினைத்துக்கொண்டால் அடிவயிற்றில் பகீரென்கிறது! ஒரு ஜனமா, இரண்டு ஜனமா, ஒரு ஆளா, இரண்டு ஆளா, எத்தனை பேர்கள் கூட்டமாக நம்மைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள்? எவ்வளவு பேர்கள் நமது கைக்கு ஊன்றுகோல் போலிருந்து உதவினார்கள்? நமது வீட்டில் ஒரு வேளை ஆகாரத்திற்கு நேரமாய் விட்டால் எத்தனை வீடுகளுக்குப் போய் உண்ணக் கூடியதாயிருந்தது? அவ்வளவு ஜனக்கட்டின் இடையிலே நாம் கூழைக் குடித்து வந்திருந்த போதிலும், நாலுபேர் வேண்டியவர்களோடு கூட இருந்து கொண்டும் அதைப் புசித்து வந்தோம். அதுவும் அப்போது நமது வாய்க்கு இனிப்பாகத்தான் வயிறு குளிர இருந்தது. ஆனால், என்னவோ ஒரு பாழும் ஆசை, இந்தக் கூழ் தொலைந்து, பாலன்னம் புசிக்கும் காலம் வராதாவென்று ஒரு பக்கம் ஆவற்பட்டுக்கொண்டிருந்தது. அந்த ஒரு ஆவல் அந்தப் பழய காலத்தை ஒரு அதிர்ப்திகரமாகவும் நமக்குத் தோற்ற வைத்து, அதற்காக ஒரு மனக்குறைபட்டுக் கொள்ளும்படியும் பண்ணிற்று. அந்த மனக் குறையிலே நம்மைச் சுற்றி நமக்குக் கைபிடிச் சுவராய்ப் பலத்தைத் தந்து கொண்டிருந்தவர்களை மறந்துவிட்டு, ஏதோ பாலன்னம் புசிக்க விரும்பிய ஒரு பேதமைத் தன்மையான எண்ணத்தை மட்டுமே கொண்டு, அந்த நினைவையே பெரிதும் வளர்த்து வந்தோம். அதனால் அந்த நாளில் நம்மைச் சுற்றிக்கொண்டு நின்ற பிராணதார மானவர்களின் அருமையை அவ்வளவாக மதிக்கத் தவறிப்போனோம். இப்போது பாலன்னம் அருந்தும் இந்தக் காலத்தில் நாம் அனுபவிக்கும் மகிழ்வோடு நமது முந்திய பழய காலத்தை வைத்துப் பார்த்தால், இப்போது ஒண்டி மரமாய் அநுபவிக்கும் இன்பம் அந்தப் பழய இன்பச் சுவைக்கு ஈடு காணாதென்று மனஞ்சலிக்கும்படியாகிறது. ஆனதால் தான் எது நமது கண்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ அந்தப்படி அது இல்லையென்று விகடனும் சொல்ல வந்தேன். பழய காலத்தை அப்போது வெறுத்தோம்; அது உண்மையில் வெறுக்கத்தக்கதாகுமா? இப்போதைய காலத்தை அப்போது இன்பமென நினைத்தோம்; உண்மையில் இப்போது இது சலிப்பற்ற திருப்திகரமான இன்பமுள்ள காலமாய்த் தோற்றுகிறதா? கடவுள் எந்தெந்த காலத்தில் எப்படியெப்படிப் படியளக்கிறாரோ அதில் திருப்தி கொள்வதே மேல். இப்படி விகடன் சொல்லிவிட்டதிலிருந்தும், மனுஷ்ய முற்போக்குக்கான ஒரு மேலான திருஷ்டியை—எதிர்பார்ப்பை ஒவ்வொருவரும் கொள்ள வேண்டுமென்ற உயரிய லக்ஷ்யத்தை மறுத்துப் பேச வந்ததாய் விபரீதமாக நினைத்துவிடக் கூடாது. இனி, சென்ற மாதம் பாதியில் விட்ட சங்கதியைத் தொட்டுக் கொள்ளுகிறேன்.

அய்யனே, கேட்கிறீர்களா! பலஹீனன், நோயாளி, சஞ்சலஞ் சூழ்ந்தவன், சோம்பேறி மத்தன், தரித்திரன், அதிர்ஷ்ட ஹீனன், கலகத்தில் சிக்கியவன்—முதலானவர்களெல்லாம் ஒவ்வொரு நாளும் எப்படியாவது ஓடிப் போக வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறார்கள்! ஒவ்வொரு மனிதனும் காலை போஜனம் உண்டதும் பகல் போஜனத்தை நாடுகிறான். அதற்குப்

பிறகு மாலை - இரவுகளை எதிர் பார்த்துப் பசி பசி என்கிறான்; தன வந்தனோ தனக்கு உல்லாஸமான நாள்கள், குதிரைப் பந்தயங்கள் முதலியன எப்போது வருமென எதிர் பார்க்கிறான்! கௌரவப் பட்டப் பிரியர்களோ இராஜா பிறந்த நாள், புது வருட நாள்களை எதிர்நோக்கி பட்ட ஜாப்தாவைப் பார்க்க ஆவற்படுகிறார்கள்!

***

இனி, விபசாரக் கள்வன் என்றைக்கு இருட்டு நாள் வருமோ, சந்திரன் நாள் என்று தாண்டி யோடிப் போகுமோ வென்று கண் போட்டுக் கொண்டிருக்கிறான். திருடன் எப்போது பகல் ஓடிப் போகுமோ, இருட்டானாலும் நடு ஜாமம் எப்போதாகுமோ வென்று தாப்பு கொண்டிருக்கிறான்! ஆராதூரி வீண்செலவுக்காரப் பையன்கள் தாய் தகப்பன் என்றைக்கு சாவார்களோ, ஆஸ்தி யெல்லாம் என்றைக்குக் கைப்பற்றுவோமோ வென்று அந்த நாளைக் கவனிக்கிறார்கள்! திருட்டு மாப்பிள்ளைக்காரி தன் புருஷனுக்கு என்றைக்கு வெளியூர் போகும்படி வேலை வருமோ, அல்லது என்றைக்குச் சாவானோ வென்று ஏக்க மிடுகிறாள். சோர நாயகனும் அவ்விதமே தன் ஆசை நாயகி வரச்சொன்ன நேரம் இன்னும் ஸமீபமாக வில்லையே, பகல் நாளே, உன் இழவெடுக்க, நீ சீக்கிரம் ஓடிப்போயேன் என்று அங்கலாய்க்கிறான்! வீட்டுக்குள்ளேயே சொந்தக்காரர்களா யிருந்து கொண்டு வீட்டிலுள்ள பெண்களைக் கெடுத்துவிடும் தீரர்கள் வீட்டார் வெளிவேலையாய்ச் செல்லுகிற நல்ல பொழுது வாராதா வென்று உள்ள பொழுதை வெறுக்கிறார்கள்!

***

தாரமிழந்தவர்கள் மறுதார நினைவில் எப்போது மீண்டும் புது மாப்பிள்ளை யாவதோ வென்று அந்த நாளிலேயே கண்ணோட்ட மிடுகிறார்கள்! சிறு பெண்ணைக் கல்யாணம் செய்த பையனும், பெரிய கிழ வயதில் குட்டிச் சிறுமியை மணந்தவர்களும், பெண் என்றைக்குப் பெரியவளாவாளோ வென்று அதே ஏக்கமாய் நடுவில் உள்ள நாட்களை நிந்திக்கிறார்கள்! கிழவனைக் கட்டிக் கொண்ட சிறுக்கி, கிழவன் என்றைக்குச் சாவானோ, கட்டில் என்றைக்கு ஒழியுமோ என்றபடி இந்தக் கிழ நாற்றம் தொலைந்து தலை முழுகி நமது 'தாத்தா புருஷ'னுடைய ஆஸ்தியை யெல்லாம் சுருட்டிக் கொண்டு தாய்வீடு போய்ச் சேர்ந்து நமது இஷ்டப்படி எப்போது இருப்போமோ வென்று அந்த நாளை எதிர்பார்க்கிறாள்! அந்த நாள் வெகு தூரத்தில் போனால் தாத்தாவுக்கு நஞ்சு இட நினைக்கிறாள்! கட்டில் சுகமில்லாமல் கழுத்திலே வெட்டிக்கு இரண்டு பவுன் தாலி வீணாக எதற்கு என்று அதை வீசி எறியும் நாளைக் கஷ்டத்தோடு முக்கி எதிர்பார்க்கிறாள்!

***

சமுசார சல்லியத்தைத் தாங்கக் கூடாதவர்கள் நமக்குச் சாவு எப்போது வருமோ வென்று அந்த நாளை நினைந்து உருகுகிறார்கள்! நல்லவர்களெல்லாம் போகிறார்களே, நாங்கள் எதுக்கு இந்தக் கண்ணீருடனே இருக்க என்று நாளை நிந்தித்து அலறுகிறார்கள்! ஏறுமாறான பெண்பேயைக் கொண்டவன் இவளைத் தொலைத்து வேறொருத்தியைக் கொள்ளுங் காலம் எப்போதோ என்று அந்த நாளில் கருத்தைச் செலுத்துகிறான். வக்கீல் வீட்டுக்குப் போனவர்களும்,



வழக்கு தொடுத்தவர்களும், கோர்ட்டுத் தீர்ப்பு நாளுக்கு எதிர்நோக்கி இடையே உள்ள நாள் எப்போது தொலையுமோ வென்கிறார்கள். வியாதிப் படுக்கையில் படுத்தவர்கள் தாங்கள் குணப்பட்டு எழுந்திருக்கும் நாளை நோக்குகிறார்கள்! அமாவாசை - பௌர்ணமியன்று, அந்த நாள் எப்படியாவது போய்விடாதா - நோயாளி சாவுக்குத் தப்பித்துக் கொள்ள மாட்டானா வென்று ஆவலாதி கொள்கிறார்கள்! எப்போது மைனர் பிராயம் தொலையுமோ, எப்போது சொத்துக்களை யொப்புக் கொள்வோமோ வென்று நினைக்கிறார்கள்! கணவன் வீட்டிலுள்ள பெண்கள் எப்போது தாய் வீட்டுக்கு ஆநந்தமாய்ப் போவோமோ என்று எதிர்பார்க்கிறார்கள்! இவ்விதமே தாய்வீடு சென்ற மனைவி எப்போது வருவாளோ வென்று ஆடவர்கள் நாட்களை சீக்கிரம் ஒழிக்கிறார்கள்!

***

உலகத்தை யெல்லாம் வெறுத்து உடல் வதங்கிக் குந்திக்கொண்டிருக்கும் முனீந்திரர்கள் கூட, நாளென்றைக்கு ஓடிப்போகுமோ, நல்ல பதவி என்றைக்குக் கிட்டுமோ வென்று தவமிருந்து நோக்குகிறார்கள்! சில சிஷ்ய வர்க்கங்கள் குருவின் உபதேசத்திற்கு நாள் என்று வருமோ என்று நாளை ஓட்டி விடவே பார்க்கிறார்கள். சில பூசாரி ஆசாரிகள் திருவிழா நாட்களுக்கு அவ்வளவு தக்ஷிணைகள் வருமே, இந்த நாளைக்கு இவ்வளவு பணம் சம்பாதிக்கலாமே, அவன் செத்த நாள் வந்தால் சோமன் வேஷ்டி கிடைக்குமே, இவன் செத்த நாள் வந்தால் மூன்று மாதச் சாப்பாட்டுக்கு அரிசி பருப்பு கிடைக்குமே, திதி என்றைக்கு வருமோ, திவசம் என்றைக்கு நெருங்குமோ, அமாவாசை என்றைக்கு முந்திக்கொள்ளுமோ, சங்கராந்தி எப்போதோ, பெருநாள் — திருநாள் என்றைக்கு வருமோ வென்று நாள் ஓட்டத்தையே கவனிக்கிறார்கள்! இவ்விதமே தேசாபிமானிகளும் தாங்கள் பிறந்த இந்தியாவுக்கு இங்கிலாந்து ஸ்வராஜ்யம் எப்போது கொடுக்குமோ, மகாத்மா காந்தி மறுபடியும் ராஜீய விஷயங்களில் எப்போது தலையிட்டுக் கொண்டு முன்போல் புதியதாக ஒரு கிளர்ச்சியைத் தொடங்குவாரோ, என்றைக்கு ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை கைகூடி வருமோ, என்று நாட்டின் பஞ்சம் தொலைந்து, இவ்விடமே கைத்தொழில்கள் வளர்ந்து, கதர் எங்கும் பரவிச் செல்வ பூமியாகுமோ; சென்னையில் காங்கிரஸ் கூடும் டிசம்பர் மாதம் எப்போது வருமோ, அந்தக் காட்சியை எப்போது கண்குளிரப் பார்ப்போமோ வென்று அவர்களும் நாளோட்டத்தையே கவனிக்கிறார்கள்! கடைசியாக, விகடப் பிரதாபனாகிய நானும் என் தங்கை "ஆநந்த குணபோதினி" இனி பாக்கி யிருக்கிற 29 - நாட்களும் கழிந்து இரண்டு வயது குழந்தையாக எப்போது ஆவாளோ, இப்போது நடக்கிற பங்குனி மாதம் எப்போது போகுமோ, புதிய சித்திரை மாதமும், அறுபது ஆண்டுகளின் முதலாவது வருடமான பிரபவ வருஷமும் எப்போது வருமோ, என்று காலத்தின் ஓட்டத்திலே நாட்டமாய் நாட்கள் ஓடிப்போகவேண்டுமென்பதிலேயே சிந்தையாய் எதிர்நோக்கி யிருக்கிறேன்.

***

போன காலத்தை எட்டிப் பிடிக்க முடியாததாய் இருந்தபோதிலும், காலம் எவ்வளவோ அருமையாய்ப் பாவிக்கப்பட்ட போதிலும்,

அதை ஓட்டி விடவே நினைக்கும் உலகப் போக்கை எண்ணுகையில் தான் விகடனுக்கு வெகு வெகு சிரிப்பாயும் விநோதக் கூத்தாயும், இப்படியும் உலகம் இருக்கிறதே யென்று ஆச்சரியமாயும் தோன்றியதை அப்படியே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். காலத்தை வீணாக்காமல் ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு பவுன் மணியாகப் பாவிக்கிறவனே பாக்கியவான். உள்ள உண்மையின் ஞானத்தைக் குறிப்பிட்டு விட்டேன், இனி உங்கள் பாடு! ராம்! ராம்! சுபம்! கு!! சுவாஹா!!!

---

இன்சொல்லால் உலகம் மகிழும். வன்சொல்லால் மனம் வருந்தும். நாய் குரைப்பதும் நரி ஊளையிடுவதும் இன்பமாமோ? அது போல் பிறரைக் கண்டு சீறி விழுவோரின் ஸகவாஸம் விரும்பத் தக்கதன்று. அடுக்கடுக்கான வன்சொற்களை வழங்கி வந்துள்ள எளிய விருந்தினரின் மனத்தைப் புண்படுத்துவது சில வீடுகளில் வழக்கம்.

---

தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று ஸாதிக்கும் மனிதன் தன்னிலும் புத்தியில் உயர்ந்தவன் சொல்லும் வார்த்தையை அங்கீகரியான். அவனுக்குப் பிறருடைய அபிப்பிராயமெல்லாம் பிசகாய்த் தோன்றும். தான் கூறுவது அறிவீனமென்பதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளான். இதற்குக் காரணம் பிடிவாதம் என்னும் பிசாசு அவனைப் பீடித்திருப்பதே யன்றி வேறில்லை.

---

உத்தமியை வருத்தியதால் இராவணேசுவரன் மாண்டான். இனி பிறக்கும் மனிதர்களில் எவரேனும் உத்தமியை உபத்திரவித்தால் அவர்கட்கும் ராவணேசுவரன் கதிதானென்று மெய்ப்பிக்கும் பொருட்டு ஸீதை பிறந்தாள். இப்படியே பாரதத்திலும் ஸ்திரீ நிந்தகர்களான துஷ்டர்கள் அங்கங்கே பெண்களின் வயிற்றுக் கொதிப்பால் நிர்மூலமாயிருக்கிறார்கள். பெண்மணிகளை நிந்திப்பது ஒரு கௌரவமென நினைக்கும் மந்தமதிகளின் மடமை தான் என்னே!

### வஞ்சனை !

நெடுங்காலம் உழைத்த ஒருவனை வஞ்சனை செய்து விலக்கித் தான் லாபமடைய நினைப்பவன், அந்த நிமிஷத்துக்கு சுகமும் வெற்றியும் கொள்பவன்போல் தோற்றப்படுவான். ஆனால் பிறகோ அந்த வஞ்சனை அவனை அடியோடு கெடுத்து அவன் குடும்பத்தைக் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்க வைத்துவிடும். அவனது ஆயுளும் குன்றும். வஞ்சனையின் சாபம் என்றுமே வீண்போவதில்லை. குடும்ப வஞ்சனையோ இன்னும் வெகு கோரத்தில் முடிவுறும்.

## பங்குனி யுத்திரம்

பங்குனி மாதம் சுக்கில பக்ஷத்தில் பங்குனி யுத்திரம் என்கிற ஆதி பிரஹ்மோத்ஸவம் எங்கும் கொண்டாடப் படுகின்றது. இவ்வுத்ஸவத்திற் கென்றே 'ப்ரணய கலஹம்' என்று ஒரு சிறு புஸ்தகமும் ஸ்ரீரங்கத்தில் விற்கப்படுவதுடன், அதிற் கண்டவாறு ஸ்ரீரங்க நாதனுக்கும், ஸ்ரீரங்க நாச்சியாருக்கும் ஸம்வாதங்கள் நடைபெற்றுப் பிறகு சமாதானம் செய்யப்படுகின்றன. வெளித் தோற்றத்தில் நாயகனுக்கும் நாயகிக்கும் தர்க்கம் போல் இது தோற்றினும் அவ்வளவும் ஞானார்த்தமாகும்.

பக்திப் பிரேமையிலே நாயகா நாயகி அவஸ்தை யென்ப தொன்றுண்டு. அதாவது தன்னை நாயகியாகவும் பகவானை நாயகனாகவும் பாவித்து, அவ்விதமான பாவனையை உண்மையாகவே தம் மனத்துள் கொண்டு தம்மை மறந்த நிலையில் அந்த அவஸ்தையைத் தாமே அனுபவித்தலாகும். பக்தர் தம்மை நாயகியாகப் பாவித்துக் கொண்டளவிலே, நாயகனாகிய பகவானிடத்து அத்யந்த காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குகின்றார். அவரைப் பிரிந்திருக்கும் இமையளவு நேரமும் எல்லையற்ற காலமாய்ப் பெருகிப் பிரிவாற்றாமை அதிகரித்துச் சோகிக்கச் செய்கின்றது. அந்நிலையிலே நாயகராகிய பகவான் திடீரென்று மறைந்து விடுகின்றார். நாயகி அவஸ்தையில் அப்பிரிவைத் தாளாது நாயகராகிய பகவானை எங்கே எங்கே யென்று தேடி அலறவைக்கின்றது. மறு கணத்தில் பகவான் எதிர் தோன்றுகின்றார். உடனே நாயகியாகிய பக்தர் நாயகராகிய பகவானை நோக்கி என்னை விட்டு வேறெந்தப் பெண்மணி யிடத்திலேனும் சென்றிருந்தீரா, எங்கே இதுவரை மறைந்து நின்றீர், அந்தப் பெண்ணிடமே போகிறது தானே, இந்த நங்கை யிடத்திற்கு என் வந்தீர், அவளிடமே போம் என்று திரஸ்கரித்துக் கோபிக்கின்றார்.

நாயகராகிய பகவான் மிக்க பிரீதியுடன் தாம் பக்தர்களை ரக்ஷித்தற் பொருட்டு வெளியிற் சென்றதாயும், வேறெந்த நங்கையிடமும் சென்றதில்லை யென்றும், எவ்வளவோ பிரேமையுடன் தாம் வந்திருக்கத் தம்மைப் போம் போம் என்று திரஸ்கரிப்பது நியாயமல்லவென்றும், தம்மைக் காதலோடும் ஏற்றுக் கொள்ளவேண்டு மென்றும் வேண்டுகின்றார்.

அதற்கு நாயகியாகிய பக்தர் அன்னிய ஸ்திரீ யிடத்திலே சென்று வந்ததற் குரிய சின்னங்கள் தம் திருமேனிமீது நன்றாகத் தோற்றிக் கொண்டிருக்கையில், தாம் அவ்விதம் செல்லவில்லை யென்பது நம்பத் தகுந்ததோ, ஆதலின் அங்கேயோ போம் போம் என்கிறார்.

அதற்குப் நாயகராகிய பகவான் தம் திருமேனியில் விளங்கும் மாறுதல்கள் ஒவ்வொன்றுக்கும் தக்க காரணங்கள் கூறி, தாம் எந்த சுந்தரியிடமும் செல்லவில்லை யென்றும், தம்மை ஏற்றுக் கொள்ளும்படியும் வேண்டுகின்றார்.

அதற்குப் பக்தராகிய நாயகியார் தாம் பகவானாகிய நாயகருக்கு நேற்று எவ்வளவோ பிரீதியுடன்

பணிவிடைகள் புரிந்ததாயும், அவற்றை யெல்லாம் உவப்புடன் ஏற்காமல் எங்கோ நினைவுடன் ஒரு மாதிரியான போக்கில் பகவான் காணப்பட்டதாயும், பின்பு அவருடன் ஸயனித்து நித்திரையில் இருக்கும் ஸமயம் பகவான் மெதுவாக எழுந்து எங்கோ சென்றுவிட்டதாயும், அதன்பின் நித்திரை தெளிந்து நாயகரைப் பக்கத்திலே காணாமையால் திடுக்கிட்டுப் பலரையனுப்பித் தேடச் செய்ததில், மற்றொரு மோகனாங்கியின் இல்லத்தில் ஆனந்த பரவசராய் கச்சணி பொன்முலை கண்ணாலழைத்துக் கனிவாய் கொடுத்தும் மதன ஸல்லாபத்திலே யுள்ளாரென்றும் தெரியவந்ததென்றும், அதைக் கேட்டது முதல் தமது மனம் உலை மெழுகா யிருக்கிறதென்றும், ஆதலின் ஒன்றும் சொல்லாமலே அந்தப் பெண்ணிடமே மறுபடியும் செல்லுமாறு தெரிவித்து, போம் போம் என்று திரஸ்கரிக்கின்றார்.

அதற்கு நாயகராகிய பகவான் தாம் அவ்விதம் எந்தச்சுந்தரியிடமும் செல்லவில்லை யென்றும், உலகத்திலே ஒருவருக்கொருவர் ஸம்சயப்பட்டால், அந்த ஸம்சயம் ஒரு ப்ரகாரத்திலும் தீராமற் போனால் பிரமாணத்தாலே தீர்த்துக் கொள்வார்கள்; அந்தப்படி பிரமாணம் பண்ணித் தருகிறோம்; நாம் தேவாதி தேவனானபடியினாலே தேவதைகளைத் தாண்டித் தருகிறோம், ஸமுத்திரத்திலே முழுகுகிறோம், அக்கினிப் பிரவேஸம் பண்ணுகிறோம், பாம்புக் குடத்திலே கையிடுகிறோம், காய்ச்சிய நெய்க் குடத்திலே கையிடுகிறோம், இப்படிப்பட்ட பிரமாணங்களை யானாலும் வாங்கிக் கொண்டு தம்மை ஏற்றருள்கவென்று பக்தராகிய நாயகியை வேண்டுகின்றார்.

அதற்கு, பக்தராகிய நாயகியார் அந்தப் பிரமாணங்கள் பரிஹாஸ பிரமாணங்களென்று கூறிப் பின்வருமாறு மறுக்கிறார். தமது திருவடிகளை எப்போது காணப்போகின்றோமென்று ஸதா பிரார்த்தித்துக்கொண்டிருக்கும் தேவர்களைத் தாண்டித் தருகிறோமென்றால் அவர்கள் அதற்கு மறுப்பார்களா? ப்ரளய காலத்திலே ஸகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து ஒரு ஆலைத் தளிரிலே கண்வளர்ந்த தமக்கு ஸமுத்திரத்திலே முழுகுகிறது அருமையா? அக்கினிப் பிரவேஸத்திற்கு அக்கினி சுடுமா? ஸதா காலமும் ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருக்கும் தமக்கு பாம்புக் குடத்திலே கையிடின் பாம்பு கடிக்குமா? கிருஷ்ணாவதாரத்திலே நெய்யுண்ட தமக்கு நெய்க் குடத்திலே கையிடுவது அருமையா? இப்படிப்பட்டிருக்கிற பரிஹாஸ பிரமாணங்களை யெல்லாம் தமக்கு ஸரிப்போன விடத்திலே தானே பண்ணிக்கொண்டு மறுபடியும் அந்தச் சுந்தரியிடமே செல்லுமாறு திரஸ்கரிக்கின்றார்.

அதற்கு நாயகராகிய பகவான் தாம் எவ்வளவோ ஸமாதானம் சொல்லியும், பிரமாணங்கள் செய்து தருவதாகப் புகன்றும் எதற்குமே ஸம்மதிக்காமல், சற்றும் திருவுள்ளத்தில் இரக்கம் வாராமல் கோபித்து நிற்பின் தமக்கு என்ன கதி யிருக்கிறதென்றும், வேறு புகலிடமேதென்றும், பகவான் தமது நாயகியாரின் சந்நிதி வாசலிலே தள்ளுபட்டுக் கொண்டிருக்கிறாரென்ற அவமானம் நாயகியாருக்கே யன்றி தமக்கு இல்லையென்றும் கூறி மறுபடியும் ஸாந்தப்படுத்த முயல்கிறார். அந்த வகையிலும் நாயகியாரின் சினம் ஆறாதபோக, நாயகியாரின்



தந்தையைத் தருவித்து ஸமரஸப்படுத்துமாறு வேண்ட, அதன் பின் நாயகியாரும் ஸாந்தமுற்று நாயகராகிய பகவானைப் பிரேம பூர்வமாய் புன்னகை யொளிர்வதனத்தோடே ஏற்றுத் தழுவிக் கொள்கின்றார்.

* * *

இவ்வாறான ஒரு மனோபாவ நாயகா நாயகி அவஸ்தையை மீறிய அத்தியந்த பக்திப் பிரேமையாலே இவ்வுலகப் பிரக்ஞையை யொழித்துத் தம்மை மறந்த நிலையிலே பகவானைத் தமது சொந்த சொத்தாகக் கொண்டு ஆழ்வார்கள் அநுபவித்துள்ளார். பக்திப் பிரேமையின் மிகுதியாலே பகவானிடத்துக் கோபித்தல், பிரிவாற்றாது துடித்தல், மல்லிகையே மாலனைக் கண்டனையா—முல்லைச் செடியே முகுந்தனைக் கண்டனையா—பாரிஜாதமே பரந்தாமனைக் கண்டனையா—மயிலினமே எங்கள் மாயவனைக் கண்டனையா—தாமரைப்பூவே என் தயாநாதனைக் கண்டனையா-என்று நாலா திசைகளிலும் பகவானைத் தேடித் தேடி யலைந்து அலுத்து மூர்ச்சித்தல், மீண்டும் எழுந்து மறுபடியும் தேடல் முதலிய இவ்வளவும் இவ்வுலகப் பிரக்ஞையே முற்றும் ஒழிந்த நிலையில், யாவுமே மறந்த தன்மையில், மானஸீகமாய் பகவானுடன் ரமித்து அநுபவித்தலாகும். இது நம்மாழ்வார் பாடியருளிய "மின்னிடை மடவார்" என்ற பாசுரத்தில் வருகின்றது. அந்தப் பக்திப் பிரேமாவஸ்தையை யாவரும் உணர்ந்து உய்யுமாறு இந்தப் பங்குனி யுத்திர மஹோத்ஸவத்தில் நடத்திக் காண்பிக்கப்படுகின்றது. இது பரமார்த்திகமான ஞான ஸாரமாகும். இத்தகைய மஹோத்க்ருஷ்டமான பக்திவலையிற் பட்டுப் பரமாத்மாவுடன் ஒன்று கலந்தாரது பாக்கியமே பாக்கியம். எந்த உத்ஸவத்தையும் ஞானபரமாகக் கொண்டு சிந்திப்பின் அனைத்தும் ஆத்மாக்கள் கடைத்தேறும் வண்ணமாகவே அமைக்கப்பட்டுள்ளன வென்பது புலனாகும். இதுகாறும் கூறியவாற்றால் பங்குனி யுத்திர உத்ஸவத்தின் விவரத்தினை யொருவாறு உணர்க.

### உட்கருத்து இல்லாமலா?

வெளியே புன்சிரிப்பு தான். உள்ளே ஒரு உத்தேசம் தான். அதனால்தான் பிரிந்து தூரம்போன அவர்கள் இப்போது நெருங்கிக்கொண்டு உன்னோடு அவ்வளவு தொடர்ந்து குலாவுவது! அந்தக் குலாவுகை அன்பு முற்றிப்போயல்ல. இதுவரை அவர்களிடம் உண்டாகாத அன்பு இப்பொழுது திடீர் என்று உண்டாய்விடப் போகிறதா? அதெல்லாம் வெறும் மேற்பூச்சு! வீணுக்கு உனக்குச் செலவுகள் தான். என்ன செலவிட்டும் கடைசியில் விரோதமே முடிவு. துவக்கத்திலேயே இதில் நீ எச்சரிக்கை பெறு. அது உனக்குப் பின்னுக்கு நல்லது.




## திவான் லோடபடசிங் பஹதூர்

[ஆசிரியர்—ஸ்ரீமான் வடுவூர் கே. துரைஸாமி ஐயங்காரவர்கள் பி. ஏ. விலை அணா 12. கே. விஜயம் கம்பெனி, இராயப்பேட்டை போஸ்ட், சென்னை.]

நகைச் சுவை பொதிந்த கதைகள் தமிழ் மொழியில் அபூர்வம். "கமலாம்பாள்" நாவலில் சில பக்கங்களில் நகைச்சுவை காணப்படுகின்றது. பின்பு அது வேதாந்தத்தில் மாறி விடுகிறது. இந்த திவான் பகதூர் கதையில் நகைச் சுவை அம்ஸம் இருப்பதன்றி கற்பனையமைப்பும் மிக்க விநோதமாயுள்ளது. இறுதியில் உத்தமமான போதகத்துடன் பூர்த்தி பெறுகின்றது. உலக அநுபவங்களும் இதிற் காணலாம். சரித்திராம்ஸமான ஒரு சிறு புள்ளியை ஆதாரவாகக் கொண்டு மிக்க சாதுர்யமாய் இக்கதை அழகு படுத்தப்பட் டிருக்கின்றது. இவ்வாசிரியரின் நாவல்களில் இது ஒரு புது மாதிரி.

## ஞானசௌந்தரி

[ஆசிரியர்—ஸ்ரீமான் ச. செல்வராஜு ரெட்டியார் அவர்கள், பி. ஏ., எல். டி. விலை ரூபா 1. செல்வம் அண்டு கம்பெனி, 480, சில்வர் தெரு பரங்கிமலை.]

ஞானசௌந்தரியின் சரித்திரம் யாவருக்கும் தெரியும். அது நாடக ரூபமாய் எங்கும் நடிக்கப் படுகின்றது. பக்தி ரஸமும் சோகரஸமும் மிகுந்து காணப்படுவது. கன்மனத்தையும் கரைய வைப்பது. இதனை வசன வடிவமாக ஆசிரியர் எழுதிச் சென்றுள்ளார். கிறிஸ்துவத் தமிழில் கிறிஸ்துவ நடையில், கிறிஸ்துவ மரபினர்க்குப் பயன்படும் வண்ணமாக ஆக்கப்பட்டு, ஆங்காங்கு சொற்சுவை பொருட்சுவை பொருந்திய பாடல்களுடன் மிகு திவ்யமாக முடிக்கப்பட்டுள்ளது. கௌரவமான தமிழ் நடை. தெரிந்த கதையாயினும் வாசிக்கும் பொழுது நூதன கதை போன்றும் நன்கு ருசிக்கின்றது.

### மனம் குவியும் வேளை.

மனம் கலந்த ஒருவருக்குப் பதில் கடிதம் எழுத வெகு நாளாய் விடுகிறது. காரணம் அதற்கென மனம் குவியும் வேளை வராததால் தான். அந்த வேளை வந்தால்தான் கடிதமும் வெகு நன்ருக அமைகிறது. இது அன்பினர்க்குமட்டுமே. ஆனல் ஒப்பாரிக் கடிதங்களையோ ஒரு நாளில் ஒரு நூறு போலச் சுலபத்தில் எழுதிவிடலாம்.

## சென்றுபோன நாட்கள்

(542-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 4. ஸ்ரீமான் டி. வி. கோவிந்தசாமி பிள்ளை

விடாமுயற்சியுள்ள தமிழ் நாட்டுப் பத்திராசிரியர்களுள் ஸ்ரீமான் டி. வி. கோவிந்தசாமி பிள்ளை அவர்களும் ஒருவ்ராவர். அவர், 1900-ம்ஞு முதற்கொண்டு நடத்திவரும் "யதார்த்தவசனி" எனும் வாரப் பத்திரிகை மிகச் சிறந்த பத்திரிகைகளுள் ஒன்ருகும். "யதார்த்தவசனி" ஆரம்ப காலத்தில் தஞ்சாவூரினின்றும் தொடங்கிற்றென்னலாம். பின்பு கும்பகோணத்துக்கு மாற்றப்பட்டு அங்கேயே நாளது வரையிலும் நடைபெற்று வருகின்றது. மகா யுத்தத்திற்கு முன்பு இப்பத்திரிகை காலணு வீதம் விற்கப்பட்டது. "ஜனனுகூலன் பேபர் காலணு" என்று விளம்பரப் பலகையுள்ள கடைகளில் "யதார்த்தவசனி காலணு" என்ற விளம்பரப் பலகையையும் அநேகமாய்க் காணும்படியாயிருக்கும். ஜனங்கள் இவ்விரு பத்திரிகையையும் காலணு வீதம் விலைக்கு வாங்குவர். 1900-ம் வருஷத்தில் தென்னுப்பிரிக்கா போயர் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அதில் இந்தியப் பத்திரிகைகளுக்கு யுத்தத்தின் உண்மையான செய்திகள் எட்டுவதில்லை யென்றும், பிரான்சு தேசப் பத்திரிகைகளே உள்ளதை உள்ளபடி வெளியிடுபவைகளென்றும் ஒரு வதந்தி இருந்தது. அதனுல் யுத்தத்தின் உண்மைச் செய்திகளை யறிவதற்காகப் பிரான்சு எல்லையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளையும் வாசிக்க முற்பட்டனர். அந்த வகையில் புதுச்சேரியிலிருந்தும் "புதுவை நேசன்," "புதுவை விநோதன்" என்று இரு தமிழ் வாரப் பத்திரிகைகள் தோன்றி காலணு வீதம் விற்பதாயின. இத்துடன் அன்றன்றைய செய்திகளை அன்றன்றைக்கே தருவேனென்று சொல்லிக்கொண்டு "பை பத்திரிகை" என்ற தினசரிப் பத்திரிகையொன்று ஒரே பைசா விலையில் (ரூ. 0—0—1.) அதாவது ஒரு தம்பிடி விலையில் சென்னையினின்றும் தமிழிலும், தெலுங்கிலுமாகப் புறப்பட்டது. ஆக, ஜனனுகூலன், யதார்த்தவசனி, புதுவை நேசன், புதுவை விநோதன், பை பத்திரிகை இவ்வளவும் கடைகளில் ஆங்காங்கு விற்கப்பட, தினுசுக்கொன்ருக இத்தனை பத்திரிகைகளையும் ஜனங்கள் வாங்கி வாசித்து மகிழ்வாராயினர். பத்திரிகைகளை வாசிக்கவேண்டுமென்ற ஒரு விருப்பம் 1900-ம் வருஷத்தில் நடந்து கொண்டிருந்த போயர் யுத்தத்தின் மூலமாகவே தமிழ் நாட்டு ஜனங்களிடையில் விசேஷமாகப் பரவிற்றென்னலாம்.

"ஜனனுகூலன்" பத்திரிகையின் போக்கு ஒரு தினுசு. "யதார்த்த வசனி" யின் அமைப்பு வேறொரு மாதிரி. "ஜனனுகூல"னின் நடை சுலபமானது. "யதாரத்த வசனி" யின் நடை உயரிய தமிழ் கொண்டது. இலக்கணத்தில் அது எழுதப்படினும் கற்கண்டுபோல் தித்திக்கும் இனிய சுந்தரமான நடையைக் கொண்டது. மிக விரு[illegible] அந்த நடை யிருக்கும். அந்த நடையில் அநுபவ[illegible] உண்டா[illegible] கொண்டிருக்கும். ஸ்ரீமான் கோவிந்தசாமி [illegible] அஞ்சாத சிங்கம். எந்த அக்கிரம சங்கதிகளையும் வெளியிலிழுத்துப் பத்திரிகையில் பிரசுரித்து விடுவார். அதனுல் பின்னுக்கு எத்தனை வியவகாரங்கள் வந்த போதிலும் சரி, அத்தனைக்கும் துணிந்து விடுவார். "யதார்த்தவசனி" யை

சென்னை-600 008 169823

யதார்த்தத்தை விவரிக்கும் வசனியாகவே நடத்தவேண்டுமென்பது அவரது கோட்பாடு. நாளைக்கும் கூட அப்பத்திரிகை அதே கோட்பாட்டி லிருந்து கொண்டு வெளியாகி வருகிறது. "யதார்த்தவசனி" யில் தோன்றுகிற சங்கதிகளிற் பல உண்மையா யிருந்தபோதிலும் கூட, அதிற் சம்பந்தப் பட்டவர்களுக்கு ஆத்திர சிந்தை தோன்றக் கூடுமானதால் வியவகாரத் திற்கு வரும்படியும் இருக்கும். ஆனால் ஸ்ரீமான் கோவிந்தசாமி பிள்ளை "கோர்ட்டு" என்றளவில் நடுங்கி விடும் பத்திராசிரிய கோஷ்டியைச் சேர்ந்தவ ரல்லர். மிக்க தைரியசாலி, சாமர்த்தியசாலி, வியவகார ஞானம் நன்கு தெரிந்தவர், எத்தகையோருக்கும் அஞ்சாதவர். ஆதலின் அவரிடம் எவருக்கும் சிறிது அச்சம் தான். பல வழக்குகள் யதார்த்தவசனியின் மீது வந்திருக்கின்றன. ஆயினும் பத்திராசிரியர் பின்னடையவேயில்லை. வழக்கை முடித்துக்கொண்டு பத்திரிகையை முன்னிலும் உற்சாகமாகவே நடத்தப் புகுவார். அவரது கோபத்திற் கிலக்காகாதிருக்கவும், அவரது தயவைப் பெறவும் விரும்பி "யதார்த்த வசனி"யை வாங்கியவர்கள் பலர்.

ஸ்ரீமான் கோவிந்தசாமி பிள்ளை ஹாஸ்யரசத்தில் மிக்க வல்லுநர். கௌரவமான நடையில் விகடங்கள் எழுதுவதில் மிகவும் தேர்ந்தவர். "ஊர் வம்புகளெல்லாம் விகடத்தில் வந்து விடும். வயிறு வெடித்துச் சிரிக்கும் வண்ணமாய் இருக்கும். "யதார்த்தவசனி" யில் தடவைதோறும் முன்பு விகடத் துணுக்குகள் வெளியாகி வந்தன. பல டாம்பீகர்களின் அக்கிரமங் களை ஸம்பாஷணை வடிவில் ஒரு கதை போன்று தோற்றும்வாறாக வரைந்து ருசிப்பிக்கச் செய்வதில் ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கு அதிக 'சமர்த்து' உண்டு. எல்லாம் அநுபவ மணிகளாகவே இருக்கும். மிளகைப் போல் 'யதார்த்தவசனி' ஒரு சிறிய பத்திரிகையே யாயினும், அறிவு விர்த்திக்கும் ஞானத்தேர்ச்சிக்கும் அது ஒரு நல்ல ஊற்றுக்கேணி யெனலாம். பல கதை களையும் அப்பத்திரிகையில் காணலாம்.

சென்ற இருவருடங்களாக ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தமது "யதார்த்த வசனி"ப் பத்திரிகையை சந்தாவின்றி இனும் பத்திரிகையாகவே மாற்றி யிருக்கிறார். எல்லோருக்கும் விலையின்றி அது கிடைக்கின்றது. பிரதி வருஷத்திலும் ஏப்ரல் மாதத்தில் எழுதிக் கேட்டுக்கொண்டால் அது சந்தா வின்றி வந்து கொண்டிருக்கும். இந்தியாவில் சந்தா இல்லாமல் வெளி யாகும் பத்திரிகை யதார்த்தவசனி ஒன்றே. "யதார்த்தவசனி" தொடங்கி 27-வருஷங்களாகின்றன. அப்பத்திரிகையும், அதன் ஆசிரியரும் புவியில் வெகு காலம் வாழ்க.

### எவருக்கு அதிக பாத்தியதை ?

ஒருவன் ஒரு பெண்ணைத் தன் மனைவி யென்கிறான். அப்பெண்ணையே தன் தாய் என்கிறது குழந்தை. இருவரில் எவருக்கு அதிக பாத்தியதை? குழந்தைக்குத் தான். இவன் இன்னொரு பெண்ணைத் தன் மனைவியாகக் கொள்ளலாம், குழந்தையோ வேறொருத்தியைத் தன் தாயாக எக்காலத்தும் கொள்ளமுடியாது.

# கவிதா விலாஸம்



(546-ம் பக்கத் தொடர்ச்சி.)

## மதுரகவி

இவர் இராமநாதபுரத்தில் முத்திருளப்ப சேதுபதி மஹாராஜாவின் ஸமஸ்தான வித்வானாக விருந்தவர். இவர் ஒரு காலத்தில் அரச னிடம் விடை பெற்றுக்கொண்டு தம்முடைய ஊருக்கு வந்த சமயத்தில் ஒரு நாள் இவரைச் சர்ப்பந் தீண்டி விடவும், என்னென்னவோ மந்திரமும் வைத் தியமும் செய்தும் எதுவும் பிரயோஜனப் படாமல் இறந்து போய்விட்டார். இவர் மரித்த செய்தியைச் சேதுபதிக்குத் தெரிவிக்க, அவர் அதிக துயரங் கொண்டு அந்நாட்டின் வழக்கப்படிக்கு ஸமஸ்தானத்திலிருந்து மரியாதைகளை யனுப்பிவிட்டு ஸமஸ்தான வித்வானின் அகால மரணத்தைக் குறித்து ஸதா நினைத்து வியாகூலப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்த சமயம் வடதேசத்திலிருந்து இராமேஸ்வர யாத்திரையாகப் புறப்பட்டு வந்திருந்த சில பைராகிகள் இந்த வித்வான் இருக்கும் கிராமத் தில் ஒரு மடத்தில் வந்து தங்கியிருந்தனர். அவர்கள் வித்வானின் பிரேதம் செல்வதைக் கண்டு அதைக் கீழே வைக்கும்படி செய்து நாடி முதலியவை களைப் பரீக்ஷித்து பிராணன் இருப்பதாகத் தெரிவித்து அதற்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்து உயிர்ப்பித்தனர். பின் இவருக்காக மயானத்தில் இடப்பட்ட கட்டைகளில் ஏதோ சிலவற்றை வைத்துத் தகனம் செய்து விட்டுத் தகுந்த பிராயச்சித்தங்கள் நடத்தி வீட்டிற்கு அழைத்து வந்தனர்.

இவர் இறந்த செய்தியை அரசனுக்கு அறிவித்தனரேயன்றி, பிழைத் தெழுந்த விஷயத்தைத் தங்களின் ஸந்தோஷத்தால் தெரிவிக்க மறந்து விட்டனர். அநேக தினங்கட்குப் பின்பு மதுரகவி யரசனைக் காண விருப் புற்று இராமநாதபுரம் வந்தார். இவர் தேகம் முன்போலில்லாமல் தீட்சை முதலியன வளர்ந்தும் மிக்க இளைத்துமிருந்தமையால் இவரது உருவே முற் றும் மாறிப்போயிருந்தது. இவர் அரண்மனைக்கு மதுரகவி வந்திருப்பதாகச் சமாசாரம் தெரிவித்தார். இதைக் கேட்ட அரசன் பின்னும் அதிகமான வருத்தம் கொண்டு, நம்முடைய மதுரகவி வந்திருந்தால் எவ்வளவு ஆநந்தமாக இருக்குமென்று துக்கித்து, வந்த வித்வானைப் பார்க்கத் தமக்கு இஷ்டமில் லாமல் மந்திரியிடம்சொல்லி அவருக்குத் தகுந்த மரியாதைசெய்து அனுப்பும் படி கூறிவிட்டார். இதைக்கேட்ட மதுரகவி தாம் அரசர்பிரானையே பார்க்க வந்ததாகவும், வேறு யாரும் அல்லவென்றும், தாம் ஸமஸ்தான வித்வானென் றும் சொல்லி யனுப்பினர். அதைச் செவியேற்ற அரசன் பெரிதும் வியப் புற்று அவரை வருமாறு தெரிவித்து அவர் வந்ததும் உருவ விகாரத்தால்

கண்டு கொள்ளமுடியாமல், நீர் யாரென்றுகேட்க, அதற்கு அவர், நான்தான் உங்களுடைய மதுரகவி யென்ன, அதற்கு அவர் என்னுடைய மதுரகவி இறந்துபோய் விட்டாரே யென்ன, அதற்கு அவர் நான் தான் இறந்தவன் என்று சொல்ல, அரசன் இறந்தவர் எப்படி வந்தீரென்று கேட்க, அதற்கு மதுரகவி சொல்லிய கவி :—

"பிலத்த புகழ் முனிவரையும் அசுரரையும்
ஊரிலுள்ள பேரை யெல்லாம்
அலைத்துவிடும் எமதரும ராஜனவ
னென்னையழைத்து நீயாரேன்ன,
நிலைத்தபுகழ்ச் சேதுபதி முத்திருளப்
பன்வாசல் வித்வானேன்றேன் ;
மலைத்தவனும் உனதுநகர்க் கேகென்றான்
யானுமிங்கு வந்திட்டேனே."

என்று கூறவும், அரசன் திடீரென்று ஆசனத்தைவிட்டுக் குதித்து அவரைக் கட்டித் தழுவிச் சங்கதி என்னவென்று கேட்க, அதற்கு அவர் நிகழ்ந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சொல்ல, அரசன் கேட்டு ஸந்தோஷித்தராய், இவ்வளவு கஷ்டத்தில் எதற்காக இப்பொழுது வந்தீரென்று வினவினர். அதற்கு மதுரகவி தங்களைத் தரிசிக்காமல் பிரிந்திருக்க மனது தாளாமல் வந்தேனென, அதற்கு அரசன், நல்லது, ஊர்போய்ச் சேர்ந்து தேகம் குணப் பட்ட பின்பு வாருங்கள் என்று சொல்ல, அதன்பின் பத்தியத்திற்காகப் பழய நெல்வேண்டு மென்று மதுரகவி கேட்க, உடனே கணக்கப்பிள்ளையை வர வழைத்து நூறு கலம் பழய நெல் வித்வானுக்குக் கொடுக்கும்படி ஒரு சீட்டு எழுதுமாறு உத்திரவிட, அவ்விதமே எழுதி முடித்து வாசிக்கும்போது நூறுக்குப் பதிலாக இருநூறு என்று எழுதி யிருந்ததை அரசன் கண்டு கைப்பிசகாக அவ்விதமானதைக் 'கிருக்கு' என்று சொல்ல, மதுரகவி 'நிறுத்து' என்று சொல்லலும், அரசன் ஏன் 'நிறுத்து' என்று சொல்லு கிறீர் என்ன, அதற்கு மதுரகவி கூறிய கவி :—

"உருக்குமணி வேந்தருக்கும் கள்ளருக்கும்
நீதிதப்பி யொழுகினோர்க்கும்
கிருக்குவரச் செயுந்துரைநீ பாவாணர்
ஓலைதனில் 'கிருக்'குண்டாமோ ?
வருக்கைமணி சேதுபதி மாநிலத்தை
யொருகுடைக்கீ ழாளவந்த
நிருக்குமணி முத்திருளப் பாஅருளப்
பாவுனது நிருபந்தானே."

இந்தக் கவியைக் கேட்டு உடனே அரசன் பழய நெல் நூறு கலமும், புது நெல் நூறு கலமும் கொடுக்கும்படி சொல்ல, அதற்கு மதுரகவி, ஆம் மன்னவா, பழய நெல்லை யுண்பதற்குள் புதிது பழயதாய் விடும், அப்படியே செய்யுங்கள் என்று கூறினாராம்.



இவர் பின்பு ஒரு காலத்தில் கூறிய கவி :—

"முன்னப்பனைச் சிவன் காத்ததுபோன்
முத்தமிழ்க் கிரங்கி
வின்னப்படாதேனக் காத்தருள்வாய்
இந்த மேதினுக்குள்
உன்னப்பன் ஈசுரமூர்த்திக்குக் கீர்த்தி
யுண்டாக்கி வைப்பாய்
என்னப்பனே யப்பனே யப்பனே
முத்திரு ளப்பனே."

II

## ஸ்ரீ ஹரிக் கண்ணி

(504-ம் பக்கத் தொடர்ச்சி.)

58. அனந்த பத்மநாபா வடியேன்ற னெஞ்சிற்
றினக்குடியாய்த் தங்கிச் சேவைதா ஸ்ரீஹரியே.

59. தென்னனந்தை வீற்றிருக்குந் தேவாதி தேவாவுன்
பொன்னடியை யான்போற்றப் புத்தியருள் ஸ்ரீஹரியே.

60. மணிக்குன்னத் தேவே யென் வல்வினைகள் யாவுந்
துணித் துனதரு ளுதவத் தோன்றுவாய் ஸ்ரீஹரியே.

61. நீலமேகத் தேவா நீ நல்வர மெனக்குச்
சாலவுதவி செய்து தற்காப்பாய் ஸ்ரீஹரியே.

62. நாரசிம்ம நாதாவோ நானுனையே தஞ்சமென்றேன்
பாரவினை தீர்த்துன் பதந்தருவாய் ஸ்ரீஹரியே.

63. புண்டரீ காக்ஷாவுன் பொற்பாதமே பணிந்தேன்
கண்டார் நகைக்காமற் காத்தருள்வாய் ஸ்ரீஹரியே.

64. அண்டர் தொழுந்தேவா வாதிமத்தியாந்தரகிதா
வண்டனுனுலும் வந்தாள்வாய் ஸ்ரீஹரியே.

65. என்றன்குடும்பத் திறந்தோர்கள்யாவருக்கும்
உன்றன் வைகுந்த முவந்தருள்வாய் ஸ்ரீஹரியே.

66. கன்றினுக்காப் போலிரங்கிக் காப்பதுனது தொழில்
என்று முன்பாலேற்ப தெனது தொழில் ஸ்ரீஹரியே.

67. சிந்தையை நல்லாற்றிற் செலுத்தறிவி லாமையவாய்
நொந்து மெலிந்தேனெ னேன்புகுறை ஸ்ரீஹரியே.

68. எக்குறையு நீக்கி யெனை யீடேற்ற நீ யிருக்க
அக்குறையா னெண்ணலறி வீனமன்றோ ஸ்ரீஹரியே.

69. தாயின்வயிற்றிலெனைத் தானே கருச்சேர்த்துச்
சேயாய்ச் சகத்திற் செனிப்பித்தாய் ஸ்ரீஹரியே.

70. செனிப்பித்தநாயேனைச் சீரழியச் செய்தல்
குனிப்புக்கியல்போ குறித்தறிவாய் ஸ்ரீஹரியே.

71. நீகருதிப் பார்வையிட்டு நின்சேயைக் காவாக்கால்
யார் கருதுவார்களுனை யல்லாமல் ஸ்ரீஹரியே.

72. பாவவுலகிற் படைத்தானய னெனையுந்
தாவிப் பிழைப்பதற்குன் றுளடைந்தேன் ஸ்ரீஹரியே. (தொடரும்)

தஞ்சை. சங்கு. இராமசாமி நாயுடு.

---

தைரியம் என்பதென்ன? நமது பூர்வ ஜன்ம கர்ம சேஷத்தால் இந்த ஜன்மத்தில் விளையுந் துன்பங்களைப் பொறுமையோ டேற்று அனுபவிப்பதே தைரியமாகும். எவ்வித கஷ்டமானாலும் அதைப் பரிகரிக்க அல்லது தைரியமாய் அநுபவிக்கப் பிரயத்னப்பட வேண்டுமேயன்றி ஒவ்வொரு வீடாய் நுழைந்து தனக்கு நேர்ந்த துயரத்தைச் சொல்லிச் சொல்லிப் பெண் பிள்ளைகளைப் போல் வியஸனப்படலாகாது.

---

கோபமானது கர்வம், மௌட்டியம் ஆகிய இரண்டு துர்க்குணங்களால் செய்யப்பட்டது. பிறருக்கு உபத்திரவமுண்டாக்க வேண்டுமென்ற துரெண்ணத்தால் கோபமுண்டாகிறது. மூளையில் ஒருவித கலக்கமுண்டாவதால் கோபம் ஜனிக்கிறது. கோபநேரத்தில் நியாயத்தையும் அதனால் நேரும் பாதகங்களையும் அறிய முடியாது.

### நீண்ட பேச்சு!

மனைவி உள்ளே மயக்கமாய் வீழ்ந்து தத்தளிப்பில் கிடக்கிறாள்! வெளியில் பேசுவதற்கு வந்தவரோ தமது அன்பால் வெகு நீண்ட பேச்சில் இறங்கி நெடுநேரம் பேசியபடி இருக்கிறார். வீட்டுக்காரனோ உள்ளே மனைவியை அடிக்கடிபோய்ப் பார்த்துவிட்டு வந்து கேட்டபடி நிற்கிறான். அதை யறியாதவராய் வந்தவர் இன்னும் பேசிச் செல்கிறார். வீட்டுக்காரனுக்கோ இரண்டிடத்திலும் அவஸ்தை. வந்தவர் அன்பு முதிர்ச்சியோடு பேசுகிறார். அதைத் தள்ளவுங் கூடவில்லை. உள்ளே யிருக்கும் நிலையோ இந்தப் பேச்சைக் கேட்கவும் நேரமில்லை. உள் நிலையைத் தெரிவித்து வந்தவரை அனுப்பிவிடவோ மனமும் இல்லை. இதற்கு முடிவு எப்படி? தமது நீண்ட பேச்சில் அதைக் கேட்பவருக்கு அவ்வளவுக்கு நேரமிருக்கிறதா வென்று பார்ப்பதுமேல். அல்லது நேரமுள்ள சமயத்தில் பேசுவது மேலானமேல்.




## பெண்மணிகளின் பூர்வ உன்னதம்

---

கிரேக்க ஜாதியாரும், ரோம ஜாதியாரும் பெண் மக்களை மேனாட்டார் இப்போது கௌரவத்துடன் பாராட்டும் அவ்வளவு உன்னத நிலையில் வைத்து வந்ததாக சரித்திர வாயிலாய் அறியக் கிடைக்கவில்லை. கிரேக்க தேசத்துக்கு சிரோரத்நமாக விளங்கிய ஆதன்ஸ் (Athens) நகரத்தின் பிரசித்த காலமாகிய பெரிக்கிளியன் (Periclan age) காலத்திலும் அத்தேசத்து மாதர்களை ஆடவர்கள் அடிமைகள் போலப் பாவித்து நடத்தி வந்ததாக சரித்திர பூர்வமாகத் தெரிய வருகிறது. மேலும், ஸ்திரீகளின் விஷயத்தில் தொன்று தொட்டு மிகவும் மரியாதை செலுத்தி வந்ததாகச் சொல்லும் ஐரோப்பிய ஜாதியார், 1-வது ரோம நாட்டுச் சக்ரவர்த்தியான 'ஷார்லமேன்' தனது தப்பு வாதத்தை மாற்ற முயற்சித்த தனது சொந்த ஸகோதரியைக் கோபங் கொண்டு ஓங்கிக் கன்னத்திற் புடைத்ததை நினைத்துப் பார்த்துக் கொள்ளட்டும்!

***

சரிவர ஆராயப்புகின், தற்போது மேனாட்டார் ஸ்திரீகளுக்குக் காட்டி வரும் பக்தியானது கீழ்த் தேயத்தாரைப் பார்த்துப் படித்துக்கொண்டதாகும். பிரான்சு தேசத்தின் தென்பாகத்திலே 'மூர்' ஜாதியார் ஐரோப்பாவுக்கு மத்திம காலம் (Mediaeval ages) என்று கருதப்படும் காலத்துக்கு முன்பாகவே அவ்விடங்களில் போய் வியாபித்துக் கொண்டதாக சரித்திரத்தில் காண்கிறோம். அவர்கள் அக்கால முதற் கொண்டே வீரத்தனம் குடிகொண்ட ஜாதியாரென்றும், ஸ்திரீயைத் தெய்வமாக மதித்துப் போற்றி வந்தார்களென்றும் சரித்திரத்தில் பிரசித்தி. அவர்களில் சிறந்த ஆடவர்கள் ஸ்திரீகளால் மதிக்கப்பட்டால் தங்களுக்கு இந்திர பதவி கிடைத்ததாக எண்ணி மகிழ்வராம்.

***

மேற்குறித்த 'மூர்' ஜாதியாரிடமிருந்தே "பிரடரிக்" II (Frederick II) என்னும் பிரசித்திபெற்ற மேனாட்டு அரசன் ஸ்திரீகளை உயர்வாக மதித்தலாகிய நற்குணத்தைக் கற்றுக்கொண்டான். பின்பு அது ஐரோப்பா முழுவதிலும் பரவியது. இவ்வாறாக ஸ்திரீயின் நிலைமை ஒருவாறு உயர்த்தப்பட்டாலும் கல்வி விஷயத்திலே அப்போது எதும் முயற்சி நடக்கவில்லை. இங்கிலாந்திலும் 18-ம் நூற்றாண்டு வரை ஸ்திரீகள் கல்வியில் பரிச்சயம்

பெற்றதாகவேயில்லை. அப்பால், மேரி காட்வின் (Mary Godwin) என்னும் மாது ஸ்திரீகளின் பரிதாப நிலையை யுணர்ந்து பெண்களுக்குப் "பிரதம கல்வி" புகட்ட வேண்டுமென்று மிகவும் பிரயாசைப்பட்டு வந்தாள். கடைசியாக 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப முதலாகக் கல்வி மிகவும் பரவி அவர்கள் மேன்மை பெற்றுத் துலங்கி வருவதைக் காண்கிறோம். ஆசியாக் கண்டத்து ஸ்திரீகள் இவ்விதமின்றி மிகவும் புராதன காலத்திலேயே கல்வி பெற்றுப் பிரகாசித்தனர். இதற்கு எத்தனையோ உதாரணங்கள் தரலாம்.

***

எகிப்து தேசத்து நாகரீகமானது தற்காலத்திலே ஒருவாறு மங்கிப் போய்விட்ட போதிலும், கிரேக்க—ரோம நாகரீகங்களுக்கு எவ்வளவோ முற்பட்டதென்பது சரித்திர சம்மதம். அவ்வளவு பழய காலத்திலும் கூட எகிப்தியர்கள் ஸ்திரீகளைத் தமது கண்ணைக் கருதியும், உயர்ந்த பீடத்தில் வைத்தாற்போல் அன்போடு ஆதரித்தும் வந்ததாக அறிகிறோம். உலகத்திலே முதன் முதல் ராஜ்ஜிய நிர்வாகம் நடாத்திய எகிப்து சக்ரவர்த்தினியாகிய "ஹாட் ஷெஸ்பட்" என்னும் மாது சிரோமணி தன் பிரஜைகளின் நன்மையை நாடி அரசுபுரிந்து பெருமை யெய்தியது சரித்திரப் பிரசித்தம். மேலும், "ஷேக்ஸ்பியர்" நாடகங்களின் வாயிலாகவும், மற்றும் கதைகளிலேயும் கதா நாயகியாய் விளங்கும் "கிளியோபட்ரா" (Cleopatra) என்ற எகிப்து தேசத்து ராணியின் உலகப் பிரசித்தியையும் நாம் கேட்டிருக்கிறோம்.

***

இது நிற்க, இனி நமது புண்ணிய பூமியாகிய பாரதநாட்டு மாதர்களின்பண்டைக்காலத்து நிலைமையையும், அவர்களது அறிவாற்றல் முதலியவற்றையும் ஆராயப் புகுவோம். ஹிந்துக்களுக்கு ஒழுக்கமுறைச் சட்டகர்த்தாவாகிய "மநு" எழுதுவதாவது :—

"ஸ்திரீகள் கௌரவத்துடன் போற்றப்படுகிற நாட்டிலே, தெய்வங்கள் பிரஸன்னமாயிருக்கும்" என்கிறார். ஹிந்துஸ்தானிலே, (அதாவது இந்தியாவின் வட பாகத்திலே) ஸ்திரீ வகுப்பினர் ஸ்வாதீனமும். மற்றும் பல ஸ்வதந்திரங்களும் பெற்று விளங்கினார்கள் என்பதற்கு ஆக்ஷேபமே கிடையாது. மேலும், மாதரார் தம் ஆடவருடன் கூடி யாதொரு கூச்சமும் ஸ்வாதீனத் தாழ்வுமின்றி சந்திரிகை காலங்களிலே கடற்கரையோரத்தில் நிலாச்சோறு உண்டு வெகு உல்லாசமாய் இருந்து வந்தார்களென்பதைக் காவியங்களைப் படித்த மாத்திரத்தில் நாம் அறிகிறோம். மேலும், ஸமஸ்கிருத நாடகங்களிலே ஸ்திரீகளது ஸ்வாதீனத்தைப்பற்றியும், அவர்கள் தமது புருஷர்களின் நண்பர்களோடு சகஜமாய்ப் பேசவுமாகிய ஸ்வாதந்திரியங்கள் பெற்றிருந்தார்களென்றும் காணக் கிடைக்கிறது.

***

இனி, அவர்களது அறிவாற்றல் சிறப்பைச் சிறிது எடுத்துரைப்போம். சித்திரம் எழுதுதல், காவியமியற்றல்—மற்றும் சாஸ்திர பரிசீலனை முதலிய வித்தைகளிலே அவர்கள் அழியாப் புகழ்பெற்று ஜ்வலிக்கின்றார்கள். கணிதத்திலே மகா நிபுணம் பெற்று விளங்கிய "லீலாவதி" யின் பெயரை யார்தான் அறியார்? லீலாவதியின் பிதா புராதன காலத்திலே வான சாஸ்திரத்தில் மகா மேதாவியாக மதிக்கப்பட்டார். தனது தந்தைக்கு வான சாஸ்திர ஆராய்ச்சிகளிலே பெரும் உதவிபுரிந்தது மல்லாமல், ஒருவாறு



அவரைவிட மேன்மை பெற்றும் துலங்கினாள். *"மாலதீ மாதவம்" என்னும் ஸமஸ்கிருத நாடகத்திலிருந்தும் ஸ்திரீ புமான்கள் தமது ரூபலாவண்யத்தைப் பரஸ்பரம் போற்றித் தத்தம் உருவச் சிறப்பைச் சித்திரத்தில் எழுதிக் களித்து வந்தார்களென அறிகிறோம். இம்மாதிரியான விஷயம் நாம் லோக சரித்திர முழுவதிலும் கேட்டதில்லை.

***

ஹிந்துக்களுடைய ஞான பொக்கிஷமாகிய வேதங்களின் பற்பல சந்தஸுகளும், "ரிக்கு" களும் ஸ்திரீ ரிஷிகளால் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மிதிலா நாட்டு அரசராகிய ஜனகர் ஒரு வித்துவ சபை கூட்டியபோது, அந்த சபையிலே 'கார்கி' என்ற மாது யாக்ஞவல்கிய ரிஷியுடன் வைதீக விவகாரங்கள் புரிந்ததாக சரித்திரங்களில் பிரசித்தம். அக்காலத்திலே அநேகம் விவகார வாதங்களிலே ஆடவர் முன்பும் தமது அபிப்பிராய முடிவுகளை வெளியிட்டதாக அறிகிறோம். தென்னிந்தியாவிலும் ஸ்திரீகள் பின்வாங்கின நிலைமையி லிருக்கவில்லை. ஔவை முதலான தமிழ் நாட்டு ஸ்திரீகள் கவிதா சிருஷ்டியாலும், மற்றும் அநேக விஷயங்களிலேயும் மேன்மை பெற்றுப் புகழ்ச்சி யெய்தினார்களென அறிகிறோம். புறநானூறு எனும் தமிழ் நூல் வெகு காலத்திற்கு முன் இயற்றப்பட்டது. அதனில் வீரத் தாய்மார்களின் சரித்திரங்கள் மலிந்துள்ளன.

***

மத்திய இந்தியாவிலே ராஜ்ஜிய நிர்வாகம் புரிந்த "அகல்யாபாய்" "ராணி பவானி"—மற்றும் அநேக ஸ்திரீகளையும் உதாரணமாக எடுத்துக் காட்டலாம். "ஸூயமாட்ஸூ" (Suyematsu) என்ற ஜப்பானிய ஆசிரியர் தமது "Risen Sun" என்ற புஸ்தகத்திலே ஜப்பானிய ஸ்திரீகளின் நிலைமையையும் மேன்மையையும் நன்றாய் எழுதியிருக்கிறார். அதிலே "ஸாமுராய்" என்ற ஜப்பானிய வீர ஜாதியாரோடு ஸ்திரீகளும் சேர்ந்து போர்க்களத்தில் வீரம் காட்டியதாகக் கூறப்படுகிறது. மேலும், கவி இயற்றுவதிலும், கதா சிருஷ்டியிலும் மற்றும் வித்தைகளிலும் தேர்ந்த அநேக ஸ்திரீகள் ஜப்பானில் உண்டென்றும் தெரிய வருகிறது. சீன தேசத்தாரிடமுள்ள கல்வி ரஸத்தை முதன் முதல் 9-ம் நூற்றாண்டில் பருகியது ஜப்பானிய ஸ்திரீகளே.

***

மேற் கூறியவற்றினின்றும் பண்டைக்காலந் தொட்டே ஜப்பானிய ஸ்திரீகளும் உயர்பதவியில் இருந்து வருவதைக் காண்கிறோமல்லவா? இவ்வாறாகக் கீழ்தேசத்து ஒவ்வொரு நாட்டிலும் புராதனகால முதற்கொண்டே ஸ்திரீகள் உயர்வான பதவியை அநுபவித்து ஆடவரை யொப்ப மேன்மை பெற்றுப் பிரகாசித்தார்கள் என்பதற்குத் திருஷ்டாந்தங்கள் பல எடுத்துக் காட்டல் இயலும். கீழ் நாட்டு ஸ்திரீகள் உயர்ந்த ஸ்வாதீனம் முதலியன பண்டைக்காலந் தொட்டே பெற்று விளங்கினதை இனியேனும் அறிந்து கொள்வதோடு, இந்த ஆசாரங்களெல்லாம் தாம் கீழ் நாட்டாரிடமிருந்து கற்றுக் கொண்டதென்றும் மேனாட்டார் அறியக்கடவர். அத்துடன் இன்

---

*"மாலதீ மாதவம்" என்ற ஸமஸ்கிருத நாடகம் "பிரஜாநுகூலன்" பத்திரிகையில் மார்ச்சு மாத முதற்கொண்டு தொடர்ச்சியாய் வெளி வரும்.

ஒரு குறிப்பு :—பெண்களை வெகு கேவலமாகத் தாழ்த்திப் பேசும் நம்மவரிற் சிலர் இதைப் படித்தறிந்த பின்னரேனும் தமது ஊத்தைவாயைப் பொத்திக்கொள்ளக் கடவர். பெண்மணிகளின் வயிற்றிலே உதித்துவிட்டு, வேறு திக்கின்றி அப்பெண்மணிகளிடமே பாலை யுண்டு வளர்ந்து நெடுமரமாய்விட்ட பிறகு, அப்பெண் தெய்வங்களையே தாழ்த்திப் பேசுதலென்பதினும் கேடுகெட்ட-நன்றி மறந்த துரோகச் செய்கை வேறில்லை.

" பெண்மை வாழ்கென்று
கூத்திடுவோமடா."
" பெண்மை வெல்கென்று
கூத்திடுவோமடா."

(ஸ்ரீபாரதி.)

---

அயோக்கியர்களான தூர்த்தர்கள் மிகு யோக்கியர்கள் போன்றும் நடித்து, ஸபா மத்தியில் முதல் தாம்பூலம் பெற்றுக்கொள்ளுமாறு கௌரவிக்கப் படுகின்றார்களே அதுதான் யாவற்றினும் பெரிய ஆச்சரியம்!

---

ஸ்திரீயாகட்டும், புருஷனாகட்டும் ஸதா மனோத்ஸாகத்தோடும் பார்ப்பவர்களுக்கு லக்ஷணமாயும் சுசி முதலிய ஆசாரமும் கைக்கொண்டிருக்கக் கோருகிறோம். இதற்காகவே நமது முன்னோர்கள் பிராத ஸ்நானம், நித்ய கர்மானுஷ்டானம், ஸூர்ய நமஸ்காரம், உஷத்கால பூஜை முதலியவற்றை ஏற்படுத்தினர். நதிக்குச் சென்று ஸ்நான முதலியவற்றைச் செய்து சாஸ்திர ரீதியாக நடத்தி வந்தால் மோக்ஷ ஸுகமும் கிட்டும்.

---

பரிசுத்தமாயும், நிர்மலமான காற்று வருமிடமாயுமுள்ள அரசமரம் இருக்கும் இடத்தைச் சுற்றுவதிலும் பிரயோஜனமில்லாமலில்லை. வைத்திய சாஸ்திர ரீதியாய் ஸ்திரீகளின் கர்ப்ப கோசம் முதலியவைகள் கெட்டிருப்பின் இந்தப் பிரதக்ஷிணத்தில் குனிந்து நிமிர்ந்து நமஸ்கரிப்பதால் உள்ளுக்குள்ளிருக்கும் அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஸரியான ஸ்திதியில் சேர்ந்துவிடும். இதனால் ஸ்திரீகள் கர்ப்பவதிகளாகக் கூடும். சாஸ்திர ரீதியாகவும் பகவானையே தியானம் செய்து பிரதக்ஷிணம் வருவார்களாகில் அவர்களின் இஷ்டார்த்தமும் நிறைவேறும். இவற்றை யுன்னிப்பாராமல் முன்னோர்களின் கார்யங்களைப் பரிஹஸிப்பது சரியல்ல.

### அண்டைவீட்டுச் சண்டை

அண்டைவீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சிதான். ஆனால், உன் வீட்டிலும் பிறகு சண்டை நடந்து அண்டைவீட்டுக்காரன் குளிர்ச்சியோடு அதைப் பார்க்கவும் நேர்ந்துவிடலாம். ஒருவன் ஒரு விவகாரத்தில் அகப்பட்டுக் கொண்டபோது சிரிப்பாய் உல்லாஸப்படுபவன், அடுத்த நிமிஷத்தில் தானும் ஒரு வியவகார சங்கடத்தில் சிக்கிக்கொண்டு அதன் பலனை உடனே காண்பான். சிரிப்பெல்லாம் பிறகு திகைப்பாய் விடும்.

## உடன்கட்டை யேறுதல்

1820-ம் வருஷத்திய பத்திரிகை யொன்றிலிருந்து பின் வரும் விஷயம் எடுக்கப்பட்டது.

"1820-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ம் தேதி மாலை ஒரு மனுஷி புருஷனின் பிரேதத்தோடு உடன்கட்டை ஏறி எரிந்த பயங்கரத்தைக் கண்ணாரக் கண்டேன். இந்த மனுஷி வேளாளப் பெண். இக்கிரியை முடிக்க மாஜிஸ்திரேட்டால் உத்தரவு வரப்பெற்றவுடன், பந்து ஜனங்கள் பிரேதத்தைப் பாடையில் வளர்த்தி விதவையை உட்காரவைத்து மசானத்திற்குச் சுமந்துகொண்டு போனார்கள். கும்பு திரண்டு கூடிப்போயிற்று. போகப்போக விதவை நெற்பொறி தூவினாள். தரையில் நாலடி ஆழத்திற்கு ஒரு குழி தோண்டி அதன் வாயை ஐந்தடி குறுக்களவிருக்கும்படி விசாலமாக்கி, விறகு கட்டைகளும் எளிதில் எரியத்தக்க சருகு கட்டைகளும் அடுக்கியிருந்தது. அடுத்திருந்த ஒரு குளத்தில் விதவை நீராடிய பின், பிரேதம் கட்டையில் வைக்கப்பட்டது. இந்த சமயத்தில் விதவை ஸ்மரணை தப்பி அடி எடுத்துவைக்க வசமற்றிருந்தாள். பந்துக்களில் ஒருவன் அவளை எடுத்துக்கொண்டு போய் மீளவும் நிறுத்தினான். நிறுத்திய பொழுது, தன் வஸ்திரத்தில் ஒரு துண்டு கிழித்து எட்டுப் பருவமுடைய தன் ஜேஷ்டப் புத்திரனுடைய இடுப்பிற் சுத்தினாள். அதன் பின் ஆடவர்கள் ஸ்திரீகள் அநேகர் பாதத்தண்டை விழுந்து அவளை முத்திசெய்தார்கள். அவள் அங்குள்ள ஸ்திரீகளைப் பார்த்து, என்னைப்போல நீங்களும் விதவையாகும்பொழுது தீரங்குன்றிப் பின்னிடைந்து நிற்காமல், நான் செய்தபடி உடன்கட்டை ஏறுங்கள் என்று எச்சரித்தாள். அதன் பின், சிறுவன் ஒரு பந்தம் கொளுத்திக் கட்டையில் வைத்தான். அது பற்றி எரிந்தது. விதவை மூன்றுந்தரம் வலசாரி வந்து, தீ நன்றாய் சுவாலிக்கக் குங்கிலியம் போட்டு, ஆநந்த வேகத்துடன் அதில் பாய்ந்து பிரேதத்தின் அருகில் உட்கார்ந்தாள். ஒரு நிமிஷத்தில் அவளை சுவாலை பற்றிக்கொண்டது. அவள் உட்காரவும், ஜனங்கள் தீ வளர்க்கும் தன்மையுள்ள பல வஸ்துக்களை அதில் போட்டார்கள். அவயவங்கள் வெந்து விழுமளவும் விதவை கைதட்டி ஆர்ப்பரித்தாள். தீவிரமாய்ப் பிராணன் போய்விட்டது. தேகமோ உட்கார்ந்த வண்ணம் வெந்து உரு அழியாதிருந்தது. நெருப்பிற் கருகியதினால், அது கருங்காலியிற் செய்த பிரதிமைபோலிருந்தது. இத்தனை சித்த நிர்ணய பலமுள்ள சக்தியை எப்போதும் கண்டதில்லை யென்று கூடிய பந்து ஜனங்கள் எக்களித்தார்கள். அச்சமயத்தில் இச்சடங்குக்கு ஆஜராகி நின்றுச் செய்வித்த போலீசு அதிகாரி, இதற்கு முன் இவ்வாறு உள்ளத் தெளிவும் அடக்கமும் தீரமும் உள்ளவர்களாக மனைவியர் உடன்கட்டை ஏறியதைத் தான் பார்த்ததில்லை என்றார். திகில் அளவற வருத்திய இந்தக் கோரக் காட்சியை நான் எள்ளளவும் மறவேன். அதைப் பார்க்கப் பார்க்க என் கண்கள் இரண்டும் பதைத்து, நெஞ்சு துடித்தது. முதலில் நான் அவளைக் கண்டபொழுது அவள் முகம் பித்தேறியிருந்தது. பின்பு அவள் பதைப் பற்றுச் சாந்த சித்த முள்ளவளானாள். அப்பால் வசம்தப்பி இளைத்துப்

பதறினாள். ஆனால், விறகுக்கட்டை யடுக்கிப் பிரேதம் வைத்துத் தீமூட்டிய பின், அவள் அதைச் சுற்றி வரும்பொழுது பதைப்பின்றி அடங்கிச் சாந்தமயமா யிருந்தாள். அவளுக்குப் பருவம் 50. பிள்ளைகள் மூன்று பெயர். ஆண் இரண்டு, பெண் ஒன்று. இறந்த விதவையை இவ்வாறு இறக்க எவரும் பலாத்காரம் செய்யவில்லை. பின்பு போலீசு அதிகாரிகள் கும்பைக் கலைந்து போகும்படி சொன்னார்கள். நெருப்பு பற்றி எரிந்த பொழுது, விதவை வேதனை பொறுக்க ஆற்றாமல் வெளிப்படுவாளானால் அவளை ஒருவரும் தடுப்பதில்லை. பந்துக்கள் கணவனுடன் இறந்துபோக வேண்டுமென்று ஆசைப்படவில்லை. இறந்த விதவை ஏழை. அவளுடைய மைந்தர்களை அவளுக்கு நெருங்கிய சுற்றத்தார் காப்பாற்ற உடன்பட்டனர். யாவரும் மதாவேசரா யிருந்ததினால் இவ்வித குரூர கிருத்தியங்கள் விதிப்படி நடப்பது ஆச்சர்யமல்ல.”

எந்தக் கொடுமையான அக்கிருத்தியமும் வழக்கமாய்ச் செய்யப்படுவதில் அதன் கோரம் வெளிப்படாமல் ஸர்வ சாதாரணமாய்ப் போய்விடுகின்றது. இப்பொழுதும் ஹிந்துக்களுக்குள் உயர் வகுப்பினரிடையில் வழக்கமா யிருந்துவரும் கணவனை யிழந்தோரின் சிரமுண்டிதம் தகுந்த செய்கை-கொள்கை என்றும் எண்ணப்படுவதில்லை, உயர் வகுப்பினரிடையிலேயே ஒரு சாரார் சிரமுண்டிதம் செய்வதில்லை. அதனால் அவர்கள் நெறிதப்பிப் போவதுமில்லை. அது ஒரு நிந்தனையாகக் கொள்ளப்படுவதுமில்லை. வழக்கப் பைசாசமாகிய குப்பைக் கூளங்கள் வெகு உயரத்திற்கு மேடிட்டு உயர்ந்துபோக, உத்தம லக்ஷ்யங்களும், சாஸ்திராதாரங்களும் அடங்கிய கோபுரமானது தாழ்ந்தபடியி லிருந்து தவிக்கும் காலமாய்ப் போய்விட்டது. இதற்கு மீட்சி எப்போதோ!

---

நாட்டிய சாஸ்திரம் பூர்வத்தில் கௌரவமா யிருந்தபடியால் அநேக அரசர்களுங்கூட தங்கள் குமாரிகளுக்கு நர்த்தனத்தையும் பழக்கி வைத்தனர். உதாரணமாக, விராடராஜன் மகளுக்கு அர்ஜுனன் நர்த்தனத்தைக் கற்பித்து வந்தது எல்லோரும் அறிந்த விஷயமே.

## சிலர் போக்கு!

திடீர் என்று நகைகளைப் போடுவர், பல வாங்கித்தருவர், பல பல விருந்துகள் படைப்பர், எவ்வளவோ செலவிடுவர். ஆனால் ஒரு பட்டணம் விஷயத்தில் வெகு அழகாய்க் கணக்கு பார்ப்பர் 0-7-9 தானா இருக்கிறது. இன்னும் காலணா பாக்கி என்று கேட்டுப் பெற்றுக்கொண்டுவிடுவர். குதிரையை இரையாகக் கொடுத்துவிடுவர். அதன் பழைய கடிவாளத்திற்குமட்டும் விலை கேட்டுப் பெறுவர். ஒரு அரையணா தரப் பின்வாங்கிவிட்டு, அடுத்த நிமிஷத்தில் கால்படி நெய்யை ஊற்றி ரவாலட்டு செய்து இதை நீ சாப்பிடு என்பர். இப்படிச் சிலர் போக்கு!

# தானே சிந்தித்து உணர்தல்

மேஸ்டர் ஓபி என்னும் ஆங்கில கனவான் சித்திர வேலையில் மிகத் தேர்ந்தவர்; ஒரு சிறுவன் அவரைப் பார்த்து வர்ணங்களை என்னமாகக் கலக்குகிறீர்களய்யா என்று கேட்டான்; அதற்கு அவர் “புத்தியினாலே” என்று பதில் சொன்னார். இதை இப்படிச் செய்யவேண்டியது, அதை அப்படிச் செய்யவேண்டியது என்று சொல்லிச் சித்திர வேலையின் கிரமங்களையும் முறைமைகளையும் எடுத்துக் காட்டாமல் ஒரே வார்த்தையாகப் “புத்தியினாலே” என்று மாத்திரம் அவர் குறிப்பாய்ச் சொன்னது சரியான உத்தரம். அதைக் கேட்ட சிறுவனுக்கு அந்த உத்தரம் அவனைத் தூண்டி விட்டு, சித்திர வேலையை எப்படிச் செய்தால் நன்றாயிருக்குமென்று சிந்திக்கும்படி பண்ணும்.

அந்தக் கேள்வியையே மற்ற சித்திர வேலையாட்களிடம் கேட்டால், அவர்கள் இன்னின்ன வர்ணம் இப்படிப்பட்டது, வர்ணங்களைக் கலக்கும் விதம் இன்னது என்று சொல்லத் தொடங்குவார்கள். வர்ணம் வைக்கிற வழியைக் காட்டினாலும் காட்டுவார்கள். இவ்வளவு கற்பித்துக் கொடுப்பினும் தானே சிந்தித்துணருகிற அறிவை அவர்கள் வளர்க்கும்படி செய்கிறவர்களா யில்லை. தாங்கள் போன பாதையில் அச்சிறுவனையும் போகும்படியே வழக்கப்படுத்தி விடுவார்கள். மேலுக்கு அவன் தானாகவே ஆலோசனை செய்யும் பயிற்சி இல்லாமற் போய்விடுகின்றது. அவனது அறியாமையும் தெளிவுபடாது. ஓபி என்பவர் புத்தியினாலே என்று சொன்னதனால், தக்ஷணமே விஷயத்தின் மூலாதாரத்தைப் போய்ப் பற்றும்படியான யோசனையை அச் சிறுவனுக்கு அது உண்டாக்கக் கூடியதா யிருந்தது.

ஸர். ஜோஷுவா ரெய்னால்ட்ஸ் என்பவர் ஒரு சித்திரத்தைப் பார்த்து விட்டு, எல்லாம் சரிதான், வர்ணமும் திவ்யமாய் இடப்பட்டிருக்கிறது; ஆனால் ஒன்று மட்டும் குறைவாய் இருக்கிறதென்றார். அந்த ஒன்று இல்லாததால் அந்தப் படம் சிலாக்கினைக் குரியதாகவில்லை.

ராஜரீகக் கல்விச்சாலையில் உபாத்தியாயராக இருந்த எட்டி (Etty) என்பவரை ஒரு மாணவன், இதை எப்படிச் செய்கிறது? என்று கேட்டான். அதற்கு அவர் “நீ முயற்சி பண்ணு” என்றார். இன்னொருவன், இதற்கு என்ன அர்த்தம்? என, அதற்கு அவர் “நீ யோசித்துப் பார்” என்றார்; அப்போது அவன், பார்த்தேனே யென, “மறுபடியும் பார்” என்று வற்புறுத்தினார். இது அவர்களைத் தானாகச் சிந்தித்துணரும் அப்பியாஸத்தைக் கைக்கொள்ளும்படி தூண்ட, அவர்களும் அவ்விதமே ஆராய்ந்துணர்ந்து அறிவில் வல்லவராயினர்.

ஓபி என்பவருடைய கருத்து என்ன? அவர் கூறிய புத்தி என்பதென்ன? ஸர். ஜோஷுவா ரெய்னால்ட்ஸ் என்பவர் ஏதோ ஒன்று என்றாரே, அதென்ன? ஒரு விஷயம் தெரியாவிட்டால் உடனே யாரை

யாகிலும் கேட்டு அறிந்து கொள்வதை விட்டுவிட்டு, நாமாக யோசித்து யோசித்துப் பலதரம் தவறிப்போய்க் கடைசியாய்த் தெரிந்து கொள்வதில் விசேஷ மென்ன? ஒரு விஷயம் பிறர் காட்டி நாம் பார்க்க நேரான சுலப மார்க்க மிருக்க, நாமாக ஏன் பார்த்துப் பார்த்து அவஸ்தைப் படவேண் டும்?

மனோசக்தியும் அறிவும் இல்லாவிட்டால் மற்ற எவ்வித குணங்க ளிருந்தும் பிரகாசித்த தில்லை யென்பது ஓபியின் அபிப்பிராயம். வேலைக் குச் சிறப்பையும் மேன்மையையும் கொடுப்பது அறிவும் மனோசக்தியும் என்பது ஸர். ஜோஷுவா ரெய்னால்ட்ஸின் கருத்து. அவர் ஒன்று என்று முன்பு சொன்னதும் இது தான்.

மனோசக்தியாவ தென்ன? அறிவாவ தென்ன? எத்தனையோ தொழில்க ளிருக்க, ஏதோ ஒன்றின் பேரில் மனதுக்கு இயல்பாக ஒரு நோக்கம் உண்டாகி அதிலேயே சாய்வது மனோசக்தி. எந்தத் தொழி லில் எவனுக்கு எந்த சக்தி யிருக்கிறதோ, அவன் அதில் சாமர்த்திய முள்ளவனாகக் கூடும். எந்த வேலைக்கும் இந்த சக்தி மட்டும் இருந்தால் போதாது. அறிவும் இருக்கவேண்டும். அறிவாவ தென்ன? இந்த அறிவுதான் எல்லாவற்றையும் இணைத்துச் செம்மைப்படுத்தி ஒழுங்காய் நடத்தும் கருவி; மனோசக்தியும் ஆளுந் திறமையும் இதற்குண்டு; எல்லா வற்றிற்கும் உறுதியையும் திருத்தத்தையும் கொடுக்கும் சக்தி இதைச் சேர்ந்தது.

புத்தியைப் பலப்படுத்துகிற தெப்படி? அறிவைத் தீவிரமாக்குகிற தெப்படி? மனோசக்தியை எழுப்புகிற தெப்படி?—என்று கேட்கலாம். இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமான மனதை நாலுவழியாலும் போஷித்து உறுதி பண்ணுவித்துச் சீர்ப்படுத்தி சரியான ஸ்திதியில் வைத்துக் கொள்ள வேண்டும். அதெப்படி?

கேவலம் புஸ்தகத்தை வாசித்து அம்மட்டோடு நில்லாமல், தாவர சங்கம சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், மிருகங்களைப் பற்றிய சாஸ்திரம் முதலியவைகளின் சூட்சுமங்களைப் பரீக்ஷை செய்து அறிய வேண்டும். நானா விதமான வர்ணங்கள், ரூபங்கள், பொருள்கள், அளவுகள் முதலிய காட்சிகளைச் சிறு பிராயமுதல் உற்றுப் பார்த்து அப்பியசிக்க வேண்டும். விந்தையான பொருள்களைச் சேர்த்து வைக்கவும், அவைகளைப் பார்த்துப் படம் எழுதவும் பயிலவேண்டும். எந்த வேலையிலும் முழு மனதோடும் பிரவேசிக்கும்படி பாலிய முதல் கற்கவேண்டும்.

சகலத்துக்கும் கல்வி முக்கியமான அடிவாரம். படிப்பு என்றால் சும்மா புஸ்தகத்தைப் பார்த்துப் படித்து விடுவதல்ல. சிறந்த புஸ்தகங் களின் நுட்பங்களைத் தேர்ந்தெடுத்துக் கிரகிக்க வேண்டும். உற்சாகமுள்ள ஒரு கதையைப் படித்தால், பந்தடித்தல்—குன்றின் மேலேறுதல் முதலிய விளையாட்டுகளில் எவ்வளவு ஆநந்தம் உண்டாகுமோ அவ்வளவு ஆநந்தம் உண்டாகும். முயற்சியினால் நாடிக்குத் தீவிரமும் இரத்தத்துக்குப் புஷ்டி யும் உண்டாகி, வாயில் இன்பநீர் சுரந்து கைகால்களுக்கு உரம் உண் டாகும். குன்றேறுவதில் பாறைகள் முதலிய இடையூறுகள் இருப்பது



போல, படிப்பதில் தடுமாற்றங்கள் உண்டானாலும் கடைசியில் இன்ப முண்டு.

ஒரு புஸ்தகத்தைப் படிப்பதென்றால், அதிலுள்ள விஷயங்களை விழுங்கி ஜீரணம் செய்து கொள்ளவேண்டும். மலையின்பேரில் நாமே ஏற வேண்டுமே யன்றிப் பிறர் தூக்கிக்கொண்டு செல்ல இயலுமோ? கீழே ந்து கொண்டே மலையுச்சியின் பேரில் இருந்தால் இன்னதின்னது தெரியுமென்று படத்தில் அறிவதனால் நமக்காவ தென்ன? ஆகையால் நாமே கஷ்டப்பட்டு ஏறி அங்கே போய்ச் சேர்ந்து ஆநந்த மடையவேண் டும். எவ்வளவு கற்றாலும் நாமே சிரமப்பட்டுக் கற்று நமக்குச் சமயத்துக்கு உதவும்படியாகத் திடப்படுத்திக் கொள்ளுகிற கல்வியே உண்மையான வித்தையாகும். தானே சிந்தித்துப் பார்த்து ஆராய்வதிலிருந்து கல்வியின் ஊற்றானது பெருகத் தொடங்குகின்றது.

---

மனிதன் தேவதா விஷயமான பக்தியைச் செலுத்தும் பொழுது அவன் வார்த்தைகள் கான ரூபத்தோடுகூடி யிருக்கும். பூர்வத்தில் ஸங்கீத சாஸ்திர வித்வாம்சர்களான ஆரண்ய வாஸிகளும் முனிகளும் யோகிகளும் கூட பகவானைப் பிரார்த்தனை செய்யும் காலத்தில் பக்திரஸமானது கான நதியாய்ப் பெருகி யோடும்படி மதுரமான ஸங்கீதத்தை உபயோகித்து வந்தார்கள். இந்த தயாநிதிகள் உலகத்திலுள்ள மனிதர்கட்காக ஸங்கீத கிரந்தங்களை அநேகமாய்ச் செய்திருக்கின்றனர்.

***

தனக்கு உண்டாகிய தற்கால சங்கடத்தைத் தனது வாழ்நாளில் இனிவரும் ஒரு காலத்தில் நீக்கி, இப்பொழுது உண்டாகிய குறையைத் தீர்த்து, சௌக்கியமாக இருக்கலாமென்று எண்ணுவது யாவருக்கும் இவ்வுல கில் இயல்பு. இந்தக் குணமுள்ளவன் க்ஷேமத்தை யடைகிறான். ஏனெனில் தான் நோக்கிய நற்காலத்தை எதிர்ப்பார்த்து, அதற்கு தக்கபடி இப்பொழுது நடந்து, அதைப் பெறவேண்டியதற்கான முயற்சி செய்கிறான்.

பிறர் சொல்வதை நம்பாதே.

ஒரு மனஸ்தாபத்தில், மனஸ்தாபப் பட்டுக்கொண்ட வன் இன்னின்ன சொன்னானென்று பிறர் உன்னிடம் சொல்வதை நம்பாதே. அவர்கள் அவன் வார்த்தையை மாற்றியும் திரித்தியும் அத்தோடு பல கூட்டியும் உனக்கு ஆத்திரம் மூண்டுவிடும் வழியில் தயாரித்து உன்னிடம் கொட்டுவர். எனவே, நீயே அந்த மனஸ்தாபப் பட்டவ னிடம் நேரில்போய் என்னென்ன பேசினாய் என்று கேட்டுத் தெரிந்துகொள். அப்போதுதான் உண்மை தெரியும். அது வரை எவர் சொல்லையும் மதிக்காதே. நீ அவனைக் கேட்க வெகுநாளானாலும் அதுவரை பொறுத்திருக்கப் பார்.

# விநோதக் களஞ்சியம்

## எங்கள் அப்பன் வீட்டுச் சொத்தா?—

ராமன் :—இன்று ஞாயிறு. தபாலாபீஸ் இல்லை. உன்னிடம் அணாக்கு ஸ்டாம்பு இருக்கிறதா?

ரங்கன் :—ஸ்டாம்பைத் தந்தால் அதன் காசைத் தருவதில்லை. பிறகு தருகிறேனென்கிறார்கள். ஏதோ இலவசமாய் எனக்கு வந்ததுபோல் அவர்களுக்கு எண்ணம். அதனால் ஸ்டாம்பு வாங்கி வைப்பதையே விட்டு விட்டேன். தபால் ஆபீஸ் எங்கள் அப்பன் வீட்டுச் சொத்தா—என்ன?

***

## மாப்பிள்ளையின் பொறுமை :—

முந்தன் :—புது மாப்பிள்ளையே! நீர் எருமைக்கடா போல் இருக்கிறீராமே! உம்மை மணக்க வந்துள்ள பெண் ஜன்னல் பக்கம் உம்மைப் பார்த்து விட்டு இப்படிச் சொன்னாள்.

மாப்பிள்ளை :—அவள் என்னை மணந்ததும் சீக்கிரம் புஷ்டியாகி என்னைப் போலவே ஒரு எருமைக் கடா மாதிரி ஆகிவிடுவாள். அதற்குப் பிறகு என்னை அப்படிப் பேசமாட்டாள்!

***

## வாய் உபசாரம் :—

கமலம் :—என்ன கோமளா! நீ அவரை அவ்வளவு பிரியமாக வா வேற்று ஊர் க்ஷேமம் விசாரித்தாயே. அவரும் கபடற்று எல்லாம் சொல்லத் தொடங்கினாரே. அப்படி யிருக்க, பாதி பேச்சிலேயே எழுந்துபோய் விட்டாயே, ஏன்?

கோமளம் :—ஊரிலிருந்து வந்ததற்கு ஒப்புக்கு ஏதாவது பேசியாகவேணுமே என்று க்ஷேமங்கள் கேட்டேன். அவரோ நெடுகத் தன் சங்கதிகளைச் சொல்லத் தொடங்கிக் கொண்டார். முடிகிற வழியைக் காணோம். இதென்னடா சனியன் என்று எழுந்துவிட்டேன்.

***

## எல்லா கணக்கும் வந்துவிட்டது :—

கணிதத்தை எவ்வளவோ பாடுபட்டுக் கற்பித்தும் பையனுக்கு மனதில் பதியாததைக் கண்ட உபாத்தியாயர், யார் என்ன கேட்டாலும் 20-என்று சொல்லி விடு என்று போதித்துப் பெற்றோர் முன்பாகப் பையனைப் பரீக்ஷை செய்விக்கிறார் :—

உபாத்தியாயர் :—அடே மந்தமதி 14-ம் 6-ம் சேர்ந்து எவ்வளவு?

மந்தமதி :—இருபது?

உபாத்தி :—12-ஐயும் 8-ஐயும் கூட்டினால் மொத்தம் என்ன?

மந்தமதி :—20.

உபாத்தி :—35-ரூபாயில் 15-ரூபாய் போனால் எவ்வளவு?

மந்தமதி :—20.



உபாத்தி :—4-ஐயும் 5-ஐயும் பெருக்கு.

மந்தமதி :—20.

உபாத்தி :—பத்து பேருக்கு 200 பழமானால் ஆளுக்கு எவ்வளவு?

மந்தமதி :—20.

பெற்றோர் :—போதும், போதும், எல்லா கணக்கும் வந்துவிட்டது. ஊக்குத் திருஷ்டி தோஷம் நேரும். பரீக்ஷையை நிறுத்துங்கள்!

***

## நீங்கள் என்னைவிடப் பரம துஷ்டரா?—

குமாரன் :—என் அப்பா, உங்களின் கருத்த ரோமமெல்லாம் இப்படி வெளுப்பாகிறது?

தந்தை :—உன் ஒவ்வொரு துஷ்டச் செயலும் என் ஒவ்வொரு ரோமத்தை நரைக்கச் செய்கிறது. நீ இப்படித் துஷ்டனானாயே என்ற கவலையே என் நரைப்புக்குக் காரணம்.

குமாரன் :—அப்படியானால் பாட்டனாருக்குத் தலை முற்றும் நரைத்துப் போயிற்றே. நீங்கள் என்னைவிடப் பரம துஷ்டரா யிருப்பீர்களாக்கும்!

***

## விகடோபதேசம் :—

சிஷ்யன் :—இந்த உலகத்திலே எப்படிப் பிழைக்கிறதென்று தெரியவில்லை, சொல்லவேணும்.

குரு :—இதுதானா பெரிது? சோறு தின்றால் பிழைக்கிறாய். பட்டினி கிடந்தால் சாகிறாய். அகப்பட்ட இடத்தில் உண்டுவிட்டு எப்பம் விடுவதே சரி. உன் பசிப்பாடு தீர்ந்ததும் எவர் எப்படிப் போனாலும் அப் பக்கம் எட்டிப் பாராதே.

சிஷ்யன் :—அது அல்ல சாமி, நம்மைப் படைப்பித்த கடவுள் எவரோ இருக்கிறாராமே? அவருக்குப் பயப்படவேணுமாமே.

குரு :—ஆமப்பா, அதன் ரகசியார்த்தம் இதுதான். கடவுள் என்றால் கடம்+உள் என்று பொருள். கடம்=பானை, உள்=உள்ளே, அதாவது பானைக்குள்ளே. பானைக்குள்ளே என்ன இருக்கும்?—சோறு; அந்த சோறு தான் கடவுள். அதை அதிகமாய்த் தின்றாலும் கொல்லும், கொஞ்சமாய்த் தின்றாலும் கொல்லும். 'சாஸ்திரமும் சகல புராணமும் சோற்றுப் பானைக்குள்ளே சுருங்கியதே அம்மானை' என்ற பாட்டைக் கேட்டதில்லையா?

### கடிதமும் முகமும் காட்டிவிடும்.

எவர்கள் களங்கமுள்ளவர்களென்றும், எவர்கள் நிர்மல மனத்தினரென்றும், அவரவர்களின் மனப்பான்மையை எவ்வளவு மறைத்தாலும், எப்படியோ அவர்களின் கடிதமும் முகம் உடனே காட்டிக் கொடுத்துவிடுகிறது.

## மூளையின் விருத்தி

**ம**னதுக்கு ஆதாரமாகிய மூளையானது சிறு வயதுள்ள பெண்களுக்கு, அதே வயதுள்ள ஆண் பிள்ளைகளைப் பார்க்கிலும், தீவிரமாய் விருத்தியாகின்றதென்றும், அவ்விருத்தியானது கொஞ்சகால மட்டுமே யென்றும் அறிவுடையோர் பலரது யூகம். உதாரணமாக, 6-வயது முதல் 13-வயது வரையில் சிறுமிகள் சிறுவர்களைப் பார்க்கிலும் பாடங்களைப் படிக்கிறதிலும், ஞாபக சக்தியிலும், உபாத்தியாயர் சொல்வதைக் கிரகிக்கும் தன்மையிலும் அதிகக் கூர்மையுடையவர்களா யிருக்கின்றனர்.

***

**12**-வயது முதல் 15-வயது வரையுள்ள காலம் மிகவும் முக்கியமானது. இக்காலத்தில் பெண்கள் தன்னடக்கத்தைப் பின்பற்றுவதோடு தங்கள் கருத்தை வெளிப்படுத்தா திருக்கவும் விரும்புகின்றனர். சிறுவனுக்கோ சரீர பலம், பராக்கிரமம், மனோதைரியம் அறிவு முதலியவை வளரும். மனதுக்கும் தேகத்துக்கும் மிகுந்த ஐக்கிய முண்டென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. மனதில் உண்டாகும் வேற்றுமைக்கேற்பத் தேகத்திலும் வேற்றுமையான குறிகள் இந்தக் காலத்தில் தோன்றும். இப்பருவம் தருணப் பருவத்துக்குச் சமீபித்து நிற்பதால் முக்கியமானதென்று யாவரும் கவனிக்கின்றனர். கல்வியின் பயனால் விசேஷித்த திருத்தங்களை விளைவிப்பதற்கு இதுவே தருணம்.

***

**ப**தினாறுவது வயது கழிந்த பின்பு, வாலிபனிடத்தில் தர்க்கிக்கும் படியான யுக்தியும், மிகுந்த ஆழமாய் யோசிக்குந் தன்மையும், ஞாயமின்னதென்று விவகாரங்கள் மூலமாய்க் கண்டு பிடிக்கும் சக்தியும் தோன்ற ஆரம்பிக்கும். பெண்களிடத்திலோ வென்றால், மிகுந்த கூர்மையான புத்தியும், பிறருடைய சித்தத்தை ஒரு கணத்தில் அறியத் தக்க சக்தியும், கபடச் சித்தமும் விளையும். பெண்கள் தம் மனதில் ஒரு தீர்மானத்தைப் பண்ணிக் கொள்ளும் போதே அதற்கேற்ற ஞாயங்களையும் சேகரியாதது பெண்களுக்குரிய குணம். ஞாயம் வெளிவாராததால் அவர்களுடைய தீர்மானத்தைப் பிடிவாத குணத்தில் சேர்த்து, பெண்களுக்குப் பிடிவாத குணம் விசேஷமாயுண்டென அனைவரும் கூறும்படியாய் விட்டது. துன்பம் வருங்கால், மனோ தைரியத்தோடு பொறுத்துக் கொள்வதற்கும், பல காரியங்களிலும் ஆண் மகன் தனது உற்சாகம், வீரியம் முதலிய குணங்களைச் செலுத்துவதற்குமே ஆண்மைத் தனமென்று பெயர். இக்குணங்கள் ஒரு பெண்ணிடத்திலிருந்தால் அவள் விசேஷமாய் எண்ணப்படுவாள். யாவும் மூளையின் வளர்ச்சிக்கால் விருத்தி தேய்வின் தன்மைக் கேற்ப நிகழுகின்றது.

**முதலத்யாயம் ஸம்பூர்ணம்.**

P. R. Rama Iyar & Co., Printers, Madras.

169823
சென்னை 600 008

முதல் வருடம்!!

வெளிவந்திருக்கும் பஞ்சாங்கங்கள் எல்லாவற்றுக்கும்
மேலானதும் 84 பக்கங்களுமடங்கிய

# "பிரபவ" வருஷத்திய
# நந்த குணபோதினி"

அற்புத சர்வ முகூர்த்த திருக்கணித

## பஞ்சாங்கம்

கவர்ன்மெண்ட் காலேஜ் பஞ்சாங்கம் இயற்றிவருகிற

பிரம்மஸ்ரீ **P.** துரைஸ்வாமி அய்யங்கார்

அவர்களால் இப்பஞ்சாங்கம் பிழையற கணிக்கப்பட்டது.

இது வரையில் பஞ்சாங்கமே பார்க்கத் தெரியாதவர்கூட சுலபமாய் எமது பஞ்சாங்கத்தைப் பார்த்து நாள், திதி, நக்ஷத்திரம், ருது, அயனம், யோகம் முதலானவை மணி நிமிஷங்களுடன் அறிந்துகொள்ளலாம். ஜோதிடர்களுக்கும் மற்ற சாமான்ய எல்லா பொதுஜனங்களுக்கும் வேண்டிய எல்லாவித விஷயங்களும் அடங்கி இருக்கின்றன. ரூபா இரண்டே விலையுள்ள உலகப் பிரசித்திப்பெற்ற எமது "ஆங்கில ஆசான்" உபாத்தியாயரில்லாமல் இங்கிலீஷ் பாஷையை எழுதவும், படிக்கவும், பேசவும், கற்றுக்கொள்ள சிறுவர்களுக்கும், மாதர்களுக்கும், தொழிலாளர்களுக்கு, எவ்விதம் உபயோகமுள்ளதா யிருந்துக்கொண்டு வருகிறதோ, அதே மாதிரி புரோகிதருடைய உதவியில்லாமல் நமக்குப் பிரதிதினமும் வேண்டிய எல்லா விஷயங்களையும், அறிந்துகொள்ள வேண்டுமென்றே எமது பஞ்சாங்கத்தைப் புதுவிதமாகத் தயாரித்து வெளியிடலானோம்.

ஒவ்வொருவரும் மார்க்கெட்டில் இருக்கும் வேறு பஞ்சாங்கங்களை வாங்கியிருந்த போதிலும் எமது பஞ்சாங்கத்தையும் ஒன்று வாங்கி அவைகளில் காணப்படாத விஷயங்களை எமது பஞ்சாங்கத்தைப்பார்த்து அறிந்து கொள்ள வேண்டுகின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பஞ்சாங்கம் விலை | அணா | 0 | 3 | 0 |
| (6) அரை டஜன் | ரூபா | 0 | 9 | 0 |
| (12 ஒரு டஜன் | ,, | 1 | 2 | 0 |

ஒரு பஞ்சாங்கம் வேண்டுவோர் 0-3-0 தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

வியாபாரிகளுக்கு மேற்கண்ட விதம் கமிஷன் கொடுக்கப்படும். வேண்டுவோர் அடியில் குறிப்பிட்டிருக்கும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால முதலியார்,**
302. கங்கசாலைக் தெரு. மதராஸ்.

# பத்திராசிரியரின் விஞ்ஞா.

**செந்தமிழ்ச் செல்வர்காள்!** காலம் அறிந்து பெ
ளுடைய முன் பணமாகிய கருணை மழை நீரால்
போதினி" யென்னும் அரும்பயிர் உர்பவித்து அதியுன்ன
லிருப்பதை நாம் விநய பூர்வமாய்த் தெரிவித்துக் கொள்கின்றோ பெ
குணபோதினி" பத்திரிகைக்கு இம்மாதத்துடன் ஓர் ஆண்டு, அனேக
இந்த முதல் வருஷத்திற்குச் சந்தா செலுத்தி ஏற்றுக்கொண்டதால
இனி வரும் புது வருஷத்திலும் பிரீதியுடன் ஆதரித்து, பத்திராசிரியரின்
உத்தம முயற்சியைப் பயன்பட வைத்து, இப்பத்திரிகையைத் திவ்யமாய்
நடைபெறச் செய்தோமென்ற புகழை நீங்கள் அனைவரும் அடையவேண்டும்.
பகவான் ஆஸ்திக புத்தியையுடைய விவேகிகளாகிய உங்களின் ஹிருதயத்
தில் "ஆநந்த குணபோதினி" யின் மீதுள்ள அபிமானத்தை என்றும் நிலை
பெறச் செய்யுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இப்பத்திரிகையின் ஒரு வருஷத்திய பன்னிரு ஸஞ்சிகைகளினுடைய
பெருமையை நன்கறிந்த உங்களுக்கு, இனி வரும் இரண்டாவது வருட
முதற்கொண்டு, "ஆநந்த குணபோதினி" எவ்வளவு சிலாக்கியமாய் நடை
பெறு மென்பதை எடுத்துரைப்பது அனாவசியமாயினும், முன்னிலும் பதின்
மடங்கு அற்புதமாயும் முதற்தரமாயும் நமது "ஆநந்த குணபோதினி"
ஜ்வலிக்கு மென்பதை மட்டும் இங்கு குறிப்பாய்த் தெரிவித்துக்கொள்ளு
கின்றோம்.

நமது காலத்தை இப்பத்திரிகைக் கென்றே பெரும்பான்மையும் செல
விடுவதாய் நிச்சயித்துக்கொண் டிருப்பதுபோல், இதன் அதிபரும் இப்பத்திரி
கைக்காகத் தம்முடைய காலத்தை முற்றிலும் உபயோகிக்கத் தீர்மானித்துக்
கொண்டிருப்பதால் வெகு சிரத்தையோடும் உன்னதமாக இனி நடத்தப்
படும். பல பல திருத்தி, புதியன புகுத்தி பாங்குபடுத்தப்பெறும். அழகிய
சித்திரப்படங்கள் இனி அடிக்கடி பிரசுரமாகும். ரஸமான நூதன கதை
களும், மதுரச் சுவை மிகுத்த நவநவமான நானா விஷயங்களும் முன்னிலும்
அதிகமாகி, இதைப் படித்து வரும் சந்தாதாரர்கள் யாவரும் உள்ளம் களிக்கு
மாறு இப்பத்திரிகை நடந்தேறி வரும்.

ஆதலின், அன்பர்காள்! நீங்கள் யாவரும் இந்தப் பங்குனி
மாத ஸஞ்சிகையைப் பெற்றதும், உடனே இரண்டாவது வருட
சந்தாவை மணியார்டரில் அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.
ஏப்பிரல் மாதம் 10-ம் தேதிக்குள் சந்தாவை அனுப்பி விடும் நேயர்
கட்கெல்லாம் நமது "பிரபவ வருஷத்திய ஆநந்த குணபோதினிப்
பஞ்சாங்கம்" ஒன்று இனாமாகத் தரப்படும். மேற்குறித்த தேதி
கடந்து அனுப்புவோருக்குப் பஞ்சாங்கம் கிடைக்க மாட்டா. அன்
னோர் மூன்று அணா விலை கொடுத்துப் பெறவேண்டும். மணியார்டர்
செய்ய சௌகரியப் படாத நேயர்கள் வி. பி. மூலமாக இரண்டாவது
வருட சந்தாவைச் செலுத்தி விடுமாறு வேண்டுகிறோம். பகவான்
உங்கள் எல்லோருக்கும் மங்களத்தைத் தந்தருள்வாராக.